# இந்து தருமம் 2013



## இந்து மாணவர்சங்கம்
## 2013, 2014
## பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

# இந்து தருமம் - 2013

இந்து மாணவர் சங்கம் - 2013 / 2014
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# Hindu Dharmam - 2013

Hindu student's Union - 2013/ 2014
University of Peradeniya, Peradeniya.

8122(P)
Arch

**காப்பு**

முப்புரம் எரிசெய்த அச் சிவன்
உறை ரதம் அச்சது
பொடி செய்த -அதிதீரனுக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

நூல் : இந்து தருமம் : 2013
இதழாசிரியர்கள் : இ.லவன்
ச.பார்த்தீபன்
வெளியீடு : இந்து மாணவர் சங்கம் 2013 / 2014
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
பிரதிகள் : 300
அட்டைப்படம் : இ.பிரதீசன்
தாள் : 70g/m2 (இந்தோனேசியா)
அச்சுப்பதிப்பு : தேவி Printers
140/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
021 5100467

Title : Hindu Dharmam 2013
Editors : L. Lavan
S.Partheepan
Published By : Hindu Student' s Union 2013/ 2014
University of Peradeniya
Peradeniya
Copies : 300
Cover Image : R.Piratheesan
Paper : 70g/m2 (Indonesia)
Printed By : தேவி Printers
140/1, Manipay Road,
Jaffna
Deviprinters@live.com
www.deviprinters.com
021 5100467

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**பேராதனை உறைந்து பேணி**
**நம்மைக் காப்பதற்கு**
**கூரான வேல் தாங்கும்**
**குறிஞ்சிக் குமரனுக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் இந்த மலரைப் பற்றி

பழமையும் பெருமையும் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்திலே இறைவன் திரு வருளால் 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்து மாணவர் சங்கமானது அருள்மிகு குறிஞ்சிக்குமரன் ஆலயத்திலே ஆன்மீகச் செயற்பாடுகளை வளர்த்து மனித நல்வாழ்வுக்கு சிறந்த பலமாகக் கருதப்படும் ஆத்மபலத்தை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. இந்துக்களின் பாரம்பரிய கலை, கலாசாரங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக உழைத்து வரும் இந்து மாணவர்கள் சைவ நாற் பாதங்களின் வழி நின்று சமய, சமூக பணிகளை செவ்வனே செய்து வருகின்றனர்.

ஆலயத்திலே சிரமாதனம், பூஜை ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் போன்ற சரியைத் தொண்டுடன், தம்மால் இயன்றளவு கிரியைத் தொண்டுகளையும் ஆற்றிவரும் இந்துமாணவர்கள் கல்வி கற்கும் காலத் திலே இறையர்ப்பணமாக தமது கடமைகளைச் செய்வதன் மூலம் அவர்கள் யோகவழியினையும் பின்பற் றுகின்றார்கள். அறிவுசார் நூலாக 'இந்து தருமம்' நூலினை ஆண்டு தோறும் வெளியீடு செய்வதன் மூலம் சைவ நெறியினையும் பின்பற்றுகின்றனர்.

'அறம்' என்ற சொல்லின் வரையறையை தாண்டி 'தர்மம்' என்ற வடசொல் அதற்குரிய தமிழ் வடிவம் 'தருமம்' ஆகும். எனவே 'இந்து தருமம்' எனும் போது அதன் பெருமை மேலும் அதிகரிக்கின்றது. இம்முறை வெளிவரும் இந்நூலானது ஐம்பத்து நான்காவது மலராக வெளி வருகின்றது. இம் மலரிலே வாழ்த்தியல், கட்டுரையியல் ஆகிய இரண்டு இயல்கள் காணப்படுகின்றன. வழமை போலவே இம்முறை வெளிவரும் இம் மலரும் இந்து சமயக் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்வதற்கு ஒரு தோணி போலவும், மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு ஏணி போலவும் அமையும் என்பது எமது நம்பிக்கை.

ஆக்கங்கள் அளித்தோருக்கும், இதழ் அழகுற வெளிவர பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இம் மலரிலே ஏதாவது குறைகள் காணப்படின் அவற்றைப் பெருமனத்துடன் பொறுத்தருளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். நிறைவுகளையும், புகழினையும் குறிஞ் சிக் குமரன் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

நன்றி

இதழாசிரியர்கள்

**இ.லவன் (பொறியியற் பீடம்)**

**ச.பார்த்தீபன் (விஞ்ஞான பீடம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவர்கள் (இ.வ ) : க.பிரதீஸ்வரன், சி.வினோஜ், பேராசிரியர்.சாந்த ஹேனநாயக்க(பிரதி உபவேந்தர்), பேராசிரியர்.அதுல சேனாரத்ன(உபவேந்தர்), திரு.வ.தர்மதாசன், திரு.ந.அகிலன், கலாநிதி.த.சிவானந்தவேள், ப.கௌசிகன்

நிற்பவர்கள் (இ.வ ) : பா.நிர்விகலா, து.கஜன், K.தனஞ்ஜெயன், வே.துவாரகன், க.டனிஸ்ரன், சி.கஜந்த், கு.அபிராம், செ.கார்த்திகன், பே.குகநாத், சி.நிரோசன், ந.யசோதரன், இ.லவன், தி.ரமணன், கு.சிந்துஜன், பா.சாரங்கன், பா.புவிதரன், க.ஹோமிலன், சு.கஜரதன், ச.பார்த்தீபன், ஸ்ரீ.சுபாங்கன், து.வேணுஜா.

படத்தில் இல்லாதோர் : க.கனகதுர்க்கா, த.நித்தியரூபன், மெ.குகேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## வாழ்த்தியல்


1. ஆலய பிரதம குருவின் ஆசியுரை i

2. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி ii

3. இராமகிருஷ்ணமிஷன் வழங்கிய ஆசிச் செய்தி iii

4. பெருந்தலைவர் நூலிற்கு வழங்கிய வாழ்த்துச் செய்தி iv

5. பெரும் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி v

6. குறிஞ்சிக் குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழுத்தலைவரின் வாழ்த்துச்செய்தி vi

7. இந்து மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துச்செய்தி vii


## கட்டுரையியல்


8. விநாயகர் வழிபாடு - அறிவியல் நோக்கில் தோப்புக்கரணம் 01

9. நான்கெழுத்து அரங்கேற்றம் 04

10. குறிஞ்சிக் குமரன் கோவில் ஒரு சூழல் பகுப்பாய்வு 08

11. அருள் வேண்டும் குமரா.... 21

12. இந்து மதத்தில் வெற்றிலையும் சந்தணமும் 23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தமிழர் பாரம்பரிய மருத்துவம் 25

14. அர்த்தமுள்ள இந்துமதம் 32

15. தைப்பூசத் திருநாள் 35

16. இந்துசமயமும் நவீன பிரபஞ்சக் கொள்கையும் 36

17. உருத்திராட்சம், மஞ்சள், துளசி 39

18. பாரதி கவிதைகளில் வேதாந்தம் 40

19. தமிழர்களின் தனித்திறமை தஞ்சைப் பெருங்கோவில் 46

20. ராஜயோகம் 49

21. பௌத்தமும் நான்கு ஆரிய சத்தியங்களும் 50

22. கருமங்களும் செயற்பாடுகளும் 56

23. துளசியின் மகத்துவம் 57

24. மருத்துவ நோக்கில் மதம் 59

25. காப்பது விரதம் 61

26. தமிழர் பண்பாட்டில் உழவர் திருநாளாம் தைத்திருநாள் 64

27. விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து 67

28. கோமாதா இந்துக்களின் குல மாதா 68

29. நகைச்சுவையிற் சிறந்த தமிழ்ப்புலவர் காளமேகம் 72

30. சைவப் பண்பாட்டில் கோலக் கலை 75

31. நீயலால் வேறு யார் துணை 77

32. சிந்தனைத் துளிகள் 79

33. சூரிய வழிபாடு 80

34. மாற்றொத்திசைவு 82

35. இந்து மாணவர் சங்கத்தின் ஆண்டறிக்கை 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதமகுருவின்

# ஆசி உரை

உடம்பினை இருப்பிடமாகக் கொண்டு உயிர் விளங்குவது போன்று, ஆலயத்தை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டவன் விளங்குகின்றார். ஆலயத்தை ஒரு மனித வடிவமாகக் கொண்டால் கர்ப்பக் கிருகம் என்பது சிரசாகவும், பாதம் கோபுரம் எனவும் கூறப்படுகின்றது. மற்றொரு வகையில் ஆலயம் என்பதை உடலாகக் கொண்டால் கோபுரம் வாயாகவும் அமைகின்றது. ஆலய வழிபாட்டில் முதல் தரிசனம் 'தூலலிங்கம்' என ஆன்றோர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

இந்த வகையில் எமது கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் குமரனாக அமர்ந்திருந்து, அடியவர்கள் அல்லல் களைந்து உய்விக்கும் பொருட்டு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் குறிஞ்சிக் குமரன் காட்சி தருகின்றான்.

ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும், மனித மனங்களை ஒரு நிலைப்படுத்தி பேரின்ப நிலையை எமக்கு அருளுகின்றன. பல்கலைக்கழக பிரதேசத்தில் இவ்வாறான ஆலயம் அமைந்துள்ளமை போற்றுதற்குரியதாகும். இவ்வாலயத்தை நல்ல முறையில் பராமரித்து சைவமக்களின் ஆன்மீகப் பணிக்கு பணியாற்றும் பல்கலைக்கழக இந்து மாமன்ற மாணவர்களை வாழ்த்துகின்றேன்.

வருடந்தோறும் சிவராத்திரியை முன்னிட்டு இந்து மாணவ சமுதாயம் வெளியிட்டு வரும் இந்த மலர் சேவைக்கும் கந்தன் என்றும் துணைநிற்க! மக்களது மனதில் தர்ம சிந்தனைகள் மேலோங்கவும், சமுதாயத்தில் அமைதி நிலவவும் பிரார்த்திக்கிறேன்.

"உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற உண்மைக்கிணங்க பக்தி சிரத்தையுடன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு உய்வோமாக!

வாழ்க வளமுடன்

**வரதராஜசர்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின்

# ஆசிச் செய்தி

அன்புடையீர்,

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினர் வருடாந்தம் வெளியிடுகின்ற "இந்து தருமம்" மலர் இம்முறையும் வெளிவருவதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இம்மலர் வழமைபோல சிறப்பான அறக்கருத்துக்களையும், பயன்தரு ஆக்கங்களையும் தாங்கி வருவது போற்றுதற்குரியது.

சமயம் ஒவ்வொன்றும் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டியாக உள்ளது. அந்த வகையில் சமய, கலை, கலாசாரங்களை வளரக்க வேண்டிய பொறுப்பு இளந்தலைமுறையினரிடமே உள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை மையமாகக் கொண்டு பல சமய நிகழ்ச்சிகளையும், வெள்ளிக்கிழமை தோறும் பஜனைகளையும் நடத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே இந்து தர்மம் நூல் வெளியீடும் அமைந்துள்ளது. சிந்தனைகளைத் தூண்டும் ஆன்மீகக் கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் தாங்கிவரும் இம்மலரை வெளியிட்டு வைக்கும் இந்து மாணவர் சங்கத்தினருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலர் சிறப்புற வெளிவந்து அனைவருக்கும் பயனுள்ளதாக அமைய இறைவன் ஆசீர்வதிப்பானாக.

என்றும் இறவாத இன்ப அன்பு வேண்டும்

சுபமஸ்து

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**

2 வது குருமஹா சந்நிதானம்,

நல்லூர்.

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ணமிஷன் வழங்கிய

# ஆசிச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர்கள் சங்கம் இவ்வருடமும் மகா சிவராத் திரி அன்று 'இந்து தருமம்' என்ற நூல் வெளியிட இருப்பதை அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

"உலகிற்கு நான் சொல்ல வேண்டுவதெல்லாம் வீரர்களாக இருங்கள்...! வலிமையும் வளர்ச்சி யுமே வாழ்விற்கு அடையாளம், பலவீனம் சாவிற்கு அடையாளம். பலவீனமான எல்லாவற்றிலி ருந்தும் விலகி விடுங்கள். சாவு வலிமையானது என்றால் அதைப் பெற நரகத்திற்குச் செல்ல நேர்ந் தாலும், சென்று அதைப் பற்றிக்கொள்ளுங்கள்.

உண்மையான வெற்றியின், உண்மையான ஆனந்தத்தின் மாபெரும் இரகசியம் இதுவே. பிரதி பலனை எதிர்பாராதவன், முற்றிலும் தன்னலமற்றவன் - அவனே எல்லாவற்றிலும் சிறந்த வெற்றி யடைவான்." என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

அறப்பணிகள் செய்து வரும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும், மேலும் இந் நூல் வெளிவர உழைத்த அனைவருக்கும் பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் வீற்றிருக்கும் குறிஞ்சிக் குமரன் அருளையும் ஆசிகளையும் வழங்க பிரார்த்திப்பதோடு என் அன்பையும் வாழ்த்-துக்களையும் தெரிவிக்கின்றேன்.

இறைபணியில்

**சுவாமி சர்வரூபானந்த**
தலைவர்
கொழும்பு - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தலைவர் நூலிற்கு வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

இந்து மதம் அனைத்து மதங்களினதும் தாய். கீழைத்தேய மதங்கள் அனைத்தும் இந்து மதத்தின் இனிய குழந்தைகளே. அன்பால் அனைவரையும் அரவணைத்து, அருள் நிறைத்து, ஆன்மீகம் பரப்பி உய்வுக்கு உதவும் உயர் சமயம். இந்து மதத்தின் உயர் தனிச் சிறப்பு அதன் தருமக் கொள்கையே ஆகும். இறைவன் தரும வடிவினன் என்பதை ஆழமாகவும் அழகாகவும் அகலமாகவும் சொல்லி வைத்த மதம் இந்து மதம். ஒவ்வொரு இந்துவினதும் வாழ்வின் நாதமும் ஆதார சுருதியும் தருமமே என்று வரையறுத்த தலையாய சமயம் இந்து மதம். இத்தகைய மதத்தின் அடிப்படைச் சிறப்பான "இந்து தருமம்" எனும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் வருடந்தோறும் வெளியிடும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்குக் கிடைத்த வாய்ப்பு இறையருளாற் கைகூடியது.

கல்விச்சூழல் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். "கற்றதனால் ஆய பயன் என் கொல் வால் அறிவன் நற்றாள் தொழார் எனின்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. கற்றலின் ஆரம்பமும் அந்தமும் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடையது. இன்றைய கல்விச் சூழலில் இதனை மறந்து வரும் நிலை காணப்படுகின்றது.

கல்விச் சூழலில் அமைந்த ஆலயத்தில் மாணவர்கள் சரியைத் தொண்டில் ஈடுபடுவது குறைவு. அறிவியல் உலகில் ஆன்மீகத்தை நாடுவது குறைவு. கற்பவர்களும் கற்பிப்பவர்களும் ஆலய முன்னேற்றத்திலும் சிறிதளவு நேரத்தைச் செலவு செய்து இறையருளை வரவு வைத்தால் இந்த வையகத்தில் உயரலாம். இதை உணர்ந்து அனைவரும் செயற்படுவார்கள் என நம்புகின்றேன்.

"இந்து தருமம்" இதழ் சிறப்புற வெளிவந்து ஆன்மீக ஒளியையும் அறிவொளியையும் பரப்ப வேண்டும் என வேண்டுவதோடு இறைவனை இறைஞ்சி இதழாசிரியர்களுக்கும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்களுக்கும் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**வடிவேல்முருகன் தர்மதாசன்**
பெருந் தலைவர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும் பொருளாளரின்

# வாழ்த்துச் செய்தி

கோல மயில் கொலுவுற்று வீற்றிருக்கும் ஞான பண்டிதனை நாவார வாழ்த்தியபடி இம் மடலினைத் தொடங்குகிறேன். கடந்த காலங்களைப் போலவே இவ் வருடமும் இந்த மாணவர் சங்கம் தமது பணியினைச் செவ்வனே செய்து முடித்திருப்பதை இந்து தருமத்தினூடாக கண் கூடாகக் காணமுடிகின்றது. இது அவர்களின் ஆன்மீகக் கடப்பாட்டினையும் அதன்பால் அவர்களின் ஈடுபாட்டினையும் எடுத்துக் காட்டுக்கின்றது. தங்களது கனமான கல்விப் பயணத்துக்கு மத்தியிலும் ஆலய கருமங்களையும் விழாக்களையும் முன்னின்று நடாத்தி வரும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்

இத்தகைய கட்டுக்கோப்பான சங்கமொன்றுடன் இணைந்து கடந்த 03 வருடங்களாக செயற்பட்டு வருவதையிட்டு மிகவும் உவகையடைகிறேன். இனிவரும் காலத்திலும் சங்கத்தின் பொது நோக்குக்காக என்னாலான அனைத்து செயற்பாடுகளையும் முன்வைப்பேன் என கூறிக்கொள்வதோடு இந்து தருமம் தொடர்ந்தும் வெளிவர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியவேண்டுமெனப் பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

**கலாநிதி த.சிவானந்தவேள்**
பெரும் பொருளாளர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிஞ்சிக் குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழுத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் பல்தரப்பட்ட கற்கைநெறிகளுக்கு மத்தியிலும், ஆன்மீக வழிபாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவது சிறப்புக்குரியதொன்றாகும். இவர்கள் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்து தர்மம் சஞ்சிகையை வருடாவருடம் வெளியிடுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்றைய காலகட்டத்தில் இந்து மதத்தை மேலும் வலுவடையச்செய்து, பாதுகாப்பது இளந் தலைமுறையினரான மாணவர்களின் தலையாய கடமையாகும். இக்கடமையை இம்மாண வர்கள் திறம்படச்செய்து வருகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் போது நான் பெரிதும் மனம் மகிழ்வதுடன், இச்சேவையை சமூகத்தின் மத்தியில் எடுத்துச்செல்வதற்கு இந்து மக்கள் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாணவர்களின் பணி மேலும் மேலும் தொடர்ந்து, அவர்கள் வாழ்க்கையில் எல்லா நிலைக ளிலும் முன்னேறக் குறிஞ்சிக்குமரனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**பேராசிரியர் வை. நந்தகுமார்.**
தலைவர்
பொறுப்பாண்மைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய பேராதனையில் குன்று - தோறாடும் குமரனாகிய முருகப் பெருமான் திருவருள் சுரந்து கொண்டிருக்கும் சூழலில் இப் பல்கலைக்கழகமும் மாணவர்களும் சூழ்ந்து இருப்பது ஒரு பெரும் வரப்பிரசாதமாகும்.

குறிஞ்சிக் குமரன் கோவிலோடு தொடர்புடைய அமைப்புக்களான பொறுப்பாண்மைக் குழு, இந்துப் பட்டதாரிகள் சங்கம், இந்து மாணவர் சங்கம் ஆகியவற்றுள் இந்து மாணவர் சங்கமே ஆலயத்தின் உயிர் நாடியாக அமைகின்றது. மாணவர்கள் தெய்வீகப் பணியை செவ்வனே செய்வதற்கு பொறுப்பாண்மைக் குழு தகுந்த வழிகாட்டுவதுடன், இந்துப் பட்டதாரிகள் சங்கமும் பல உதவிகளை வழங்கி வருகின்றது. இந்து மாணவர் சங்கமானது ஆலய நித்திய, நைமித்தியக் கடமைகளைச் செவ்வனே செய்வதுடன், சகல திருவிழாக்களும் சிறப்புற நிகழ்வுதற்கு உதவிகள் பலவற்றை வழங்குகிறது. கடந்த வருடம் இடம்பெற்ற மஹா கும்பாபிஷேக நிகழ்வினை எவரும் மறந்துவிட முடியாது. அத்துடன் நிதி நெருக்கடி மிக்க மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவதுடன் வருடாந்தம் மஹா சிவராத்திரி அன்று 'இந்து தருமம்' நூலினையும் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆலய மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்ற இக்காலப் பகுதியிலே இந்து மாணவர் சங்கத்தின் தலைவராக அமர்த்தப்பட்டமை இறைவன் தந்த பெரும்பேறு என்றே கருதுகின்றேன். எமது செயற்குழு திறம்பட இயங்குவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், ஐம்பத்து நான்காவது இதழாக வெளிவரும் இந்நூல் சிறப்புற குறிஞ்சிக் குமரனை மன, மொழி, மெய்களால் வணங்குகின்றேன்.

"தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன்னுற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"

நன்றி

**சி. வினோஜ**
பொறியியற்பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்

## செயற்குழு 2013/ 2014

| | | |
|---|---|---|
| பெருந்ததலைவர் | : | திரு.வ.தரமதாசன் |
| பெரும்பொருளாளர் | : | கலாநிதி த.சிவானந்தவேள் |
| கௌரவக்கணக்காய்வாளர் | : | திரு.ந.அகிலன் |
| தலைவர் | : | செல்வன் சி.வினோஜ் |
| உபதலைவர் | : | செல்வன் சு.கஜரதன் |
| இணைச்செயலாளர்கள் | : | செல்வன் க.பிரதீஸ்வரன் |
| | | செல்வன் து.கஜன் |
| இளம்பொருளாளர் | : | செல்வன் ப.கௌசிகன் |
| இதழாசிரியர்கள் | : | செல்வன் இ.லவன் |
| | | செல்வன் ச.பார்த்தீபன் |
| நூலகர் | : | செல்வன் தி.ரமணன் |
| பண்டக முகாமையாளர்கள் | : | செல்வன் செ.நிரோசன் |
| | | செல்வன் ந.யசோதரன் |
| நிர்வாக அலுவலர்கள் | : | செல்வன் கு.சிந்துயன் |
| | | சி.கஜந் |
| இணைப்பாளர் | : | செல்வன் ஸ்ரீ.சுபாங்கன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன் க.டனிஸ்ரன் |
| | | செல்வன் பா.சாரங்கன் |
| | | செல்வன் வே.துவாரகன் |
| | | செல்வன் பே.குகநாத் |
| | | செல்வன் பா.புவிதரன் |
| | | செல்வன் த.நித்தியரூபன் |
| | | செல்வன் மெ.குகேஸ் |
| | | செல்வன் த.ஹோமிலன் |
| | | செல்வன் செ.கார்த்திகன் |
| | | செல்வன் வ.கிரிதரன் |
| | | செல்வன் க.தனஞ்செயன் |
| | | செல்வி து.வேணுஜா |
| | | செல்வி. பா.நிர்விகலா |
| | | செல்வி. க.கனகதுர்க்கா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரன் ஆலயம்

## பொறுப்பாண்மைக் குழு 2013-2014

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பேராசிரியர் வை.நந்தகுமார் |
| பொதுச் செயலாளர் | - | இரா. மகேஸ்வரன் |
| நிர்வாக செயலாளர் | - | கலாநிதி த.சிவானந்தவேள் |
| பொருளாளர் | - | திரு.வ.தர்மதாசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | - | பேராசிரியர் செ.சிவயோகநாதன் |
| | | பேராசிரியர் வ.மகேஸ்வரன் |
| | | திரு.ச.விஜயச்சந்திரன் |
| | | திரு.து.சிவசுப்பிரமணியம் |
| | | திரு.அ.அரியரத்தினம் |
| | | திரு.வ.கதிர்காமநாதன் |
| | | சி.வினோஜி |
| | | ப.கௌசிகன் |
| | | க.பிரதீஸ்வரன் |
| | | சு.கஜரதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழு - 2013/2014



| | | |
|---|---|---|
| இருப்பவர்கள் (இ.வ) | : | பேராசிரியர்.வ.மகேஸ்வரன், பேராசிரியர்.சாந்த ஹேனநாயக்க(பிரதி உபவேந்தர்) பேராசிரியர்.வை.நந்தகுமார், பேராசிரியர்.அதுல சேனாரத்ன(உபவேந்தர்), திரு.V.கதிர்காமநாதன், திரு.வ.தர்மதாசன், திரு.இரா.மகேஸ்வரன், கலாநிதி.த.சிவானந்தவேள். |
| நிற்பவர்கள் (இ.வ) | : | ப.கௌசிகன், க.பிரதீஸ்வரன்,கு.அபிராம்,சி.வினோஜ்,சு.கஜரதன் |
| படத்தில் இல்லாதோர் | : | பேராசிரியர் செ.சிவயோகநாதன்,திரு.ச.விஜயச்சந்திரன், திரு.து.சிவசுப்பிரமணியம், திரு.அ.அரியரத்தினம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடமிருந்து வலம்

திரு.இரா.மகேஸ்வரன்,பேராசிரியர்.வ.மகேஸ்வரன், ,பேராசிரியர்.வை.நந்தகுமார், திரு.வ.தர்மதாசன், திரு.ம.ஜெயசுதன், கலாநிதி. த.சிவானந்தவேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடு அறிவியல் நோக்கில் தோப்புக்கரணம்

வ.சி.கேசவன்
கலைப்பீடம்

இந்துமதம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தோற்றம் எத்தகையது என அடையாளம் காணப்பட முடியாதிருக்கின்ற மிகத் தொன்மையான மதம் என்பது நாம் அறிந்த விடயமே. அத்தகைய இந்து மதத்தில் பல்வேறு சம்பிரதாயங்களும், இன்னோரன்ன பல தத்துவங்களும் உள்ளடங்குகின்றன. இவை இன்றைய அறிவியலுடன் இணைந்த வகையில் இருக்கும் அதேவேளை, ஆன்மீகச் சம்பிரதாயங்களிலும் சிறப்பான முறையில் நோக் கப்படுவதைக் காணலாம். இது இன்றைய விஞ்ஞானத் துறையினை வியப்பில் ஆழ்த்தி இருக்கிறது. இந்து மதக் கொள்கைகள் யாவும் அறிவியலுடன் இணைந்த தன்மையினைக் கொண்டிருக்கின்றன. எனினும் அவையாவற்றையும் விளக்க முற்படின் அது மகாபாரதத்தைவிட நீண்டுவிடும் ஆதலால், அச் சிறப்புமிகு கொள்கைகளுள் ஒன்றான தோப்புக் கரணம் குறித்து ஆராய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

" தோப்புக்கரணம்" என்பது கணபதி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது. தோப்புக் கரணமின்றி கணபதி வழிபாட்டினை மேற்கொள்வதென்பது இயலாததென்று கூறுமளவிற்கு அது நெருக்கமான பிணைப்பினைக் கொண்டுள்ளது. கணபதியை வழிபடும் போது மும்முறை தலையில் குட்டி, மூன்று முறை இரு செவிகளையும் பிடித்தவாறு இருந்து எழும்புவர். இதுவே தோப்புக்கரணம். இவ்வாறு தோப்புக் கரணம் போடும்போது இடது கையை உட்புறமாகவும், வலது கையை வெளிப்புறமாகவும் இருக்கும் வகையில் வைத்திருத்தல் அவசியமென்பர் மெய்ஞ்ஞானிகள். முன்னைய காலத்தில் குரு குலங்களில் கல்விகற்ற மாணவர்கள் தவறிழைத்தால் தோப்புக் கரணம் போடுமாறு குருகுலங்களில் குருமார்கள் பணிப்பார்கள். இவ்வாறு பணிப்பதன் நோக்கம் தக்க தண்டனை என்றோ, பழிவாங்குவதென்றோ அர்த்தமாகாதென்றும், இவ்வாறு பணிப்பதனுள் மிகப்பெரிய விஞ்ஞான, மருத்துவ ஞானம் மறைந்திருக்கின்றதென்றும் இன்று தோப்புக் கரணம் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் ஆச் சரியத்தோடு, தம் ஆராய்ச்சி பூர்வமான முடிவுகளை வெளியிட்டிருக்கிறாகள். தனது சீடனின் ஞாபக சக்தி வளர வேண்டும் என்பதற்காகவும், அவனிடத்தே ஒரு முகப்பாடு ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் குரு தோப்புக்கரணம் போடப் பணித்தாராம். பல மாதங்களாக இரவு, பகலைனப் பாராது, பல நூல்களைக் கற்றுத் துறைபோன மாணவர்கள் பரீட்சைக்குச் செல்லும் போது கணபதியை தோப்புக் கரணமிட்டு வழிபட்டுவிட்டு பரீட்சைக்குச் சென்று பரீட்சை எழுதுவர். இதனால் அவர்களிடத்தே மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைப்பாடு இயல்பாகவே உதிப்பதாகவும், அவர்களால் தாம் கற்ற விடயங்களை ஒருங்கு சேர்த்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு உரிய வகையில் விடையளிக்க முடிவதாகவும் தோப் புக்கரணம் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் குறிப்பிடுக்கின்றனர். அது எவ்வாறு சாத்தியமா கின்றது என்பதனையும் விஞ்ஞானிகள், விஞ் ஞான மருத்துவ ரீதியில் விளக்கமளித்திருப் பதனைக் காண்கின்றோம். விஞ்ஞானிகளது கருத்துப்படி காதுகளைப்பிடிப்பது சிறந்த சிகிச்சை (அக்குபஞ்சர்) முறையாகும். லொஸ் ஏஞ்சலைச் சேர்ந்த மருத்துவர் எரிக் இராபின்ஸ் (Dr. Eric Robinds) தோப்புக்கரணம் போடுவதன் மூலம் மூளையின் செல்களும் நீயூரன்களும் சக்திபெறுகின்றன. என்கின்றார் மேலும் இவர் இது தொடர்பாக ஆச்சரியத்துடன் விவரிக்கையில், "பரீட்சையில் குறைந்த மதிப்பெண்களைப்பெற்ற மாணவனும் இப்பயிற்சியைத் தொடர்ந்து செய்த ஒரு சில மாதங்களினுள், அதிக மதிப் பெண்ணைப் பெறுகின்றான். இதை நான் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கின்றேன். இது நூறு வீதம் உண்மையானது என்று கூறு வதை நோக்கக் கூடியதாக உள்ளது. அது மாத்திரமன்றி, தன்னிடம் வரும் நோயாளர் களுக்கும் இந்தத் தோப்புக்கரணம் பற்றி இவர் எடுத்துரைக்கின்றார். அது மட்டுமன்றித் தோப்புக்கரணம் போடுமாறும் பரிந்துரைக் கின்றார். மேற்குலக சமூகத்தினரும் இவரது பரிந்துரைக்குச் செவிமடுத்துப் பயன் பெற்று வருகின்றனராம்.

மருத்துவர் 'யூஜினியஸ் அங்' ஒரு நரம்பியல் நிபுணர். இவர் ஜேல் பல்கலைக்ககழகத்தைச் சேர்ந்தவர். இவரும் மருத்துவர் எரிக் இராபின்ஸ் அவர்களது கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். தோப்புக்கரணம் போடுவது மிகச் சிறந்த பயிற்சி என்று கூறும் இவர் அதனை நிரூ பித்தும் காட்டியுள்ளார். தோப்புக்கரணம் போடு வதன் மூலம் மூளையின் நரம்பு மண்ட லத்தில் பல வழிகளிலும் சக்திவாய்ந்த மாற் றங்கள் ஏற்படுகின்றன என இவர் குறிப் பிட்டு அதனை நிறுவியும் காட்டியுள்ளார். தோப்புக்கரணம் மூலம் மூளையின் இடது மற்றும் வலது பக்கங்கள் சமமான சக்தியைப் பெறுகின்றன என்று கூறும் இவர், மிக நுண்ணிய தகவல் அனுப்பும் காரணிகளும் வலுவடைகின்றதாகவும் கூறுகின்றார் நோய் எதிர்ப்புச் சக்தியும் இந்தத் தோப்பு கரணம் மூலம் அதிகமாகின்றது என்றார். உயர் குருதி அமுக்கம், தாழ் குருதி அமுக்கம் போன்றவற்றைக் கட் டுப்படுத்தி மனதிற்கு வார்த்தைகளால் விபரிக்க முடியாத அமைதியைத் தோப்புக் கரணம் கொடுக்கிறதாம், மூளையிலுள்ள இறந்த பழைய கலங்களை அகற்றி புதிய கலங்கள் தோற்றுவ தற்கு உதவுகிறதாம். நரம்பு மண்டலத்தில் இரத்த ஓட்டம் சீராக்கமடைகின்றதாம். தசை கள் உறுதி பெறுகின்றதாம் என்று பலவாறு விஞ்ஞானிகள் தோப்புக் கரணம் பற்றி வியப் போடு கூறு வதைக் காண்கின்றோம். இவர்கள் இந்து மெஞ்ஞானி களது அறிவுத் திறனையும், மருத்துவ அறிவையும் வியந்து நிற்கின்றனர்.

அசுரர்களைவிடத் தேவர்கள் புத்திசா துர்யமாக இருந்தமைக்கு அவர்கள் கஜமுகா சூரன் முன்பு ஆயிரக்கணக்கான தோப்புக் கரணங்களைப் போட்டது தான் காரணமோ என்று எனக்கு ஐயமேற்படுகின்றது. நான் ஒரு இந்து என்றெண்ணுகையில் என் மூத் தோர்களை எண்ணி நான் பெருமை அடை கின்றேன். இன்றைய விஞ்ஞானிகளை விட, அன்றைய இந்து மெய்ஞ்ஞானிகள் அறிவு நிரம்பியவர்கள் என்பதற்கு வேறுசான்றேதும் தேவையா? இதுவொன்றேபோதுமல்லவா? இது போன்று இந்துக்கள் கடைப்பிடிக்கும் ஒவ் வொரு கொள்கையும் அர்த்தம் நிரம்பியது. அவை விஞ்ஞான மருத்துவத்துடனும் ஆன்மீகத்துடனும் பின்னிப் பிணைந்தது. அவை தொடர்பாக இந் துக்களாகிய நாம் அறிந்துகொள்ள முயற்சிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். உலகிற்கும் எடுத்துரைக்க வேண்டும். ஏனைய கொள்கைகளையும் விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் ஆராய முற்பட வேண்டும். எம் வழிபாட்டு முறைகள் மூடக்கொள்கைகள் இல்லை என்று உரத்துக் கூற வேண்டும். அவற்றை அனைவரும் ஏற்கும் வகையில் தர்க்க ரீதியாக நிறுவ வேண்டும். அது உடனடியாக இன்றே செய்யப்பட வேண்டியதொன்றாக உள்ளது. நாம்தான் அவற்றைச் செய்ய வேண்டும். நாம் அவற்றைச் செய்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கெழுத்து அரங்கேற்றம்

நிர்விகலா பாலகிருஷ்ணன்
3ம் வருடம்
பொறியியல் பீடம்

காலச்சக்கரச் சுழற்சியில் மனிதன் நினைத்துப் பார்க்கக்கூட தயங்கும் பல விடயங்கள் உள்ளன. அதிலும் அவன் கனவிலும் நினைத்துப்பார்க்க விரும்பாதது எது தெரியுமா? மரணம்! அதாவது நித்திரை என்ற ஒத்திகையின் உண்மையான அரங்கேற்றம். மரணம் என்பது என்ன? அது எவ்வாறு நிகழ்கின்றது? யாரால் நிறைவேற்றப்படுகின்றது? எப்படி நிறை வேற்றப்படுகின்றது. ஏன் நிகழ்கின்றது? மரணம் நிகழ்ந்த பின்னர் ஆத்மா எங்கு செல்கின்றது? எப்படிச் செல்கின்றது? அது சரி அந்த ஆத்மா எங்கிருந்து உடலுக்கு வந்தது? ஏன் வந்தது? பூர்வ ஜென்ம பலனா...? அப்படி என்றால் பூர்வஜென்மம் என்றொன்று உள்ளதா? அதை உருவாக்கியது யார்? ஏன் உருவாக்கினார்கள்...? அப்பப்பா எத்தனை கேள்விகள், இவற்றிற்கு முற்றுப் புள்ளியே இல்லையா? இதை யோசித்துக்கொண்டு போனால் என்ன நடக்கும், யாருக்குத் தெரியும், ஒருவேளை விடை கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். ஆனால் யாருக்கும் யோசிக்கப் பயம், கேள்வி கேட்கப் பயம். ஏன் எனக்கும் பயம் தான்.ஆனால் ஒரு சிறிய நப்பாசை. எனக்கு விடை கிடைக்காதா என்று. அதனால் என் கேள்விகளை உங்கள் முன் வைக்கிறேன்.

இந்த உலகம் தோன்றி பல லட்சம் ஆண்டுகள் ஆகிவிட்டன. என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஏன் புராணங்கள் கூடக் கூறுகின்றன. இப் பூவுலகத்தில்த் தான் அனைத்து ஜீவராசிகளும் உள்ளன. ஆனாலும் மனிதன் கூட வெல்லமுடியாத சவால் எது தெரியுமா? மரணம்! மரணம் என்பது ஒரு பயங்கர அச்சுறுத்தல். யாரால் யாருக்கு என்று கேள்வி கேட்கத் தோன்றும். ஆனால் விடை தான் தெரியாது. சொல்லப்போனால் பிறப்பின் போதே இறப்பும் தீர்மானிக்கப் பட்டுவிடுகின்றது. பிறப்பவர்கள் இறப்பது ஒரு வட்டம் போல நிகழ்கின்றது. இக் கால கட்டத்தில் இறப்பு ஒரு உரிமையாகக் கூட மாறி வருகின்றது. தற்கொலை பண்ணுபவன் என்ன நினைக்கின்றான் தெரியுமா? தனக்கு பிறப்பதற்கு உரிமை உண்டென்றால் இறப்பதற்கும் உரிமை உண்டென்கின்றான். எதிலெதில் தான் உரிமைப் போராட்டம். இதில் என்ன சுவாரசியம் என்றால் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகள் எப்போதடா வரும் என்று கவலைப்படுபவர்கள், இறப்புப் பற்றித் தெரிந்தும் நாம் எப்போதோ இறக்கப் போகிறோமே எனக் கவலை கொள்வதில்லை. என்ன ஒரு வினோதமான மானுட சமுதாயம்! இறப்பதற்கு முன்னர் ஒரு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து பார்த்து விடவேண்டும் என்றே அனைவரும் விரும்பு கின்றனர். கூடவே இறப்பதற்குப் பின் என்னாகின் றோம் என்பது இரும்புப் பெட்டி ரகசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம். மரணத் தை யாரும் விரும்புவதில்லை. இதற்குக் காரணம் மரணம் என்ற திரைக்குப் பின்னால் என்ன இருக் கின்றது என்ற குழப்பம் தான் என்றுங் கூறலாம். ஆன்மீகத்தில் ஒருவர் இறப்பதற்கு அவரவர் பாவ, புண்ணியங்களே காரணம் என்று கூறப்படுகின்றது. இவ் உல கில் இறந்தவர்கள் சிலர் மீண்டும் பிறக்கின்ற னர். என்ற அபூர்வ விடயங்களும் நம் காதுக ளில் விழத்தான் செய்கின்றன. ஒருவர் உயி ரோடு இருக்கும்போது அவரை நினைக்கா தவர் கூட அவர் இறந்ததன் பின்னர் அவரை ஆழமாக நினைக்கின்றார். அப்படி ஆழமாக நினைக்கப்படும் இறந்தவர் திரும்பி வருவார் என நம்புகின்றார்கள். அதற்குப் பின்னால் பல காரணங்களும் இரகசியங்களும் புதைந்து கிடக்கின்றன. இதற்கான தேடலில் சிலர் ஈடுபட்டுள்ளார்கள். இது பற்றிய தேடலில் நிறைய விடையங்களும் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

நமது உடல் பஞ்ச பூதங்களினாலானது. இவ்வுடல் அமையும் போது அதில் ஓர் சக்தி உண்டாகிறது. இச் சக்தியையே நாங்கள் ஜீவன் அல்லது ஆத்மா என்கிறோம். பஞ்ச பூதங்களினால் மாத்திரம் ஒரு சக்தி உண்டாவ தில்லை. உடலே ஆத்மா, மனமே ஆத்மா, ப்ரா ணனே ஆத்மா எனக் கூறுபவர் உண்டு. என் மனம் சரியாக இல்லை. கலங்கியிருக்கிறது என்று நாம் கூறுகின்றோம். என் வீடு என்ற விடயத்தில் நாம் வேறு, வீடு வேறாக இருப்பது போல் என் மனம் என்ற போது நான் வேறு மனம் வேறு எனத் தெரிகிறது. அது போல எனது உயிர் துடிக்கிறது என்ற போதும், நான் வேறு, உயிர் வேறு என நன்கு புலப்படுகிறது. ஆதலால் பஞ்ச பூத உடலுக்கும் புலன்களுக்கும் மனதிற்கும் புத்திக்கும் மேலாக வேறொன்று இருக்கின்றது. அதனையே ஜீவன் அல்லது ஆத்மா எனப்படுகிறது என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

அந்த ஜீவன் நாம் பிறப்பதற்கு முன்பு எங்கே இருந்தது? எப்படி இருந்தது? இறந்த பின்பு எங்கே செல்கிறது? என்ன செய்கிறது? என்பன நமது புத்திக்கும், விஞ்ஞான சாஸ் திரத்திற்கும் எட்டாத விஷயமாக இருக்கின்றது. பாலில் வெண்ணெய் இருக்கிறது. அஃது நம் கண்ணிற்கு புலப்படவில்லை. அங்கனமே கண்ணுக்குப் புலப்படாத ஜீவன், பரமாத்மா, மறு உலகம், மறுபிறப்பு, புண்ணியம், பாவம் முதலிய விடயங்களை நன்கு சர்ச்சை செய்து வெண்ணெய் போல் வேத சாஸ்திரங்களை ரிஷிகள் நமக்கு அளித்திருக்கின்றனர்.

இந்த ஜீவன் தான் எடுத்த உடலை விட்டுக் கிளம்புவதையே மரணம் அல்லது இறப்பு என்கிறோம். இறப்பது உடலா? உயிரா? உடல் தீயிடப்படுவதை அல்லது மண்ணில் புதைக் கப்பட்டு மண்ணாவதைக் காண்கிறோம். அவ்வுடலுக்குள் வசித்த ஜீவனின் கதி என்ன? அதுவும் உடலுடன் அழிகிறதா? மறுமுறை வேறு உடல் எடுத்திருக்கிறதா? வேறு உடல் எடுப்ப தானால் அது வரை எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது. என்ன செய்கிறது. என நன்கு அறி யவேண்டியது என்பது நம் கடமை அல்லவா. கடோபநிஷத்தில் நசிகேதனின் கதையிலிருந்து ஜீவன் உடலுக்கப்புறமும் அழியாமலிருக்கி றான் என்பதனை அந்த ஜீவன் புண்ய, பாப பலன்களை அளிக்கும் யமதர்மராஜன் மூலம் விளக்கிக் காட்டப்பட்டிருப்பதாக அறிகின்றோம்.

மரணம் என்பது அவனவன் செய்த புண்ய, பாபவங்களைப் பூமியில் அனுபவித்த உடலையும் விட்டுவிட்டு யமலோகம் அல்லது ஸ்வர்க்கம் சென்று இங்கு செய்த புண்ய, பாப பலன்களை அங்கே அனுபவிப்பதற்காகக் கிளம் பும் யாத்திரையாகும்.

எண்ணரிய பிறவிகளில் "மானிடப் பிற விதான் யாதினும் அரிதினும் அரிது" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கின்படி பிறப்பில் உயர்ந்தது மனிதப் பிற வியே என்று கருதப்படுகிறது இப்பிறவியின் நோக்கத்தை சரிவர அறிந்து அதற்கு ஏற்ப வாழ்பவனே நிறை மனிதனாக விளங்குவான் மனிதர்களாகிய எமது வாழ்க்கையின் குறிக் கோள் என்ன? இந்த உலகம் மட்டுந்தானா வாழ்க்கையின் குறிக்கோள். பிறப்பு என்பது என்ன? பிறவியின் நோக்கம் யாது? இவை பற்றிய பல ஐயங்கள் காலத்துக்குக் காலம் எழுந்துள்ளன. அதேசமயம் காலத்துக்குக் காலம் தோன்றிய ஞானிகளும் அனுபூதிமான்களும் இத்தகைய ஐயங்களுக்கு இயன்றவரை விளக்கம் தரமுற்பட்டுள்ளனர்.

இந்த ஜீவன் பூதவுடலை விட்டுக் கிளம்புவதற்கு முன்பே அடுத்த உடலுக்கு ஆரம்பமான சில பூத, பரமாணுக்கள் சூஷ்ம சரீரத்திற்குச் சகாயமாக அளிக்கப்படுகிறது. இதைப் பற்றிக் கொண்டே சூஷ்ம சரீரம் போகின்றது. தனியான ஜீவனுக்கோ தனியான சூஷ்ம சரீரத்திற்கோ போதல்,வருதல் கிடையாது.

குளிப்பதற்காக குளத்தங்கரைக்குச் செல்கிறமாதிரி வாழ்வதற்காக பூமிக்கு வந்துள்ளோம். இங்கே எதுவுமே நமக்குச் சொந்தமில்லை. சொந்தம் என்றும் பந்தம் என்றும் நம்முடையது என்று நினைத்துக் கொள்ளலாம். மனதுக்கு அந்த கற்பனை செய்யும் உரிமை மட்டும் வழங்கப்பட்டுள்ளது. அதே கற்பனையால் அல்பமாக எடுத்துச் செல்ல முடியாத விஷயங்களுக்காக உருகுவதை விட ஏழுபிறப்புக்கும் எடுத்துச்செல்ல முடிந்ததான தர்மத்தை செய்யலாமே. ஆத்மாவோடு தொடரப்போவது தர்மம் மட்டுமே எனக்கு எதுவுமே வேண்டாம். நானே எனக்குச் சொந்தமில்லை, நான் பரமாத்மாவின் ஒரு துளி, அவரது சொத்து என்கிற எண்ணம் தானே உண்மையான சத்தியம் அப்படி இருக்க எதற்கு துன்பத்தை வாங்கும் உலகப் பற்று?

புண்ணியம் செய்து ஸ்வர்க்க லோகம் சென்றாலும் சிறிது காலமே சுக அனுபவங்களை அனுபவிக்க முடியும். புண்ணியம் முடிந்தவுடன் மறுபடியும் பூமிக்குத் தள்ளும் போது முந்தின உறவுகள் எல்லாம் முறியும். நஷத்திர ரூபமாக ஜலத்தில் விழுந்து தாவரங்களில் ஒட்டிக்கொண்டிருந்து அதை உண்ணும் புருஷனிடம் சென்று யோனி வழியாகத் தாய் கர்ப்பத்தில் புகும் நிலையை யோசித்தால் மறு ஜன்மம் வேண்டுமா? ஜனனம் உண்டானால் மரணம் உண்டு. மரித்தோர் வேறு உடல் எடுப்பது நிச்சயம். ஆதலால் பிறவியில் உள்ள தோஷத்தை நினைத்தால் பிறப்பில்லாமல் இருக்க வழிதேடுவோம். ஜனன, மரணத்தில் வெறுப்புண்டாகும். செல்வனாயினும் ஏழையாயினும் தாய் வயிற்றில் பத்து மாதங்கள் தங்க வேண்டும். கருவிலுள்ள குழந்தையைச் சுற்றி மலசலங்கள் நிறைந்திருக்கிறது. அதில் பல புழுக்கள் இருந்து பச்சை மண்ணான குழந்தை உடலைக் கடிக்கின்றது. தாய் வயிற்றில் உள்ள ஜடராக்னி ஒரு புறத்தில் கொழுத்துகிறது. அச்சமயம் உணர்ச்சி இருப்பதால் கருவில் வசிக்கும் குழந்தைபடும் கஷ்டம் சொல்லுந்தரமன்று, ஆதலால் கர்ம வாசனை மிகக் கஷ்டமானது. அது இல்லாத வழியைத் தேட வேண்டும்.

எவருடைய மனதில் கீதை, கங்கை, காய்த்ரீ கோவிந்தா என்றவை தியானம் செய்யப்படுகிறதோ அவனுக்கு மறுபிறவி இல்லை.

ஓம் என்னும் ஒரு அஷரமான மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு என்னை நினைத்துக் கொண்டு யார் உடலை நீத்துப் போகிறாரோ அவன் பரம கதியைப் பெறுகிறான் என பகவத் கீதையில் பகவான் அருளுகிறார். ஆதலினால் நாம் அனைவரும் இந்திரியங்களை அவற்றின் வழி செல்ல விடாது மனதை அடக்கித் தியானஞ் செய்து ஞானத்தை தேடி அழிவில்லாத நற்கதியைப் பெற முயற்சிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறோம்பல் தலை**

என்னும் வள்ளுவர் குறளுக்கிணங்க இறந்தவர்களுக்குச் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களைச் செய்து அவ் ஜீவனை மகிழ்ச்சி அடையச் செய்து நாமும் நற்கதி பெறுவோமாக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன் கோவில்
## ஒரு சூழல் பகுப்பாய்வு

வடிவேல்முருகன் தர்மதாசன்
முதுநிலை விரிவுரையாளர்
முகாமைத்துவக் கற்கைகள் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

**1.அறிமுகம்**

இயற்கை எழில் கொஞ்சும் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் பேராதனை நகரின் மகாவலி கங்கைக் கரையோரத்தில் அமைந்துள்ள பேராதனைப் பல்கலைக்கழகப் பூங்காவில் உள்ள மலையில் (குறிஞ்சியில்) வீற்றிருந்து பல்வேறு பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள், பல்கலைக் கழகத்தில் கடமையாற்றும் கல்விசார் (விரிவுரையாளர்கள்), கல்வி சாரா ஊழியர்கள், பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறி உலகின் நாலாபுறமும் வாழும் இந்துப் பட்டதாரிகள் உட்பட இலங்கையில் வாழும் சகல இந்துக்களுக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எமது குறிஞ்சிக் குமரன் கோவில் தொடர்பாக அதன் தற்போதைய சூழல் சார்ந்த நிலைமைகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**2.குறிஞ்சிக் குமரன் கோவில்**

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்க இப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற, கடமையாற்றிய எமது ஆரம்பகால மாணவர்களும், விரிவுரையாளர்களும் இந்துக்களுக்கான வழிபாட்டுத் தலம் ஒன்றை அமைப்பதற்காகப் பல்கலைக் கழக நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1966ஆம் ஆண்டு பல்கலைக்கழக நிர்வாகத்தினால் வழங்கப்பட்டதே மலையும் மலை சார்ந்த நிலமும் ஆகும். அங்குள்ள காட்டினை அழித்து அதில் இந்து ஆலயம் ஒன்றை அமைத்து அதற்குக் குறிஞ்சிக் குமரன் கோவில் எனப் பெயரையும் சூட்டியிருந்தார்கள், நம்முன்னோர்கள். இக்கோவிலில் குடியிருக்கும் குறிஞ்சிக் குமரனைக் "காந்த மலைக் கந்தன்" என அழைப்பதுமுண்டு எனப் பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா அவர்கள் பேராதனைக் குறிஞ்சிக் குமரன் பற்றித் தான் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கோவிலின் முக்கியத்துவம் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான 2003 - 2004 கல்வியாண்டுக்கான இந்து தருமத்தில் "இந்துத் தமிழ் மாணவரின் சமூக மத அசைவியக்கம் பற்றிய ஒரு சுருக்கக் குறிப்பு" எனும் கட்டுரையில் குறிப்பிட்டிருந்த சில விடயங்கள் முக்கியமானதாகக் காணப்படுகின்றன.

1. பேராதனைத் தமிழ் மாணவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு நிலையில் தமிழ்ச் சங்கமும், இந்து மாணவர் சங்கமும் முக்கிய மாகத் தொடங்கின. படிப்படியாக இனக் குழும ஒடுக்கப்பாட்டுணர்வுகள் வளர்ந்து உக்கிரம் அடையத் தொடங்க தமிழ்ச் சங்கம் தமிழ் பேசும் மாணவர்களின் ஒருங்கிணைவின் சின்னமாக, இக்குறிஞ்சிக் குமரன் கோவில் இந்துத் தமிழ் மாணவர்களுக்கான பாதுகாப்பு வரையறையுள்ள மையமாகக் கிளம்பத் தொடங்கியதும் ஆச்சரியமில்லை.

2. பல்வேறு இடங்களில் இருந்தும், குறிப்பாக வட- கிழக்குப் பகுதிகளில் இருந்து வந்த தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக வளாகக் கோட்டத்துக்குள்ளேயே கோவில் ஒன்று அமைந்திருப்பது மிகுந்த பயம் நீக்கும் ஆறுதல் உணர்வை வழங்கிற்று.
3. இந்துத் தமிழ் மாணவர்கள் தங்கள் பண்பாட்டுத் தனித்துவத்தை அழுத்திக் காட்டக்கூடிய இடமாகக் கோவில் அமை யத் தொடங்குகின்றது.
4. மாணவர்கள் இத்தலத்தைத் தமது பண்பாட்டு, ஆத்மார்த்தத் தேவைகளுக்கான ஓர் ஆதர்ச இடமாகக் கொள்கின்றார்கள் என்பது புலனாகின்றது.
5. மாணவர்களின் மதப் பண்பாட்டு இலட்சிய ஆதர்சங்கள் சில தொழிற்படுவதற்கும் இந்தக் கோயில் ஒரு களமாகின்றது.
6. இக்கோயில் அதனை வழிபடுவோரிடையே பாரம்பரியம்மிக்க பண்பாட்டு, வரலாற்றுச் சிறப்புக்களுக்கான எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்று விரும்புவது முற்றிலும் நியாயமானதே.
7. தாங்கள் வளர்ந்த பண்பாட்டுச் சூழலினை நினைவுறுத்தி அதன் தொடர்ச்சிக்கு உதவும் இவ்வாலயம் அப்பண்பாட்டுச் சின்னமாக இருக்கும் அதே வேளையில், தங்கள் குடும்ப ஊர் நினைவுகளைத் தருவதாக இருக்கும் அதே வேளையில் ஊர்ச்சூழலில், கோயில்களில் காணப்படுகின்ற சில முக்கிய குறைபாடுகள் அற்றதாக இக்கோயில் இருப்பது மிக முக்கியமான ஒன்றாகும்.
8. பல்கலைக்கழகப் படிப்பின் பின்னரும் மாணவர்கள் சிலர் இந்தக் கோயிலைத் தமக்கு முக்கியமான ஒரு கோயிலாகக் கருதி அங்கு செல்வதை ஒரு அந்தஷ்துச் சடங்காகும் அளவுக்கு கொண்டுள்ளமையும் புலனாகின்றது.
9. கோயிலின் புறச்சூழல் மாணவர்கள் விரும்பும் அக அமைதியைத் தருவதற்கான ஒன்றாக உள்ளமை.
10. பேராதனையின் பெரும்பாலான இந்துத் தமிழ் மாணவர்களுக்கு குறிஞ்சிக் குமரன் கோயில் அதே திணை மரபு சொற் றொடரில் கூறுவதானால் சமூக மன, உள தேவைகள்சார் "பாலைப் பசுந்தேடலாக" (Oasis) உள்ளதென்பது புலனாகின்றது.

பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா அவர்களது நூலில் இருந்தும், இந்து மாணவர் சங்க வருடாந்த வெளியீடான இந்து தருமம், இந்துப் பட்டதாரிகள் சங்க வருடாந்த வெளியீடான செய்தி மடல், கோவிலில் பயன்படுத்தப்படும் பஜனைத் திரட்டு மற்றும் ஏனைய நூல்களில் இருந்தும் குறிஞ்சிக் குமரன் கோவில் தொடர்பான சில முக்கியமான பின்வரும் வரலாற்றுச் செய்திகளை அறியக் கூடியதாகவுள்ளது.

1966ஆம் ஆண்டு பல்கலைக்கழக நிர்வாகத்தினால் கோவில் அமைப்பதற்கென மலையும் மலை சார்ந்த நிலமும் வழங்கப்பட்டு, அங்குள்ள காட்டினை அழித்துக் கோவிலை அமைப்பதற்கு ஏற்ற வகையில் செப்பனிடப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.11.1966 இல் கோவிலைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

1968 சித்திரை மாதமளவில் கோவில் கட்டட வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குறிஞ்சிக் குமரன் கோவிலில் பிரதிஷ்டை செய்வதற்கென மூலமூர்த்தி, உற்சவ மூர்த்தி போன்ற விக்கிரகங்கள் மாவிட்டபுரம் தேவஸ்தானத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டுள்ளன (திகதி குறிப்பிடப்படவில்லை).

06.06.1968இல் முதலாவது மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 1977ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கல வரத்தில் 19.08.1977 அன்று கோவிலுக்கு ஓரளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

புனருத்தாரணத்தின் பின்னர் 14.11.1977 இல் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 31.10.1979இல் பாலஸ்தாபனம் நடைபெற்றுள்ளது.

06.02.1980இல் ஜீர்ணோத்தாரண அஷ்டபத்தன இரண்டாவது மஹா கும்பாபிஷேகம் நடை பெற்றுள்ளது.

1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக் கலவரத்தில் ஆலயத்திற்குப் பாரிய சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 13.07.1986 இல் மூன்றாவது மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

01.07.1998இல் நான்காவது மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இறுதியாக 27.08.2010இல் ஐந்தாவது மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடை பெற்றுள்ளது.

இவ்வாறாக அன்று தொட்டு இன்று வரை இடையிடையே ஏற்பட்ட பல்வேறு இன்னல்களையும் கடந்து குறிஞ்சிக் குமரன் கோவிலைத் தொடர்ச்சியாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களும், பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் விரிவுரையாளர்களும், பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வெளியேறிய இந்துப் பட்டதாரிகளும் சிறப்பாகவும், பார்புகழும் ஓர் ஆலயமாகவும் இவ்வாலயத்தை உயர்த்திச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எதிர்காலத்திலும் இவ்வாறு செயற்படுத்துவார்களா என்பது இன்று சற்றுச் சிந்திக்க வேண்டிய விடயமாக மாறியுள்ளது. ஏனெனில், அண்மைக்காலமாகக் கோவிலின் சூழல் காரணிகளின் தாக்கமும், பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்றுக்கொண்டிருக்கும் பல்வேறு பீடங்களைச் சேர்ந்த மாணவர்களினதும், கடமையாற்றிக் கொண்டிருக்கும் கல்விசார் (விரிவுரையாளர்கள்) மற்றும் கல்விசாரா ஊழியர்களினதும் செயற்பாடுகளும் பூரண திருப்தியைத் தருவதாகக் காணப்படவில்லை. அந்தவகையில், குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் தற்போதைய சூழல் சார்ந்த நிலைமைகள் எவ்வாறு காணப்படுகின்றது என்பது சூழல் பகுப்பாய்வின் மூலம் இங்கு எடுத்து ஆராயப்படுகின்றது.

### 3.சூழல் பகுப்பாய்வு

சூழல் பகுப்பாய்வு என்பதனை முதலில் வரையறுத்துக் கொள்வது பயனுடையதாகும். நிறுவனமொன்று தனது நோக்கத்தை அடைந்து கொள்வதில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அனுகூலமான மற்றும் பிரதிகூலமான அக மற்றும் புறக்காரணிகளை இனங்கண்டு கொள்வதற்கு உதவும் ஒரு பகுப்பாய்வு முறையே சூழல் பகுப்பாய்வு ஆகும். இதனை SWOT பகுப்பாய்வு எனவும் குறிப்பிடுவர். எந்தவொரு நிறுவனத்திற்கும் அதன் சூழல் என்பது அடிப்படையில் இருவிதமாக அமையும். அகச்சூழல், புறச்சூழல் என்பவையே அவையாகும். இதற்கிணங்க இப்பகுப்பாய்வின் மூலமும் இவ்விரு சூழல்களையும் இவ்வாய்வு கருத்திற் கொள்கின்றது. நிறுவனமொன்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் அகச்சூழல் மற்றும் புறச்சூழல் காரணிகளைக் கண்டறிந்து அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்றைச் சரி செய்ய முயற்சிப்பதன் மூலம் நிறுவனத்தைச் சரியான வழியில் இட்டுச் செல்வதும் நிறுவனமானது தனது நோக்கத்தை அடைவதற்கு உதவியாக அமைவதும் இப்பகுப் பாய்வின் அனுகூலம் எனலாம். சூழல் பகுப் பாய்வின் அடிப்படையில் அகச்சூழல் காரணி களாக பலங்கள், பலவீனங்கள் ஆகியவற்றை யும் புறச்சூழல் காரணிகளாக வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் முதலியவற்றையும் குறிப்பி டலாம்.

நிறுவனமொன்றின் அகச்சூழல் காரணிக ளான பலங்கள், பலவீனங்கள் ஆகியவற்றை நிறுவனமொன்று கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் அதேவேளை, நிறுவனமொன்றின் புறச்சூழல் காரணிகளான வாய்ப்புக்கள், அச்சு றுத்தல்களை நிறுவனமொன்று கட்டுப்ப டுத்த முடியாததாக இருக்கும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஏனெனில் நிறு வனமொன்றின் பலங்கள், பலவீனங்கள் போன்றவை நிறுவனத்தின் உள்ளே அதாவது நிறுவனம் சார்ந்ததாகவும், நிறுவ னத்தினால் தோற்றுவிக்கப்படுபவையாகவும் காணப்படுவதனால் நிறுவனமானது அவற்றில் காணப்படும் சார்பான மற்றும் எதிரான காரணி களைக் கண்டறிந்து அதற்கேற்ப தன்னை மாற் றியமைக்கவோ, தயார்படுத்திக் கொள்ளவோ முடியும்.

ஆனால், நிறுவனமொன்றின் வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றவை நிறுவ னத்தினாலன்றி, நிறுவனத்திற்கு வெளியே உள்ள புறச்சூழல் காரணிகளினால் தோற்றுவிக் கப்படுவதனால் நிறுவனமானது அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலை காணப்படு கின்றது. எனினும், புறச்சூழலால் தோற்றுவிக் கப்படும் வாய்ப்புக்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், அச்சுறுத் தல்களுக்குச் சரியான முறையில் எதிர்கொள்ளக் கூடியவாறு தந்திரோபாயமாகச் செயற்படுவ தன் மூலமும் அவ்வச்சுறுத்தல்களில் இருந்து தன்னை நிலைத்திருக்கச் செய்வதன் மூலம் நிறுவனமானது தனது நோக்கத்தை அடைந்து கொள்ள முயற்சிக்க முடியும். அகச்சூழல் காரணிகளான பலங்கள் மற்றும் பலவீனங் கள் போன்றனவும் புறச்சூழல் காரணிகளான வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன் றனவும் எவ்வாறான விடயங்களை எடுத்துக் காட்டுகின்றன என்பதனை அட்டவணை 1 எடுத்துக் கூறுகின்றது.

## அட்டவணை *1*
## சூழல் காரணிகள்

| சூழல் | சூழல் காரணிகள் | விபரம் |
|---|---|---|
| அகச் சூழல் | பலங்கள் (Strengths) | நிறுவனமொன்று அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு உதவும் வகையில் காணப்படுகின்ற, நிறுவனம் தொடர்பான உள்வாரிக் காரணிகளையும், இயல்புகளையும் எடுத்துக் காட்டுவது. |
| | பலவீனங்கள் (Weaknesses) | நிறுவனமொன்று அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு இடையூறாக அமையும் வகையில் காணப்படுகின்ற, நிறுவனம் தொடர்பான உள்வாரிக் காரணிகளையும், இயல்புகளையும் எடுத்துக் காட்டுவது. |
| புறச் சூழல் | வாய்ப்புக்கள் (Opportunities) | நிறுவனமொன்று அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு உதவும் வகையில் காணப்படுகின்ற, நிறுவனம் தொடர்பான வெளிவாரிக் காரணிகளையும், இயல்புகளையும் எடுத்துக் காட்டுவது. |
| | அச்சுறுத்தல்கள் (Threatens) | நிறுவனமொன்று அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு இடையூறாக அமையும் வகையில் காணப்படுகின்ற, நிறுவனம் தொடர்பான வெளிவாரிக் காரணிகளையும், இயல்புகளையும் எடுத்துக் காட்டுவது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு *1*

**சூழல்க் காரணிகள் சாத்தியமான மற்றும் சாத்தியமற்ற நிலைமைகள்**

| | பலங்கள் (S) | பலவீனங்கள் (W) |
|---|---|---|
| வாய்ப்புக்கள் (O) | SO 1 | WO 2 |
| அச்சுறுத்தல்கள் (T) | ST 3 | WT 4 |

நிறுவனமொன்றின் அக மற்றும் புறச் சூழல் காரணிகள் தொடர்பில் காணப்படும் நான்கு நிலைமைகள் உரு 1இன் மூலம் எடுத் துக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலைமைகள் தொடர்பான நிலையை பின்வருமாறு எடுத்துக் கூறலாம்.

| நிலைமைகள் | விளக்கம் |
|---|---|
| **SO 1** | இந்நிலைமையானது நிறுவனமொன்றிற்கு மிகவும் பிரகாசமான ஒரு நிலையை உருவாக்கும். அதாவது, இந்நிலைமையில் நிறுவனமொன்றிற்கு பலமும், வாய்ப்புக்களும் காணப்படுவதனால் இந்நிலையை நிறுவனமானது நன்கு பயன்படுத்தி உடனடியாக முழுமையான பயன்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். |
| **WO 2** | இந்நிலைமையானது நிறுவனமொன்றிற்குப் பிரகாசமானது எனக் கூற முடியாததாகும். ஏனெனில், இங்கு நிறுவனத்திற்கு வெளியே அதாவது, புறச்சூழலில் வாய்ப்புக்கள் காணப்படுகின்றபோதும் நிறுவனமானது அகரீதியாக பலவீனமான ஒரு நிலையில் காணப்படுவதனால், முதலில் அப்பலவீனங்களை இல்லாதொழிப்பதற்கு நிறுவனமானது முழுமையான முயற்சி எடுத்தல் வேண்டும். அவ்வாறு அப்பலவீனங்களை இல்லாதொழித்ததன் பின்னரே வாய்ப்புக்களை நோக்கி முன்னேறுதல் வேண்டும். |
| **ST 3** | இந்நிலைமையும் WO 2 போன்றதேயாகும். அதாவது, நிறுவனமொன்றிற்குப் பிரகாசமானது எனக் கூற முடியாததாகும். ஏனெனில், இங்கு அகரீதியாகப் பலங்கள் காணப்படுகின்றபோதும் நிறுவனத்திற்கு வெளியே அதாவது, புறச்சூழலில் நிறுவனமானது அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டிய ஒரு நிலையில் காணப்படுவதனால், முதலில் அவ்வச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நிறுவனமானது முழுமையான முயற்சி எடுத்தல் வேண்டும். அவ்வாறு அவ்வச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து அவற்றைப் பகுப்பாய்வு செய்து அதற்கேற்பத் தனது பலங்களைப் பிரயோகித்து முன்னேறுதல் வேண்டும். |
| **WT 4** | இந்நிலைமையானது நிறுவனமொன்றிற்கு மிகவும் பாதகமான ஒரு நிலையாகும். அதாவது, அகரீதியாக பலவீனங்கள் காணப்படும் அதேவேளை நிறுவனத்திற்கு வெளியேயும் அதாவது புறச்சூழலில் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி நிற்கின்றது. எனவே, இப்பலவீனங்களை நீக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அச்சுறுத்தல்கள் நீங்கும் வரை காத்திருத்தல் வேண்டும். அத்துடன், இக்காலப்பகுதியில் நிலைத்திருப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடுதல் வேண்டும். |

அவ்வகையில், நிறுவனமொன்று தொடர்பான பலங்கள் மற்றும் பலவீனங்களை அகச்சூழல் காரணிகளாகவும், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத் தல்களை புறச்சூழல் காரணிகளாகவும் இப்பகுப்பாய்வு ஏற்றுக் கொண்டு குறிஞ்சிக் குமரன் கோவிலின் சூழல் நிலைமைகள் தொடர்பாக இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.குறிஞ்சிக் குமரன் கோவிலும் சூழல் பகுப்பாய்வும்

குறிஞ்சிக் குமரன் கோவிலும் ஒரு சமூக நிறுவனமேயாகும். எனவே, அதற்கும் அகச்சூழல், புறச்சூழல் என்பன காணப்படுகின்ற அதேவேளை அவற்றின் தாக்கம் கோவிலின் நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.

### 4.1.குறிஞ்சிக் குமரன் கோவிலும் அகச்சூழலும்

குறிஞ்சிக் குமரன் கோவிலின் அகச்சூழல் காரணிகளான பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றை பின்வருமாறு எடுத்துக் கூறலாம்.

பலங்கள்:

1.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் இந்து மாணவர்களும், பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமும்.

2.பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் இந்து விரிவுரையாளர்களும், ஊழியர்களும்.

3.பொறுப்பாண்மைக் குழு.

4.பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய இந்துப் பட்டதாரிகளும், இந்துப் பட்டதாரிகள் சங்கமும்.

பலவீனங்கள்:

1.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் இந்து மாணவர்களின் அக்கறையின்மையும், அர்ப்பணிப்பி ன்மையும்.

2.பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் இந்து விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களின் அக்கறையின்மையும், அர்ப்பணிப்பின்மையும்.

3.குறித்த சில உற்சவங்கள் தாமதமாக முடிவடை கின்றமை.

4.பேராதனை மற்றும் கண்டி வாழ் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் கோவிலுக்கான வருகை குறைவாகக் காணப்படுகின்றமை.

5.அதிகரித்த வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்கள்.

6.அண்மைக்காலத்தில் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் பெரும் பாலான இந்துப் பட்டதாரிகள், இந்துப் பட்டதாரிகள் சங்கத்தில் இணைந்து கொள்ளத் தவறுகின்றமை.

7.பல்கலைக்கழக நிர்வாகத்திடமிருந்து முழுமை யான ஆதரவைப் பெறத் தவறுதல்.

8.இந்து கலாசார அமைச்சுடன் நெருக்கமான உறவின்மை.

9.அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நெருக்கமான உறவின்மை.

10.மத்திய மாகாண இந்து மாமன்றத்துடன் நெருக்கமான உறவின்மை.

11.இந்து மாணவ சங்கச் செயற்பாடுகளில் அதன் பெருந் தலைவர், பெரும் பொருளாளர் மற்றும் பொறுப்பாண்மைக் குழு ஆகியோரின் வழி நடாத் தல்களிலும் பார்க்க குறித்த ஒரு சில தனிப்பட்ட குழுவினர்களின் தவறான வழிகாட்டல்கள்.

குறிஞ்சிக் குமரன் கோவிலின் அகச்சூழல் காரணிகளான பலங்கள் எவை? பலவீனங்கள் எவை? என்பது மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அந்தவகையில் குறிஞ்சிக் குமரன் கோவில் தொடர்பாக மேலே எடுத்துக் காட்டப்பட்ட பலங்களானவை, கோவிலானது அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு உதவும் வகையில் காணப்படுகின்றன,

எனினும், குறிஞ்சிக் குமரன் கோவில் தொடர்பாக மேலே எடுத்துக் காட்டப்பட்ட பலவீனங்களானவை, கோவிலானது அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்குப் பாரிய இடையூறுகளாக அமைந்து காணப்படுகின்றது. இப்பலவீனங்கள் அகச்சூழல் காரணிகள் என்ற வகையில் கட்டுப்படுத்தக்கூடியவையாக அல்லது இல்லாதொழிக்கப்படக் கூடியவையாகவே காணப்படுகின்றன. அந்தவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் முதலாவதாகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் இந்து மாண வர்களது அக்கறையின்மையையும், அர்ப்ப ணிப்பின்மையையும் பின்வருமாறு எடுத்துக் கூறலாம். பல்கலைக்கழகத்தில் காணப்படும் எட்டுப் பீடங்க ளிலும் இந்து மாணவர்கள் கல்வி கற்கின்ற பொழுதிலும் கோவிலின் பெரும்பா லான நித்திய, நைமித்தியக் கடமைகளிலும், இந்து மாணவ சங்க நடவடிக்கைகளிலும் பொறியியற் பீட மாணவர்களின் பங்களிப்புக் களே மிகமிக அதிகமாகக் காணப்படுகின் றது. பொறியியற் பீட மாணவர்களிலும் குறித்த ஒரு பகுதியினரே கோவில் கடமைகளில் அக்கறை காட்டுகின்றனர். எனவே, கோவில் நடவடிக்கைகளிலும், இந்து மாணவ சங்கச் செயற்பாடுகளிலும் ஏனைய பீட மாணவர்க ளின் பங்களிப்பென்பது எதிர்காலத்தில் அவசி யமாக வேண்டப்படுவதாகக் காணப்படுகின்றது. எனவே, சகல பீடங்களைச் சேர்ந்த மாண வர்களும் இக்கோவிலானது தமது கோவில் என்ற மனஉணர்வுடன் எதிர்காலத்தில் பணியாற் றுவதன் மூலம் கோவில் செயற்பாடுகளைத் திறம்படக் கொண்டு நடாத்த முடியும்.

பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் இந்து விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களின் அக்கறையின்மையையும், அர்ப்பணிப்பின் மையையும் எடுத்து நோக்குவோமாயின், கோவில் தொடர்பாகக் காணப்படும் அமைப் புக்களான பொறுப்பாண்மைக் குழு, இந்து மாணவர் சங்கம் மற்றும் இந்துப் பட்டதாரி கள் சங்கம் ஆகியவற்றில் முக்கிய பதவிகளை வகிப்பதன் மூலம் கோவில் நிர்வாகம் மற்றும் அதன் செயற்பாடுகள் சுமுகமாக இயங்கவும், மாணவர்களை வழிநடாத்தவும் வேண்டிய பொறுப்பு பல்கலைக்கழக இந்து விரிவுரை யாளர்களையே சாரும். பல்கலைக்கழகத்தின் எட்டுப் பீடங்களிலும் இந்து விரிவுரையாளர்கள் கடமையாற்றுகின்ற பொழுதிலும் ஒரு சில இந்து விரிவுரையாளர்களே மீண்டும் மீண்டும் கோவில் தொடர்பான மேற்கூறிய அமைப்புக்களில் பதவி களை வகிக்க வேண்டிய நிலை காணப்படுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். குறிப்பாக ஏனைய பீடங்களுடன் ஒப்பிடும்பொழுது கலைப் பீடத்தில் பெரும் எண்ணிக்கையான இந்து விரிவுரை யாளர்கள் காணப்படுகின்ற பொழுதிலும் கோவில் தொடர்பான மேலே குறிப்பிட்ட அமைப் புக்களில் அவர்களின் பங்களிப்பு என்பது மிக வும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் கோவில் நடவடிக்கைகளில் அக்கறையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மேலே குறிப்பிடப்பட்ட இந்து விரிவுரையாளர்கள் என்பது நிரந்தர விரிவுரையாளர்களையே குறிப்பிடுகின்றது. இதற்கும் மேலாகப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களிலும் இளம் தற்காலிக இந்து விரிவுரை யாளர்களும் கடமையாற்றுகின்றார்கள். கோவில் தொடர்பான நடவடிக்கைகளில் இவ்விளம் தற்காலிக விரிவுரையாளர்களின் பங்களிப்பும் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, பல்கலைக்கழகத்தில் காணப்படும் சகல தற்காலிக மற்றும் நிரந்தர இந்து விரி வுரையாளர்களும் தமது சமூகப்பொறுப்பை உணர்ந்து செயற்படுவதன் மூலம் கோவிலின் செயற்பாடுகள் சுமுகமாக இயங்க வழிவகுக்க முடியும்.

கோவிலில் நடைபெறும் சில விசேட உற்சவங்கள் குறிப்பாக சூரன்போர், தைப்பூசம், திருக்கல்யாணம் போன்ற உற்சவங்கள் இரவு நேரங்களில் மிகவும் காலதாமதமாக முடிவடைவதனால் கோவிலுக்கு வரும் பல்வேறு தரப்பினரும் அசௌகரியப்படுவ தனை நீண்டகாலமாகக் காணக்கூடியதாகவுள் ளது. இது குறிப்பாகப் பல்கலைக்கழக மாணவி களையும், தூர இடங்களில் இருந்து வரும் பக்தர்களையும் பாதிப்படையச் செய்கின்றது. இது கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகும். இதனைத் தவிர்ப்பதன் மூலம் பல்கலைக்கழகச் சமூகத்தில் உள்ளவர்கள் மாத்திரமன்றி, மத்திய மாகாணத்தில் வாழும் கூடுதலான பொதுமக்களைக் கோவிலுக்கு வரச் செய்யலாம். குறிப்பாகப் பேராதனை, மற்றும் கண்டிவாழ் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் வருகையை அதிகரிக்கச் செய்யலாம்.

அடுத்து, இவ்வாலயத்திற்கு வந்து வழிபடும் பெரும்பாலான பக்தர்கள் பல்கலைக்கழக மாணவர்களும், விரிவுரையாளர்களுமேயாகும். இவர்கள் வேலைப்பழு நிறைந்தவர்கள். குறிப்பாக புதிய கல்வி முறைமையின் பின்னர் பருவ முறைமை (Semester system) தொடர்ச்சி யான மதிப்பீட்டு முறைமை (Continuous assessment system) போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக பல்கலைக்கழகத்தில் இவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு என்பது மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. அதேவேளை, குறிஞ்சிக் குமரன் கோவிலில் காணப்படும் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. இது பழைய கல்வி முறைமையில் பொருத்தமானதாகக் காணப்பட்ட போதும் புதிய கல்விமுறைமையின் கீழ் மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் சற்று இடையூறாகவே காணப்படுகின்றது. குறிப்பாக இக்கோவில் ஒரு முருகன் ஆலயமாகக் காணப்படுகின்றபோதிலும் இங்கு சிவன், சக்தி, விநாயகர், கிருஷ்ணர் போன்ற தெய்வங்கள் தொடர்பான உற்சவங்களும் கொண்டாடப்படுகின்றது. எனவே, மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் வேலைப்பழு மற்றும் கோவிலின் எதிர்காலம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு சிவன், சக்தி, விநாயகர், கிருஷ்ணர் போன்ற தெய்வங்களின் உற்சவங்கள் தொடர்ந்தும் கொண்டாடப்படுதல் வேண்டுமா இல்லையா என்பதில் பொறுப்பாண்மைக் குழுவும், இந்து மாணவர் சங்கமும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பது காலத்தின் தேவையாகும்.

கோவிலுக்காகப் பணியாற்றும் அமைப்பென்ற வகையில் குறிப்பாகத் திருப்பணிகளை மேற்கொள்ளும் அமைப்பு என்ற வகையில் இந்துப் பட்டதாரிகள் சங்கம் ஒரு முக்கியமான அமைப்பாகும். எனினும், அண்மைக் காலங்களில் இதில் அங்கத்தவர்களாகச் சேர்பவர்களது எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, அங்கத்தவர்களைக் கூடுதலாக இணைத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கூடுதலான அங்கத்தவர்களை இணைத்து தனது நிதியாற்றலைப் பெருக்கி இந்துப் பட்டதாரிகள் சங்கமானது கோவிலுக்குச் சிறந்த திருப்பணிகளை ஆற்ற முடியும். எனவே புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும், புதிய புதிய திருப்பணி வேலைகளில் ஈடுபடுவதற்கும் இந்துப் பட்டதாரிகள் சங்கமானது நடவடிக்கை மேற்கொள்வது அவசியமானதாகும்.

குறிஞ்சிக் குமரன் கோவிலானது, பல்கலைக் கழகத்திற் காணப்படும் இந்துக்களுக்கான வழிபாட்டுத் தலம் என்ற வகையில் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் சிறந்தவொரு தொடர்பைப் பேணுவதன் மூலம் கோவிலுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்க முடியும். குறிப்பாக இதில் பொறுப்பாண்மைக் குழுவின் பணி முக்கியமானதாகும். இதேபோல, இலங்கையின் இந்துத் தேசிய அமைப்பென்ற வகையில் இந்து கலாசார அமைச்சுடன் தொடர்புகளை அதிகரித்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வமைச்சின் கீழ் இவ்வாலயமும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோல அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் மத்திய மாகாண இந்து மாமன்றம் ஆகியவற்றுடனும் சிறந்த உறவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுதல் வேண்டும். இவ்விரு அமைப்புக் களினதும் பிரதிநிதிகள் குறிஞ்சிக் குமரன் கோவிலின் பொறுப்பாண்மைக் குழுவின் அங்கத்தவர்களாக இருக்கின்றபொழுதிலும் இவர்களை முழுமையாகப் பயன்படுத்தும் வேலைத் திட்டங்கள் பொறுப்பாண்மைக் குழுவிடம் காணப்படாதது பெருங்குறைபா டாகும். எனவே, இவர்களைப் பயன்படுத்தி ஆலயத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை வகுப்பதில் பொறுப்பாண்மைக் குழு அக்கறை செலுத்துதல் வேண்டும். அதன் மூலமும் கோவில் தொடர்பான பணிகளைச் சிறப்பாக முன்னெடுக்க முடியும். இவற்றில் பொறுப்பாண்மைக் குழுவானது கூடுதலான அக்கறை எடுப்பது கட்டாயமானதாகும்.

இந்து மாணவர் சங்கமானது பல்கலைக் கழக மாணவர்களுக்கான சங்கம் என்ற வகையில் பல்கலைக்கழக யாப்பிற்கு இணங் கச் செயற்படும் ஒரு அமைப்பாகும். எனவே அதன் செயற்பாடுகள் அந்த யாப்பிற்கு இணங்க நடைபெற வேண்டும். குறிப்பாக அதனை வழி நடாத்துவதில் பெரும் பொருளாளர் (ஒரு முதுநிலை விரிவுரையாளர்) முக்கிய வகிபா கத்தை ஆற்றுகின்றார். அதற்கும் மேலாகப் பெருந் தலைவரும் (ஒரு முதுநிலை விரி வுரையாளர்) காணப்படுகின்றார். இவர்க ளின் வழிநடாத்தலிலேயே இச்சங்கம் செயற்பட வேண்டும். பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் இப்பதவிகளை வகிக்க மறுப்பின் இச்சங்கம் இயங்க முடியாத ஒரு நிலை தோன்றும். அது கோவில் நடவடிக்கைக ளையும் பாதிக்கும். எனினும் அண்மைக் காலமாக இச்சங்கத்தின் செயற்பாடுகளில் அதன் பெருந் தலைவர், பெரும் பொருளாளர் மற்றும் பொறுப்பாண்மைக் குழு ஆகியோரின் வழி நடாத்தல்களிலும் பார்க்க குறித்த ஒரு சில தனிப்பட்ட குழுவினர்களினது தவறான வழி காட்டல்கள் பாரதூரமாகக் காணப்படுவது விரி வுரையாளர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத் துவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இது விரிவுரையாளர்களைக் கோவில் நடவடிக் கைகளில் இருந்து விலகிநிற்க வழிவகுக்கின் றது. இது தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பா கச் சில விசேட உற்சவங்களின்போது அவை தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் பொறுப் பாண்மைக் குழு, இந்து மாணவர் சங்கப் பெருந் தலைவர் மற்றும் பெரும் பொருளாளர் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்பதிலும் பார்க்க இந்து மாணவர் சங்க உறுப்பினர்கள் இத்தனிப்பட்ட குழுவினரது கருத்துக்களைக் கேட்டு அதன்படி செயற்படுவது விரிவுரையாளர் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். கோவில் நடவடிக்கைகள் தொடர்பான சகல தீர்மானங்களையும் மேற் கொள்ளும் அதி உயர் பொறுப்பு பொறுப் பாண்மைக் குழுவிடம் காணப்படுவது போல, பல்கலைக்கழக இந்து மாணவ சங்கத்தை வழிநடாத்தும் சகல பொறுப்புக்களும் இந்து விரி வுரையாளர்களையே (பெருந் தலைவர், பெரும் பொருளாளர்) சார்ந்ததாகும். எனவே, இந்து மாணவ சங்கத்தினர் பொறுப்பாண்மைக் குழு மற்றும் பெரும் பொருளாளர், பெருந்தலைவர் ஆகி யோரின் வழிநடாத்தலில் செயற்படுவதன் மூலம் கோவிலின் பல்வேறு நிர்வாகங்களும் சுமுகமாக இயங்க வழிவகுக்க முடியும். எனவே, தற்போது பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் விரிவுரையாளர்களும், தற்போது கல்வி கற்கும் மாணவர்களும் ஒன்றிணைந்து செயற்படு வதன் மூலம் இந்து மாணவர் சங்கமும், குறிஞ்சிக் குமரன் கோவிலும் பலமாக இருக்க முடியும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை யாகும்.

எனவே, கோவில் தொடர்பான அமைப்புக்க ளான பொறுப்பாண்மைக் குழு, இந்து மாண வர் சங்கம், இந்துப் பட்டதாரிகள் சங்கம் ஆகிய அமைப்புக்களும், பல்கலைக்கழகத்தில் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக இந்து விரிவுரையாளர்கள் மற்றும் சகல பீடங்களையும் சேர்ந்த இந்து மாணவர்களும் ஒன்றாக இணைந்து பணியாற்றி மேலே கூறப்பட்ட பலவீனங்களைக் களைவதன் மூலம் கோவில் சிறப்பாக இயங்க வழி வகுக்க முடியும்.

**4.2.குறிஞ்சிக் குமரனும் புறச்சூழலும்**

குறிஞ்சிக் குமரன் கோவிலின் புறச்சூழல் காரணிகளான வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் ஆகியவற்றை பின்வருமாறு எடுத்துக் கூறலாம்.

வாய்ப்புக்கள்:

1.அமைதியான சூழலில் அமைந்திருத்தல்.

2.கல்வி அமைச்சின் பாடப் புத்தகத்தில் (இந்து சமயம்) சேர்க்கப்பட்டுள்ளமை.

3.பல்கலைக்கழக நிர்வாகம்.

4.இந்து கலாசார அமைச்சு.

5.அகில இலங்கை இந்து மாமன்றம்.

6.மத்திய மாகாண இந்து மாமன்றம்.

7.இந்துப் பாரம்பரியத்தைக் கொண்ட பேரா தனை மற்றும் கண்டி வாழ் பொது மக்களும், வர்த்தகர்களும்.

8.இலங்கை உட்பட உலகின் நாலா புறமும் வாழும் இந்துக்கள்.

அச்சுறுத்தல்கள்:

1.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கொள்கைகள், பல்கலைக்கழகக் கல்வி முறைமை மற்றும் புதிய பல்கலைக்கழகங்களில் பொறியியற் பீடங்கள் உரு வாக்கப்படுதல்.

2.பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர்கள், இந்து விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்லுதல்.

3.அந்நிய உணர்வு.

4.இனரீதியாகப் பார்க்கும் பெரும்பான்மை மனோபாவம்.

5.கோவிலுக்கான போக்குவரத்து வசதிகள்.

6.நாட்டு நிலைமையும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதிகளின் அதிகரிப்பும்.

7.நன்கொடைகளும், அன்பளிப்புக்களும் குறைவடைந்து செல்கின்றமை.

குறிஞ்சிக் குமரன் கோவிலின் புறச்சூழல் காரணிகளான வாய்ப்புக்கள் எவை? அச்சுறுத்தல்கள் எவை? என்பன மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அந்தவகையில் குறிஞ்சிக் குமரன் கோவில் தொடர்பாக மேலே எடுத்துக் காட்டப்பட்ட வாய்ப்புக்களானவை, கோவிலானது அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு உதவும் வகையிலும், கோவிலை வெளியுலகிற்குப் பறைசாற்றும் வகையிலும் காணப்படுகின்றது. எனவே இவ்வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் மேலும், கோவில் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் சிறப்பாகக் கொண்டு நடாத்த முடியும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

எனினும், குறிஞ்சிக் குமரன் கோவில் தொடர்பாக மேலே எடுத்துக் காட்டப்பட்ட அச்சுறுத்தல்களானவை, கோவிலானது அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்குப் பாரிய இடையூறாக அமைந்து காணப்படுகின்றது. குறிப்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் புதிய கொள்கைகள், பல்கலைக் கழகக் கல்வி முறைமையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் போன்றன மாணவர்கள் கோவில் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடையாக அமைகின்றன.

மேலும், பல்கலைக்கழகத்தில் காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுப் பீடங்களிலும் கல்வி கற்கும் இந்து மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளும்போது அது எதிர்காலத்தில் குறைந்து செல்லக்கூடிய தன்மையே காணப்படுகின்றது. இது பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. தற்போது காணப்படும் இந்து மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு பீடங்களை இறங்கு வரிசைப்படுத்தின் அது பொறியியற் பீடம், கலைப் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், பல்மருத்துவ பீடம், விலங்கு மருத்துவ பீடம், மருத்துவ பீடம் என்றவாறாக அமையும். எதிர்வரும் காலங்களில் பொறியியற் பீடத்திற்கு வரும் இந்து மாணவர்களின் எண்ணிக்கையிலும் ஒரு வீழ்ச்சிப் போக்கை எதிர்பார்க்கலாம். அது தற்பொழுதே ஏற்படத் தொடங்கியுள்ளது. இதனை அட்டவணை 2 எடுத்துக் காட்டுகின்றது. இதற்குக் காரணம் தென் கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பொறியியற் பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளமையே ஆகும். அதேவேளை ஏனைய பீடங்களில் குறிப்பாக கலைப்பீடம், விஞ்ஞானபீடம் போன்றவற்றில் மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவு அதிகரித்துச் செல்லக் கூடிய ஒரு நிலை தோன்றுகின்றது. எனினும், ஒட்டுமொத்தமாக எதிர்காலத்தில் இந்து மாணவர்களின் எண்ணிக்கையானது வருடாந்தம் படிப்படியாகக் குறைவதற்கான வாய்ப்புகளே அதிகமாகும். இவ்வச்சுறுத்தல் தவிர்க்க முடியாததாகும். கடந்த காலங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வருடாந்தம் காணப்பட்ட இந்து மாணவர்களின் எண்ணிக்கையை பீட அடிப்படையில் அட்டவணை 2 எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 2

**பேராதனைப் பல்கலைக்கழகத்தில்**

**பீட அடிப்படையில் இந்து மாணவர்களின் எண்ணிக்கை (வருடாந்தம்)**

| பீடம் / ஆண்டு | இந்து மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2008இல் | 2009இல் | 2010இல் | 2011இல் | 2012இல் |
| விவசாயம் | 68 | 83 | 87 | 86 | 60 |
| இணைந்த சுகாதார விஞ்ஞானம் | 42 | 49 | 57 | 46 | 46 |
| கலை | 239 | 271 | 292 | 346 | 340 |
| பல் மருத்துவம் | 43 | 42 | 41 | 43 | 43 |
| பொறியியல் | 289 | 316 | 331 | 346 | 264 |
| மருத்துவம் | 20 | 18 | 16 | 21 | 21 |
| விஞ்ஞானம் | 75 | 93 | 109 | 112 | 112 |
| விலங்கு மருத்துவம் | 44 | 47 | 39 | 41 | 34 |
| **மொத்தம்** | **820** | **919** | **972** | **1046** | **925** |
| **விகிதாசாரம்** | **9.20** | **9.57** | **9.48** | **9.77** | **9.26** |

**Source:** University Statistical Hand Book (From 2008 to 2012)

இதேபோல பல்கலைக்கழகத்தில் காணப்படும் எட்டுப் பீடங்களிலும் கடமையாற்றும் நிரந்தர இந்து விரிவுரையாளர்களின் எண்ணிக்கையானது படிப்படியாகக் குறைவடைந்து செல்வதும் பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. கலைப் பீடத்தில் ஓரளவு நிரந்தர இந்து விரிவுரையாளர்கள் காணப்படுகின்ற பொழுதிலும் ஏனைய ஏழு பீடங்களிலும் நிரந்தர இந்து விரிவுரையாளர்களின் எண்ணிக்கையானது மிக மிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது. பீட அடிப்படையில் தற்போது காணப்படும் நிரந்தர இந்து விரிவுரையாளர்களின் எண்ணிக்கையை அட்டவணை 3 எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3

**பேராதனைப் பல்கலைக்கழகத்தில்**

**பீட அடிப்படையில் நிரந்தர இந்து விரிவுரையாளர்களின் எண்ணிக்கை**

| பீடம் | எண்ணிக்கை |
|---|---|
| விவசாயம் | 02 |
| இணைந்த சுகாதார விஞ்ஞானம் | 00 |
| கலை, | 21 |
| பல்மருத்துவம் | 02 |
| பொறியியல் | 05 |
| மருத்துவம் | 02 |
| விஞ்ஞானம் | 01 |
| விலங்கு மருத்துவம் | 01 |
| நூலகம் | 01 |
| **மொத்தம்** | 35 |

**Source:** Academic Establishment Branch, 2013 / 2012/2013 Academic Year Information

மேலும், இக்கோவிலானது பல்கலைக் கழகக் கோவில்தானே என்ற ஒரு அந்நிய உணர்வின் காரணமாக பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள பேராதனை, கண்டி மற்றும் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பொது மக்கள், வர்த் தகர்கள் போன்றோரின் வருகையும் ஆதரவும் குறைவாக இருப்பது ஒரு பாரிய அச்சுறுத்தலா கக் காணப்படுகின்றது. எனவே, இது பல்க லைக்கழகக் கோவிலாக இருந்தாலும் சகல இந்துக்களுக்கும் உரிய வழிபாட்டுத் தலம் என்ற உணர்வு அவர்கள் மத்தியில் கட்டி யெழுப்பப்படுவது கோவிலின் எதிர்காலத் திற்கு முக்கிய மானதாகும். ஏனெனில், ஏலவே குறிப்பிடப்பட்டது போல எதிர்காலத்தில், இந்து மாணவர்களும், இந்து விரிவுரையாளர்களும் பல்கலைக்கழகத்தில் குறைவடையும்போது இக்கோவிலை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு இக்கோவிலைச் சூழவுள்ள பேராதனை மற்றும் கண்டிவாழ் பொதுமக்களையும் வர்த் தகர்களையும் சாரலாம் என்பதனாலாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைந் துள்ள சகல மதங்களையும் சேர்ந்த வழிபாட்டுத் தலங்களினுள்ளும் மிகவும் சிறப்பாகவும் சுறுசு றுப்பாகவும் (busy) இயங்கும் ஒரு வழிபாட்டுத் தலமென பல்கலைக்கழக சமூகத்தினால் பாராட்டைப் பெற்ற கோவிலே குறிஞ்சிக் குமரன் கோவிலாகும். இவ்வாறு அது தொழிற்படுவ தன் காரணமாக இனரீதியான கோணத்துடன் நோக்கப்படுவது இக்கோவிலுக்கு ஒரு பாரிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. கடந்த காலத்தில் இவ்வின ரீதியான பார்வையின் வெளிப்பாடே 1977 மற்றும் 1983 இனக் கலவரங்களில் கோவில் சேதமாக்கப்பட்டதா கும். அதேபோன்று கோவிலுக்கு மிக அருகா மையில் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் ஜவர் ஜெனிங்ஸ் ஆண்கள் விடுதி அமைக்கப் பட்டதும், கோவிலின் முன்னால் பௌத்த கலாசார ஆராய்ச்சி மற்றும் தியான மண்டபம் அமைக்கப்பட்டதும் இவ்வின ரீதியான பார் வையின் வெளிப் பாடோ என எண்ணத் தோன் றுகின்றது.

மேலும், கோவிலானது மலை உச்சியில் அமைந்திருப்பதும், கோவிலுக்கான போக் குவரத்து வசதிகளின்மையும், நாட்டு நிலைமை சீரடைந்ததுடன் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளுக்கும் எந்நேரத் திலும் பிரயாணம் செய்யக்கூடிய போக்குவரத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளின் அதிகரிப்பும் மாணவர்கள் கோவில் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் விடுவதற்கு காரணமாகியுள்ளது. மேலும், அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுகளின் காரண மாக கோவிலுக்குக் கிடைக்கும் நன்கொடை கள் மற்றும் அன்பளிப்புக்கள் குறைவடைந்து செல்வதும் பாரிய அச்சுறுத்தல்களாக மாறி வருகின்றது.

இவ்வச்சுறுத்தல்கள் புறச்சூழல் காரணி கள் என்ற வகையில் கட்டுப்படுத்தப்பட முடியா தவையாகும். எனினும், இவற்றுக்கு முகங் கொடுக்கக் கூடிய வகையில் இந்து மாண வர் சங்கம், பொறுப்பாண்மைக் குழு மற்றும் இந்துப் பட்டதாரிகள் சங்கம் போன்றன தமது செயற்பாடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்திலும் குறிஞ்சிக் குமரன் கோவிலானது மிகவும் சிறப்பாக இயங்குவ தற்கு வழி சமைக்க முடியும்.

### 5.முடிவுரை

குறிஞ்சிக் குமரன் கோவிலானது தனக் குச் சார்பாகக் காணப்படும் பலங்கள் மற்றும் வாய்ப்புக்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலமும், தனக்கு எதிராகக் காணப்படும் பலவீ னங்களை அகற்றுவதன் மூலமும், அச்சுறுத் தல்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய வகையில் தந்திரோபாயமாக இயங்குவதன் மூலமும் தனது நோக்கத்தை அடைந்து கொள்ள முடியும். அந்தவகையில் கோவிலின் எதிர்கா லம் என்பது இந்து மாணவர் சங்கம், பொறுப் பாண்மைக் குழு மற்றும் இந்துப் பட்டதாரிகள் சங்கம் ஆகிய அமைப்புக்களிலும் அவ்வமைப் புக்கள் சார்ந்த இந்து மாணவர்கள், இந்து விரி வுரையாளர்கள், பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் ஆகி யோரின் கைகளிலேயே தங்கியுள்ளது. அவ்வாறாயின், இவர்களது அர்ப்பணிப்பான பணியின் மூலம் குறிஞ்சிக் குமரன் கோவி லானது தனது நோக்கத்தைத் தொடர்ந்தும் அடைந்து கொள்வதில் எவ்வித இடையூறு களையும் எதிர்நோக்கமாட்டாது என்பது திண் ணமாகும்.

**உசாத்துணைகள்:**


1.Julie Lewthwaite (2004) Operations Management & Business Studies, 4th Edition, New Delhi; Viva Books Private Ltd.

2.தர்மதாசன், வடிவேல்முருகன் (2013) வணிகத் திட்டம் (மொ.பெ), கண்டி ஈஸ்வரன் வெளியீட்டாளர்கள்.

3.குமாரசாமி சர்மா, பிரம்மஸ்ரீ இ. (2010) பேரா தனைக் குறிஞ்சிக் குமரன், யாழ்ப்பாணம் லக்ஷா பிறின்டேர்ஸ்.

4.சுதர்சன், செ., சனந்தனன், அ. (ப.ஆ) (2004) இந்து தருமம் - பேராதனைப் பல்கலைக்கழகக் குறிஞ்சிக் குமரன் கோவில் - அப்பல்கலைக்-கழகத்து இந்துத் தமிழ் மாணவரின் சமூகமத அசைவியக்கம் (கட்டுரை - கா.சிவத்தம்பி) பேராதனைப் பல்கலைக்கழகம் இந்து மாண-வர் சங்கம்.

5.http://members.tripod.com/-kurinchikkumaran (24th January, 2014, 05.30 a.m)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வேண்டும் குமரா....


செ.வர்மிளா
2ம் வருடம்
பொறியியல் பீடம்


அருள் வேண்டும் குமரா..
ஆறுதல் இன்றி அலையும் ஆன்மாக்கு
ஆறுதலைதரும் ஆறுமுகா
உன் திருவடி சரணமையா

மனம் எனும் மந்தி
லௌகிக இன்பத்தில் இச்சைகொள்கிறது
இன்பம் தருவது இறையருள் ஒன்றே
அறிந்தும் அங்கலாய்கிறது

கண்கள் பெற்றது
உலகழகை ரசிக்க அல்ல
குமரனின் திருக்கோல அழகை
கண்ணாரக்காண என
நம்பமறுக்கிற தென் கண்கள்

செவி கொண்டது
சேவற்கொடியோனே - உன்
திக்கோவில் மணியோசை கேட்க
நா பெற்றது
கந்தா உனை நாவாரப்பாட
இவைதம் கடமை மறந்து நிற்பதேனோ?

நின் காரியங்கள் அனைத்தும்
காரணத்துடன் என அறிந்தும்
வேதனை மிகுதியால் - மனம்
உனை வெறுக்க முயல்கிறது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரா...! போதும் இந்த வாழ்வு
அருள்கொடு முருகா - உன்
செங்கமலத் திருப்பாதத்தில்
எனக்கொரு இடம் கொடு

பிறவி எடுத்தேன், முற்பாவம் கழிக்க
ஆனால் ஏனோ கூடிச்செல்கிறது
என் பாவக் கணக்கு
பாவம் கழிக்க பிணிதந்தும்
பிணிதீர்க்கும் ஔடதம் இதுவென தேடுகிறது என் மனம்

என்னுடம்பது ஆலயமாய்
மனமாம் கருவறையதனில்
கந்தா உனை அமர்த்த முயல்கிறேன்
மும்மல இருளில் சிக்கிய கருவறைக்கு
இறையொளி தரவேண்டும் அழகா.

உறவுவிடுத்து உன்னடி சேர
அருள்வாய் குகனே
என்பிழையால் மறுபடி பிறந்தால்
அழகா உனை மறவா வரவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதத்தில் வெற்றிலையும் சந்தனமும்

ஆர்த்திகா விஜயலிங்கம்
2ம் வருடம்
பொறியியல் பீடம்

இந்து மதப் பண்டிகைகள், விஷேசம், விரதம், திருமணம் என அனைத்திலும் முக்கிய இடம் வகிப்பது வெற்றிலை. "துப்பி தழ்க்கேற்ற வாசனை தாம்பூலங்கள், இப்போது கொண்டு வைத்தேன். ஏற்றுக்கொண்டருள் தாயே" என்று மானஸப் பூஜையில்வரும் வரிகள் நெகிழச் செய்பவை.

கம்பராமாயணத்தில் உருக்கமான ஒரு கட்டம் இராவணனால் சிறை எடுக்கப்பட்ட சீதை, "இளம் வெற்றிலையை யார் மடித்து வாயில் போட இராமன் உண்பான்" என்று வருந்தினாளாம்.

மகாபாரதத்தில் தருமன் ராஜசூய யாகம் நடத்தியபோது முதல் தாம்பூலத்தை கண்ணன் பெற்றுக்கொண்டான் என்று சொல்கின்றது. திவ்விய பிரபந்தத்தில் உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் எம் பெருமான் என்றும் கண்களில் நீர் மல்கி என்று மனமுருகி பாடுகின்றார் நம்மாழ்வார்.

காளமேகப்புலவர் ஆதிநாளில் திருவானைக்கா கோயிலில்பரிசாரகராக இருந்தாராம். அங்கே தாசி யாக இருந்த மோகநாங்கி என்பவளின் அழகில் மயங்கி ஒருநாள் கோயில் பிரகாரத்திலேயே அவள் வருகைக்காக காத்திருந்த நிலையில் கண் அயர்ந்தார். நள்ளிரவில் அகிலாண்ட நாயகி அம்மன் அவர் முன்தோன்றி, தன் வாயில் இருந்த தாம்பூலத்தை அவர் வாயில் உமிழ்ந்தாளாம். அவர் அதைச் சுவைக்க, தெய்வப் பிரசாரமான தாம்பூலம் நாவில் பட்டதும் நாவன்மைபெற்ற காளமேகம் ஆசுகவி பாடுவதில் வல்லவரானாராம். இது போன்றே கூத்தனூரில் தேவி சரஸ்வதி தன் வாய் தாம்பூலத்தின் சாறை அளித்து ஒட்டகக் கூத்தரை கவி வித்தகர் ஆக்கியதாகவும் ஒரு வரலாறு உண்டு. வெற்றிலையை வாட விடுவது. வீட்டுக்கு சுகம் அல்ல என்பது நம்பிக்கை. வெற்றிலை, பாக்கை எப்போதும் வலது கையால் தான் வாங்க வேண்டும். மகிமை மிக்கதும், மங்களகரமானதுமான வெற்றிலை சுபீட்சத்தின் அடையாளமாகவே கருதப்படுகிறது.

நறுமணம் வீசும் சந்தனம் காலங்காலமாக இறைவனுக்கு உரிய பூஜைப் பொருளாக இருந்து வருகிறது. சந்தனம் குளிர்ச்சியானது என்பதால் நெற்றியில் இருக்கும் போது இரு நெற்றிப் பொட்டுகளுக்கு இடையே உஷ்ணத்தை குறைத்து, மூளையின் செயற்பாடுகளை தூண்டுவதோடு, துர்சக்திகள் நம்மீது படாமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது. சந்தணத்தில கமிடுதல் உடல் நலம் பெறுவதோடு மூளையை குளுமையாக்கி மனதை தெய்வீக நினைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தும்.

சந்தண மரங்களில் பல வகைகள் உண்டு. சித்தர்கள் மக்கள் நலன் கருதி ஆங் காங்கே நடுகின்ற சந்தண மரங்கள் அற்புத சக்தி கொண்டவை. பொதிகை மலையில் இவற்றை அதிகளவில் காணலாம்.

இயற்கையிலேயே மணம் வீசும் தன்மை கொண்ட சந்தணத்தைக் கொண்டு ஆண்டவ னைப் பூஜிப்பவர்களின் வாழ்கை யில் சுகந்தம் வீசும்.

சந்தண மரத்தில் சப்த ரிஷிகள் வாழ்வ தால் சந்தணம் அரைக்கும் போது அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காஸ்யபர், ஆஸ்கிரஸர் என்ற ஏழு ரிஷிகளின் நாமங்களை ஜெபித்து அவர்களின் ஆசி வேண்டி சந்தணம் அரைத்திடல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பாரம்பரிய மருத்துவம்
## ஒரு மருத்துவ சமூகமானிடவியல்ப் பார்வை

க.சயந்தன்
உதவி விரிவுரையாளர்
சமூகவியல்த் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

### அறிமுகம்

இக்கட்டுரையானது உலக மருத்துவ முறைகளில் மிகவும் பழமையானதும், அனுபவ பூர்வமானதும், இயற்கையானதும், தமிழர் மருத்துவமுமாகிய சித்தமருத்துவத்தினை மருத்துவ சமூகமானிடவியல் கண்ணோட்டத்தில் நோக்குவதாக அமைகின்றது. ஒரு இனத்தின் வரலாற்றை, அவர்களின் நாகரிகத்தை அளவிடும்போது பண்பாடு, கலாசாரம் பற்றியே மானிடவியல் ஆய்வுகள் சுற்றிநிற்கின்றன. நாகரிகம் எனும் விருட்சமானது பல்வேறு பக்கவேர்களைக் கொண்டதாக பரிணாமம் பெற்று விளங்குகின்றது. சிற்பம், ஓவியம், நாடகம், இசை, நடனம், மொழி போன்றன அடங்கிய கம்பன் கூறிய கலைகள் அறுபத்து நான்குடன் ஏனைய சுதேசிய பண்புகளையும் அவற்றின் வளர்ச்சியையும் கணிப்பது மானிடவியல் ஆய்வுகளில் மிகவும் முக்கியமானதாகும். இவையே மானிடவியலின் நேரடியான ஆய்வுப்பரப்பாகவும் காணப்படுகின்றன எனலாம்.

### இந்து மரபும் தமிழர் மரபும்

இந்து மரபில் பரம்பரை பரம்பரையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் இரு பாரம்பரிய மருத்துவ முறைகளாக ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்தினைக் குறிப்பிடலாம். தென் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழர்களின் பண்பாட்டின் சாரமாக உருவாகிய மருத்துவ வழக்கு சித்த மருத்துவமாகும். இதனால் இதனை தமிழர்களின் ஒரு இனக் குழும மருத்துவமாகச் (Ethno-Medicine) சொல்வதில் தவறேதும் இல்லை.

சித்த மருத்துவம் எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூறவியலாது. அது பாரம்பரிய மரபு முறைப்படி பரவி வந்துள்ளது. ஆயினும் தமிழ் மருத்துவ முறைகள் கி.மு 10000 முதல் கி.மு 4400 ஆகிய காலங்களில் தோன்றியதாக T.V. சாம்பசிவம் பிள்ளை குறிப்பிடுகிறார். இதனைப்பற்றி அவர் Tamil-English Dictionary of Medicine எனும் நூலிலே குறிப்பிடும்போது 'மனித இனத்திற்கு நலத்தை ஊட்டி ஆயுளை நீடிக்க செய்வதற்கென மருத்துவ முறையினை தமிழ் மொழியில் சிவபெருமான் உமையவளுக்கும், அவள் நந்தி தேவருக்கும், அவர் தன்வந்திரிக்கும், அவர் அஸ்வினித்தேவர்கட்கும் அவர்கள் அகத்தியருக்கும் அவர் புலத்தியருக்கும் அவர் சௌமியருக்கும் அவர் தேரையருக்கும் அவர் தம் வழிவந்த ஏனையோர்க்கும் இயம்பியதாக கூறப்படுகிறது' என்கின்றார். இது இந்துமதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் முழுமுதற்கடவுளான சிவனிலிருந்து தோன்றி பிற்பாடு தமிழர்களின் மரபார்ந்த மருத்துவமாக வளர்ச்சியடைந்தமாற்றினைக் குறிக்கின்றது.

சிவன்வழிவந்த சித்தமருத்துவத்தை சிவசம்பி ரதாயமுடையது என்று கூறுவதும் குறிப்பிடத் தக்கது. 'தென்னாடுடைய சிவனே போற்றி' எனத் தொடங்கும் வரிகள் தமிழ்நாட்டை மட்டுமே குறிக்கவில்லை. இலங்கையுட்பட்ட தென்ப குதியையே குறித்து நிற்கின்றது. ஏனெனில் குமரிக்கண்டத்தின் எஞ்சிய பகுதியே இன்றைய இலங்கை. இலங்கைத்தீவை இராவணன் ஆண்டுவந்தான் என்றும் அவன் ஒரு சிவ பக்தன் என்பதையும் பல்வேறு வரலாற்று நூல்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கி ன்றது. இவன் சிவபக்தன் என்பதுடன் ஒரு சிறந்த மருத்துவவியலாளன் என்பதை பல்வேறு சிங்கள இலக்கியங்களும் இயம்புகின்றன. இராவணன் பெயரிலே காணப்படுகின்ற நூல்கள் தற்போது சிங்கள மொழியிலே கிடைக் கக்கூடியதாக இருக்கின்றது. இதனால் தமி ழர்களின் புரதான வரலாற்றைச் சிதிலமடையச் செய்யும் ஒரு நோக்கில் இராவணனை சிங்கள வன் எனும் மரபும் காணப்படுகின்றது. இன்று காணப்படுகின்ற 'இராவணா சக்தி' என்ற சிங்கள இயக்கம் இதன் பின்னணியிலே தோற் றம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆயி னும், இலங்கையுட்பட தென்னிந்திய நாடுக ளில் சிவசம்பிரதாயமுடைய சித்தமருத்துவம் செல்வாக்குப்பெற்று விளங்கியதை வரலாற் றாசிரியர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் செய்கின் றார்கள்.

### சித்த மருத்துவமும் தமிழர்களின் வாழ்வியலும்

சித்தர் என்ற சொல்லுக்குச் சித்தமானவர்கள் என்றும் பொருள் உண்டு. அதாவது, சித் என்பது அறிவு. எனவே, சித்தர்கள் என்போர் சித்தை உடையவர்கள்: அறிவியலை ஞானமாக்கி யவர்கள் மனித வாழ்க்கைக்குச் சித்தமா னதைக் கண்டு உரைத்தவர்கள் அட்டமா சித்திகளைப் பெற்றவர்கள் மனம்,வாக்கு, காயம் ஆகியவற்றைப் பண்புறச் செய்து யோக, ஞான மார்க்கத்தைப் பின்பற்றிவாத வைத்தியத் துறையில் சிறந்து விளங்கியவர்கள் சிவ நெறி பூண்டு தூய ஒழுக்கம் நல்ல கொள்கைக ளைக் கடைப்பிடித்து எவ்வகைப் பொருளால் அழிகின்றது என்பதை ஊக்கத்தாலும், முயற் சியாலும் கண்டறிந்தவர்கள் என சித்தர்களி னைப்பற்றி அவர்களின் பெருமைகளைப்பற் றிக் கூறிக்கொண்டே போகலாம்.

சித்தர்கள் வகுத்ததாலும், அவர்களால் விருத்திசெய்யப்பட்ட மருத்துவமானது உடலை யும், உயிரையும் அழியாமல் காத்துச் சித்தி பெறச் செய்யும் மருந்து என்பதாலும் சித்த மருத்துவம் என அழைக்கப்படலாயிற்று. சிறந்த வாழ்வியல் முறையையே நோயெதிர்ப்பு மருந்தாகும் என சித்தர்கள் நம்பினார்கள். இதனால் உணவை உண்பதில் மருத்துவம் சார்ந்த நெறிமுறைகளை ஏற்படுத்தினார்கள். இவ்வாறு சித்தர்களால் ஏற்படுத்தப்பட்ட சில வழக்கங்களை இன்றைய காலப்பகுதியில் மூடநம்பிக்கையின் வெளிப்பாடு என்று விமர்சிப் பவர்களும் உள்ளனர். ஆயினும் சித்தர்கள் மானிடரின் ஆரோக்கிய வாழ்வுக்காக அறிவி யல்ரீதியான சில வழக்கங்களை ஏற்படுத்தினார் கள் என்பதை இந்து மதத்தின் வாழ்வியல் முறைமைகளைக் கடைப்பிடிக்கும் பண்புள்ள எவனும் ஏற்றுக்கொள்வான். ஏனெனில், தனி மனித ஒழுக்கமே தனிமனித ஆரோக்கியத் திற்கு வழிதரும் எனும் கொள்கையைக் கொண்ட ஒரு வாழ்வியல் முறையே இந்து மதம். சித் தர்கள் கூறும் வழக்கங்கள் அனைத்துமே கால வேறுபாடுகளுக்கப்பால் மனிதவாழ்க்கைக்கு அவசியமானவை என்பதனை இவ்வாழ்வியல் முறையானது தெளிவுபடுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, ஆடவர்கள் இடுப்பில் கட்டுகின்ற அரைஞாண்கயிறு ஒரு நோய்த் தடுப்பு முறையாக வந்திருக்கிறது என்பது இன்று பலருக்குத் தெரியாது. இதற்கு மருத்துவரீதியான விளக்கம் நிச்சயமாக இல்லாமல் என்றில்லை. அதாவது, ஆடவர்களுக்குப் பொதுவாக குடல் இறக்க நோய் வருவதுண்டு. அந்நோயைத் தடுக்கவே இடுப்பில் அரைஞாண் கயிறு முன்பெல்லாம் கட்டுகின்ற பழக்கம் தமிழர்களிடையே இருந்தது. பின்னர் அக்கயிறு வெள்ளிக் கொடியாக மாறியது. இன்றைக்கு அநாகரீகம் எனக் கருதி அரைஞாண்கயிறு கட்டுவதும் குறைந்து விட்டது. இதனால்த்தான் குடலிறக்க நோய்களால் அவதியுறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இதனை நினைத்துப்பார்க்கும்போது சித்தமருத்துவம் வலியுறுத்தும் பழக்கவழக்கங்கள் ஒவ்வொன்றும் வருமுன் காக்கும் நோய்த்தடுப்பு உபாயமாக இருப்பதனை அறியலாம். தமிழர்களிடம் காணப்படுகின்ற தனித்துவமான கலைகள், மரபுகள், ஒழுக்க விழுமியங்கள் அனைத்துமே சித்தர்களின் மருத்துவ சிந்தனைகளின் நிலையிலிருந்து முரண்படாதன.

உதாரணமாக இந்துக்களின் ஆன்மீக மரபில் விரதம் இருப்பது ஒருவகையில் சமய மருத்துவ முறையாகும் என்பது பலபேருக்குத் தெரியாது. ஆறுமுகநாவலர் உணவைச் சுருக்குதல் விரதம் என்கின்றார். வாரத்தில் ஒருநாள் மாதத்தில் பல நாள் பட்டினி இருப்பது அல்லது உணவு உண்ணும் தடவைகளைக் குறைப்பது உடலுக்கு நல்லது என்பது பழந்தமிழன் மருத்துவம். பட்டினி இருப்பதால் உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்ற முடிகிறது. நோய் எதிர்ப்பாற்றலை மிகுதிப்படுத்தலாம். நோய்க் கிருமிகள் பரவாமல் தடுக்கலாம். உடலில் உள்ள மோசமான கிருமிகளை அழிக்கலாம் என்பது ஒரு நம்பிக்கை. இவற்றை நினைவில் கொண்டுதான் தவஞானிகள் உண்ணா விரதத்தையும் பேசா விரதத்தையும் குறைந்தது வாரத்தில் ஒருநாளாவது பின்பற்றினர். இதன் காரணமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பெரும்பாலான இந்துக்களால் விரதநாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதெனலாம். இவற்றினையெல்லாம் எடுத்து நோக்குகின்றபோது தமிழரின் பாரம்பரிய மருத்துவம் அவர்களின் வாழ்வியல் முறையாக மாற்றம்பெற்றுள்ளது புலனாகின்றது. இவ்வாறு எத்தனையோ இந்துத்தமிழ் வழக்கங்களை நாகரிக வளர்ச்சியின் பாதையில் தொலைத்துவிட்டு பல நோய்களையும் தத்தெடுத்துக் கொண்டு இருக்கின்றோம் என்பதே நிதர்சனமானதாகும்.

பண்டைக்காலத் திராவிட மக்களாகிய தமிழர்கள், மருந்தையும் மருந்துப் பொருளையும் பயன்படுத்துவதில் வளர்ச்சியடைந்த நிலையில் சிறந்து காணப்பட்டார்கள் என்பதற்கு, சிந்துவெளி நாகரிகம் பற்றிய அகழாய்வில் கிடைத்துள்ள பொருட்கள் சான்றாக அமைகின்றன. இன்றைய தமிழ் மருத்துவர்களும் ஆயுர்வேத மருத்துவர்களும் மருந்துப் பொருளாகப் பயன்படுத்துகின்ற சிலாசித்து, மான் கொம்பு, பவளம் போன்ற மருந்துப் பொருட்கள் அங்கே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனால், வேத காலத்திற்கும் முன்பாகவே பழந்திராவிட மருத்துவம், இந்தியா முழுவதும் பரவி இருந்திருக்கிறது என்பதை அனுமானித்துக் கொள்ளலாம். அது பின்னாளில் மொழி, இடம், கொள்கை ஆகியவற்றிற்கேற்பப் பிரிந்து சித்த மருத்துவம், ஆயுர்வேதம் என இரண்டு நிலைகளில் வளர்ந்தது. இதில் சித்த மருத்துவம் தமிழர்களிற்கே உரிய வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து தமிழர்களின் மரபார்ந்த மருத்துவமாகவும் பண்பாட்டு அடையாளமாகவும் வளர்ச்சியடைந்தது.

சிந்துவெளி நாகரிக இனத்தின் பரம்பரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினர் என்று கருதப்படுகின்றவர்கள், தமிழ் நாட்டில் திராவிடர்களில் இன்றும் பிரபலமாக இருக்கின்ற சித்த வைத்திய முறையைப் பின் பற்றுகிறவர்கள் என்றும், இவர்களே, 'சைத் தவ நாகரிகத்தை' சேர்ந்தவர்கள்' என்றும் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் எனப் பேராசிரியர் எஸ். கே. இராமச்சந்திர ராவ் கூறுகின்றார். இதனைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, ஆயுர்வேத மருத்துவ முறையை விடவும், இந்திய மருத்துவ முறைகளில் மிகவும் தொன்மையான மருத்துவ முறையாக இருந்து, தொடர்ந்தும் பேணப்பட்டு வருவது தமிழர்களின் சித்த மருத்துவ முறை என்பது புலனாகின்றது.

தமிழர்களின் வாழ்வியல் நெறியானது தொன்றுதொட்டு இயற்கையோடு இயைந்ததாக இருந்த மாற்றினைச் சித்தமருத்துவத்தினூ டாகக் கண்டு கொள்ளலாம். இதனொரு அங்கமாகவே இயற்கையை மருந்தாக பயன்படுத்தி நோய்களைக் குணமாக்கும் சித் தத்தில் தேர்ந்து விளங்குகின்றார்கள். இயற்கையில் கிடைக்ககூடிய எண்ணற்ற புல், பூண்டு,மரம்,செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலியவை களைக் கொண்டும், நவரத்தின, நவ லோகங்களைக் கொண்டும், இரசம், கந் தகம், கற்பூரம், தாரம், அயம், பவளம், துருசு முதலியவைகளைக் கொண்டும், திரிகடுகு, திரிசாதி, திரிபலை, அரிசிவகை, பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு வகைகளாக வியாதிகளுக்கு, மழை நீர், கடல் நீர், ஊற்று நீர், கிணற்று நீர், முதலிய பல நீர் வகைகளைக் கொண்டும், பால், தேன், சீனி, நெய் முதலியன கொண்டும், தெங்கு, புங்கு, புண்ணை, வேம்பு, எள் முதலிய தாவர எண்ணெய் வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாக சித்தமருத்துவம் விளங்குகின்றது. இங்கு நாம் கவனிக்கவேண்டிய விடயம் யாதெனில் இயற்கையை வழிபடும் இந்துமரபுகூட ஒரு வகையில் அதன்மூலம் கிடைக்கும் மருந் தினாலும் தோன்றியிருக்கலாம். உயிரைக் காக்கப் போராடும் ஒரு வைத்தியரை நோயாளி ஒருவன் இன்று கடவுளாகப்பார்க்கும் நிலை யிருக்கும்போது, நோயை நீக்க பிரதிபலன் பாராது பலன்தரும் இயற்கையில் மானிடன் கடவுளைக்கண்டான் என்பதில் தவறேதும் இல்லையே.

சித்தமருத்துவமானது மருத்துவ சோதிட வியலை (Medical Astrology) ஒரு அங்கமாகக் கொண்ட வகையில் சமயசம்பிரதாயங்களோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. இந்து மதத்தில் ராசிகளும், நட்சத்திரங்களும், நவக்கிரகங்களும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றநிலையில் அதன் பின்புலத் தில் பெரியதொரு மருத்துவ உண்மை இருப்பதனை அறிந்துகொள்ளும் போது இந்து மதத்தின் விஞ்ஞானத்தன்மை ஏனைய மதங்களிலிருந்து வித்தியாசப்படுகின்றது. சித்த மருத்துவத்தில் நோயாளனின் சாதகத்தை அறிந்த பின்னர் அதற்கேற்ப சிகிச்சையளிக் கவேண்டுமென்று கூறப்படுவதில் நோய்க்கும் கிரகபலன்களுக்குமிடையே தொடர்பு இருப்ப தனைக் கிரகித்துக்கொள்ள முடிகின்றது. இத னாலேயே மருத்துவனுக்குரிய அடிப்படை அறிவுகளில் 'சோதிட அறிவினை' சித்தர்கள் வலியுறுத்தியிருந்தார்கள். ஆனால் இன்று நவீன சிந்தனைகளின் பெருக்கமிகுதியால் சோதி டமென்பது புறக்கணிக்கப்படும் நிலையில் சித்த மருத்துவத்தின் பூரணமான பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியாது இருக்கின்றது. எனவே இந்துக்களின் வாழ்வியல்முறையோடு இணைந்த வழிபாட்டு மரபுகளிலும் சித்த மருத் துவம் என்பது முக்கிய இடத்தினைப்பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்த மருத்துவமும் நவீன மருத்துவமும்**

சித்த மருத்துவத்தினை நாம் ஆழ்ந்து நோக்கும் போது நவீன விஞ்ஞானத்தின் முக்கிய பண்பான தருக்கம் (Logic) என்பதனை சந்தேகத் திற்கிடமின்றிக் காணலாம். தருக்கரீதியிலமைந்த காணுதல் (Observation) உய்த்துணருதல் (Inference), உரை (Hypothesis) என்ற மூன்று பிரமாணங்களை (Factors) அடிப்படையாகக் கொண்டதாக இது விளங்குகின்றது. தமிழர் பாரம்பரிய மருத்துவம் உலகிலுள்ள ஏனைய மருத்துவ மரபுகள் தோற்றம்பெற முன்னதாகவே மருத்துவத்தில் ஒரு முதிர்ச்சியை அடைந்திருந்தது என்பதனைச் சிந்துவெளி புதைபொருள் அகழ்வாராய்ச்சி முடிவுகள் எமக்கு காட்டி நிற்கின்றன. அதாவது, சிந்து, கங்கைச் சமவெளிகளில் வாழ்ந்திருந்த பழந்திராவிட மக்கள், அறுவை மருத்துவத்துக்காகச் செப்புக்கத்திகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பது தெரியவருகிறது. அறுவை மருத்துவத்துக்காகச் செம்பைப் பயன்படுத்தினால் அது பக்க விளைவுகளை ஏற்படுத்தாது என்னும் அறிவியல் உண்மையைப் பண்டைய தமிழர் அறிந்திருந்தனர் என்பது பெறப்படுகிறது. இதன்மூலம் தமிழர்கள் மொழியால் மட்டுமன்றி மருத்துவ அறிவாலும் செம்மையானவர்கள் என்பதை நாம் அனுமானித்துக்கொள்ளலாம்.

உடலானது ஐம்பூதங்களாலும் அப்பூதங்களின் தொகுதியான வளி (வாதம்), தீ (பித்தம்), நீர் (கபம்) எனும் உயிர்த்தாதுக்களாலும் ஆனது. இவற்றின் நிலையில் பிறழ்வுத்தன்மை ஏற்படும் போது உடலில் ஏற்படும் மாறுதல்களை அனுமானமாகக் கொண்டு நோய் ஏற்படுவதாக சித்தர்களின் நுண்ணறிவு குறிப்பிடுகின்றது. சித்தர்கள் நோய்களை உடல் நோய், உளநோய், உயிர் நோய், என மூன்று வகையாக வகைப்படுத்துவர். இம்மூவகை நோய்களைத் தீர்க்கவுமே தமிழ் மருத்துவத்தில் மருந்து என்பது பயன்படுத்தப்படுகின்றது. சித்த மருத்துவமானது மருந்து என்னும் ஒன்றோடு நிற்காமல் வாதம், யோகம் , ஞானம், எனும் பிற துறைகளையும் இணைத்து தமிழர் மரபாக வளர்ந்த ஒரு மருத்துவமுறையாகும். இன்று நவீன விஞ்ஞானமானது எத்தனையோ கருவிகளைக் கொண்டு குருதி, சிறுநீர் என்பவற்றைப் பரிசோதனை செய்து நோயறிகுறிகளை அறியமுற்படும் நிலையில் தமிழர் மருத்துவமுறை இலகுவான நோயறிதல் முறைகளை பல்லாயிரமாண்டுகளிற்கு முன்னர் நடைமுறைப்படுத்த தொடங்கியிருந்தது. உதாரணமாக, உடலில் நோய் அதிகமாக இருக்கிறதா என்பதை பரிசோதிக்க சித்தர்கள் கூறும் பரிசோதனை முறையினைக் குறிப்பிடலாம். காலையிலேயே சிறு நீரை கண்ணாடிப் பாத்திரத்தில் எடுத்து அதில் இரண்டு சொட்டு நல்லெண்ணையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் அதன் பின் அது எப்படி செயற்படுகிறது என்று கவனிக்கும்போது. எண்ணெய்த்துளி பாம்பு போல வளைந்து காணப்பட்டால் உடம்பில் வாதம் உள்ளது. மோதிரம் போல வட்டமாக இருந்தால் பித்த நோய் உள்ளது. முத்துப்போல நின்றால் கப சம்மந்தமான நோய் வந்துள்ளது. மேலும் எண்ணெய்த் துளி வேகமாகப் பரவினால் நோய் விரைவில் குணமாகும், மெதுவாகப் பரவினால் காலதாமதமாகும், அப்படியே இருந்தால் நோய் குணமாகாது. எண்ணெய்த் துளி சிதறினாலோ, அல்லது அமிழ்ந்துவிட்டாலோ நோயைக் குணப்படுத்த இயலாது என்றவாறு நோயறிதலைப் பாமர மக்களும் அறிந்துகொள்ளும்படி தெளிவுபடுத்தியிருந்தது.

தமிழ் மருத்துவச் சித்தர்கள், தலையில் உண்டாகும் நோய்களின் எண்ணிக்கை மட்டும் 1008 எனவும், உடல் முழுவதும் 4448 நோய்கள் உண்டாகுமென்றும் கூறுகின்றனர். தமிழ் மருத்துவ நூல்கள் முழுமையாகக் கிடைக்காத நிலையிலும், கிடைத்துள்ள நூல்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே மேற் கண்ட நோய்கள் அனைத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. இங்கு நாம் அறிந்து கொள்ளவேண்டிய முக்கியமானதொரு மானிடவியல் உண்மை ஒன்று தமிழ் மருத்துவத்தின் சிறப்பினை காட்டி நிற்கின்றது. அதாவது, மேற்கூறப்பட்ட நோய்களிற்கான பரிகாரங்களை சித்தர்கள் தமது வாழ்வியல் காலங்களிலே கண்டுபிடித்திருந்தனர். இன்று எத்தனையோ நோய்களையும் அவற்றுக்கான காரணங்களையும் பரிசோதனைமூலம் அறிந்தும்கூட பல நோய்களை பூரணமாக நீக்கும் மருந்துகளை கண்டுபிடிக்க முடியாமல் நவீன விஞ்ஞானம் தடுமாறுகின்றது. அகத்தியரதும் அவரது சீடர்களிலொருவருமாகிய இராமதேவரதும் வாழ்வில் நடந்த உண்மைச்சம்பவம் ஒன்று தமிழர்களின் மூலிகை மருத்துவத்தின் கைதேர்ந்த நிலையைக்காட்டி நிற்கின்றது.

அகத்தியரின் சீடனாக இராமதேவர் இருக்கும்போது சிவ பக்தனான பாண்டியமன்னனின் கூன்முதுகை மாற்றுவதற்கு அகத்தியர், சீடன் கொண்டுவந்த மூலிகைகளை இடித்து சாறு எடுத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி கொதிக்க வைத்தார். அப்பொழுது அரண்மனையிலிருந்து அழைப்பு வரவே, அகத்தியர் ஊமை சீடனை (இராமதேவர்) "அடுப்பைப் பார்த்துக்கொள்" என்று சாடை காட்டிவிட்டு சென்றார். மூலிகைச் சாறு நன்றாக கொதித்துக் கொண்டிருந்தது. சீடன் மிகவும் கவனமாக இருந்தார். கொதிக்கும் மூலிகைச் சாற்றின் ஆவி பட்டு ஆசிரமத்தின் மேல் கட்டப்பட்டிருந்த ஒரு வளைந்த மூங்கில் மெல்ல மெல்ல நிமிர்ந்தது. இதனால் சந்தோசப்பட்ட அகத்தியர் இராமதேவரது ஊமைத் தன்மையைப் போக்கி தமக்கு தெரிந்த வித்தைகளை எல்லாம் இராமதேவருக்கு (தேரையர்) போதித்தார். அவரின் உறுதுணையால் தேரையர் 'தொல்காப்பியம்' என்ற இலக்கண நூலை இயற்றி 'தொல்காப்பியர்' என்ற பெயரும் பெற்றார். இக்கதையின் மூலம் சித்தர்களின் மருத்துவம் எவ்வாறான வினைத் திறனுடையது என்பதை புரிந்துகொள்ளலாம். ஒரு வளைந்திருந்த மூங்கில் நேராவதற்கும், ஊமையொருவன் இலக்கண நூலை எழுதும் ஆற்றலைப் பெற்றான் என்பதும் ஒரு மருத்துவத்துறையினாலே சாத்தியமென்றால், அது தமிழர்களின் பாரம்பரிய சித்த மருத்துவத்தின் மருத்துவ நுணுக்கமே.

உலகில் ஆயுத உற்பத்தி மற்றும் விற்பனையை முதலாவது 'மாபியா' (Mafia) எனக் கொண்டால் இரண்டாவது மாபியாவை மருந்து உற்பத்தி (Pharmaceut ical Pruducts) செய்யும் நிறுவனங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையில் நுகர்வோரிடமிருந்து உற்பத்திச் செலவிலும் பார்க்க எத்தனையோ மடங்கு இலாபத்தை குறிக்கோளாகக் கொண்டே ஒரு மருந்து தயாரிக்கும் நிறுவனம் இயங்குகின்றது. மேலும், நவீன அல்லது ஆங்கில மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லாத மருந்து ஒன்று மிகவும் அரிதாகவே கிடைக்கின்றது. இதனைக்கூட ஒருசில மானிடவியல் ஆய்வுகள் நவீன மருத்துவத்தின் 'கள்ளத்தனங்களில் ஒன்று' என விபரிக்கின்றன. உதாரணமாக, ஒருவருக்கு குறித்த ஒரு மருந்தை பாவிப்பதனால் ஏற்படும் பக்க விளைவுகளை நீக்குவதற்கு இன்னொரு ஆங்கில மருந்தினை மருத்துவர் பரிந்துரை செய்ய வேண்டியிருக்கின்றது. இவ்வாறாக ஒவ்வொரு பக்கவிளைவும் மருந்து நிறுவனங்களிற்கு சாதகமான வகையிலே அமைந்து விடுகின்றது. இதனால் நவீன மருத்துவமென்பது முழுவதும் வர்த்தகமயமாக்கப்பட்டு வருகின்றது. இங்கு சேவை என்பது பொருளாதார நிலமையினை அடிப்படையாகக் கொண்டதாகவே பெரும்பாலும் அமைந்து விடுகின்றது. மனிதாபிமானமென்பது பொருளாதாரத்தினை விஞ்சமுடியாமல் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன மருத்துவத்தில் வைத்தியர் ஒருவர், மருந்து கொடுப்பவர் வேறொருவர் என்ற நிலை காணப்படுகின்றது. வைத்தியர் பரிந்துரைக்கும் மருந்துச்சிட்டில் உள்ள மருந்துகளின் பெயரினை மருந்தகங்களில் உள்ளவர்களால் இலகுவில் வாசித்தறியாவகையில் இருக்கின்றபோது தவறான மாத்திரைகள் வழங்கப்பட்டு கவனக்குறைவால் ஏறபடும் உயிரிழப்புகளும் நவீன மருத்துவத்துறையோடு பிணைந்துள்ளதைக்காணலாம். ஆனால் சித்த மருத்துவம் இவற்றினின்று மாறுபட்டது. செலவு குறைந்தது, பக்கவிளைவுகளற்றது, நேரடியாக மருத்தவரின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்படும். இதனால் சமூகத்தில் ஒரு தொகுதியினர் பின்னவீனத்துவ காலத்திலும், பாரம்பரிய மருத்துவ முறைகளை நாடிச்செல்வதனைக் காணமுடிகின்றது.

பல நீண்டநாள்ப்பட்ட நோய்களை உதாரணமாக மூட்டு வாதம், பக்கவாதம், நீரிழிவு போன்றவற்றை குணப்படுத்துவதில் ஆங்கில மருத்துவம் குறைபாடுடையதாகவே பல்வேறு ஆய்வுகளும் கண்டறிந்துள்ளன. நோயை விரட்டுவதற்கு இயற்கை வழி முறைகளைப் பின்பற்றுகின்ற வகையில் பாரம்பரிய தமிழர்களின் மருத்துவமான சித்தமருத்துவமானது மேலைத்தேய மருத்துவ முறைகளிலிருந்து வேறுபடுகின்றது. ஆங்கில மருத்துவமுட்பட எந்த வொரு மருத்துவ முறையும் தனியாக தொழிற்பட்டு இன்றைய காலத்தில் அனைத்து நோய்களையும் குணப்படுத்துவதில் வெற்றி காண முடியாது. சுதேசிய மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளுடன் ஆங்கில மருத்துவமும் இணைந்தவகையிலே மருத்துவப் பன்மைத்துவத்தைப் (Medical Plural ism) பெற்றுக்கொள்ளலாம். இப்பன்மைத்துவத்தை பிரயோகிப்பதன்மூலமே உலகில் எந்த நாட்டிலாயினும் நோய்களைக் குணப்படுத்துவதில் மருத்துவத்தின் உச்சப்பயனைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதே இக்கட்டுரையின் முடிவாகும்.

துரதிஸ்டவசமாக சித்தர்களினது மருத்துவ முடிவுகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் கண்டு கொள்ளாத அசமந்தப் போக்கினால் தீர்க்கமுடியாத பல நோய்களினால் நாம் அல்லல்பட்டு இழப்புக் களைச்சந்தித்து வருகின்றோம். தமிழர் பாரம்பிய மருத்துவம் தொடர்பான ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் சித்தமருத்துவமும் உலகிலே அதிகளவான பயன்பாட்டிற்கு உள்ளாகும் ஒரு மருத்துவத்துறையாக மாறும் என்பதில் சந்தேகமே இல்லை. எனவே சித்தமருத்துவம் தொடர்பான காத்திரமான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. கனகரத்தினம், ஆ. (1949) சித்த மருத்துவம் அல்லது சித்தாயுள் வேதம். சிலோன் பிறிண்டர்ஸ் லிமிடெட், கொழும்பு.
2. சண்முகராஜா, எ. (2000) இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம். சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம். கந்தரோடை, சுன்னாகம்.
3. சிவசண்முகராஜா, சே. (2002) சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம். 442 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.
4. Balaramiah, V. (1980) The Greatness of Siddha Medicine. Madras.
5. Kutumbiah, P. (1969) Ancient Indian Medicine, Orient Longman, Madras.
6. Marion Zimmermann. (2013) A Short Introduction: The Tamil Siddhas and the Siddha Medicine of Tamil Nadu. GRIN Verlag
7. Somasundaram, O. (1991) The Tamil Anatomy of happiness, anger, fear and bewilderment. Indian Journal of Psychological Medicine. p.p 65-67.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள இந்துமதம்

சிவராஜா கஜந்த்
3ம் வருடம்
பொறியியல் பீடம்

மனிதனின் உடல் உள ஆரோக்கியத்திற்கு கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளை மதங்கள் எடுத்துரைக்கின்றன. இந்துமதமும் இப்பணியைச் செவ்வனே செய்துவருகிறது.சூழலுக்கும் காலநிலைக்கும் ஏற்றவாறு மனிதனின் வாழ்க்கை முறைகள் வேறுபடுகின்றன. ஆனால் எல்லா வாழ்க்கை முறைகளிலும் அவற்றிற்குப் பொருத்தமான மேம்பாட் டிற்குரிய கருத்துக்களை இந்துமதம் சொல்கிறது. இதனால் தான் இந்துமதத்தில் அனேக கடவுள்கள். ஐவகை நிலத்திற்கும் ஒவ்வொரு கடவுள் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு கடவுள். செய்கின்ற வேலைகளுக்கு ஏற்றவாறு உணவுப்பழக்கங்கள் வேறுபடுகின்றன. வருந்தி உழைப்பவர்கள் போசாக்குள்ள உணவுகளை அதிகம் உண்ணவேண்டியிருக்கிறது. இதைஇந்துமதம் ஏற்றுக்கொள்கிறது. இதைத்தான் கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்துமதத்தில் "உனக்கு பன்றியைத்தான் உண்ணமுடிகிறதென்றாலும் பரவாயில்லை அதிகமாக உண்ணாதே கொழுப்பேறிவிடும் இதைத்தான் இந்துமதம் சொல்கிறது" என்றார். இந்துமதத்தில் கடவுளுக்குப் படையல் செய்யப்படுகிறது. உணவைக் கொடுத்ததற்கு இறைவனுக்கு நன்றி தெரிவிப்பது. அவரவர் உணவுப் பழக்கங்களுக்கேற்ப படையல் செய்வதை இந்துமதம் அனுமதித்தது. கடவுள் மக்களுக்கானவர். நீங்கள் என்ன உணவை உண்டாலும் பரவாயில்லை எனக்கு ஒரு "மரக்கறி பார்சல்" என்று கடவுள் சொல்வதாக இருந்தால் அது அபத்தம். நாம் கடவுளுக்குப் புறம்பானவர்கள் என்ற எண்ணத்தை இது உண்டாக்கும். உங்கள் உணவில் ஒரு பிடியை எடுத்துவையுங்கள் அதுதான் படையல் அது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. அதற்குப் பொருத்தமான கடவுளுக்குப் படையுங்கள். இதுதான் இந்துமதம் சொல்கிறது. முழுமையாக மாமிசம் உண்பவர்கள் கடவுளுக்கு மாத்திரம் சைவ உணவுகளை படைக்கவேண்டியதில்லை. அதற்குத்தான் வெவ்வேறு கடவுள். கடவுள் நல்லவராக இருப்பார் நடிக்கமாட்டார்.

கடவுள் இருக்கிறாரா என்பதற்கு யாரும் தெளிவாக பதிலளிக்கமுடியாது. மனிதனைவிட மேலாக நம்மைக் கட்டுப்படுத்தும் சக்தி ஒன்றிருக்கிறது அதுதான் கடவுள் என்பதே பலருடைய நம்பிக்கை. நடந்து செல்லும்போது தடுக்கி விழுந்தவன் பலமாக அடிபட்டு இறப்பதும் மிக வேகமாக மோட்டார் வண்டிகளில் சென்று மோதி விழுபவர்கள் சிறுகாயங்களுடன் தப்பிப்பதும் எவ்வாறு? நம் அறிவுக்கு எட்டியவரை வேகம் நேர்விகிதசமன் பாதிப்பு என்றுதான் சொல்வோம் இது ஆண்டவன் கணக்கு என்பது பலருடைய கருத்து. விஞ்ஞானிகள் சிலர் அவர்களுடைய பாணியில் ஐன்ஸ்டீனின் E=mc2 சமன்பாட்டில் பிரதியிடும்போது பிரபஞ்சத்தில் அழிந்த திணிவுகளின் 40% சக்தியைக் காணவில்லை அதுதான் கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார்கள். எப்படியிருந்தாலும் நம்மில் அனேகருக்கு கடவுள் தேவைப்படுகிறார். பிற ரால் நமக்குத் துன்பமிழைக்கப்படும்போது நியாயம் கேட்டுவிடலாம் ஆனால் நம்முடைய அனேகமான துன்பங்களுக்கும் மன உளைச் சல்களுக்கும் நாமே காரணமாகிறோம்

"யாரை நோவேன் யார்க்கெடுத்துரைப்பேன்
உன் னால்தான் எல்லாம்"

என்று இறைவனைத் திட்டித் தீர்த்து விடவேண்டியதுதான். நம் பிதற்றல்கள் அனைத்தையும் மௌனித்துக் கேட்டுக் கொண்டிருக்க அவனால் மட்டுமே முடியும். "இனிமேல் இப்படி ஏதாவது நிகழ்ந்தால் அவ்வளவுதான்" என்று மிரட்டிவிடுங்கள். மனம் அமைதியடைந்துவடும். அதேபோல வெற்றியின்போதும் உன்னால்தான் என்று நன்றி சொல்லிவிடுங்கள். "நான் வெற்றிபெற்றேன்" என்பது அகங்காரத்தை உண்டாக்கும் நமது வெற்றி என்பதில் பங்கு இருக்கிறது நமக்கும் கடவுளுக்கும்!

சிலருக்குக் கடவுள் தேவைப்படுவதில்லை. அப்படிப்பட்டவர்கள்தான் சித்தர்கள். அவர்க ளுக்குக் கடவுள் ஒரு ஆசிரியர். குறிப்பிட்ட விடயத்தில் சித்தியடைந்ததும் அவர்கள் கடவுளை நாடுவதில்லை. அவர்களின் பாடம் அஷ்டமாசித்திகள். இதில் ஒரு சித் தியையேனும் பெறுவதற்குரிய தகுதி சுய நலத்திற்காக இவற்றைப் பயன்படுத்தக் கூடா தென்பது. அவர்களுக்கு இன்பமுமில்லை துன்பமுமில்லை. ஆனால் குருவின் மீதான மரியாதை என்றுமுள்ளவர்கள். சித்தார்த்தர் என்கிற கௌதமபுத்தரும் வாழ்ந்தது சித்தர் களின் வாழ்க்கைதான் ஆனால் அவர் ஞானம் பெற்றது சொந்த அனுபவங்களினூடாக. இது ஒரு வித்தியாசமான வரம். அவரைப்போல இலகுவாக யாரும் ஞான நிலையை அடைந்துவிடமுடியாது. மனிதன் உன்னத நிலையை அடைய கடைப்பிடிக்கவேண்டிய கிட்டத்தட்ட 30000 படிமுறைகளை அவர் சொன்னார். ஆனால் ஒரு சாதாரண மனி தன் இவற்றை ஞாபகம் வைத்திருப்பதே கடினம். அதனால்தான் இந்துமதம் சாதா ரண மனிதர்களுக்கு வாழ்வியலையும் துற விகளுக்கு ஞானநிலையையும் காட்டுகிறது.

இந்துமதத்தில் மூட நம்பிக்கைகள் அதிகம் என்று சொல்பவர்களுண்டு. இந்துமதம் சொல்கின்ற ஒவ்வொரு விடயத்தின் பின்னணியிலும் நமக்குத் தெரிந்த தெரியாத அனேக விடயங்கள் பொதிந்திருக்கின்றன. நம் முன்னோர்கள் தமது பிள்ளைகளுக்கு அன்பையும் ஆன் மிகத்தையும் உணவுடன் ஊட்டினார்கள். ஆனால் நாம் வாழ்வில் வெற்றிபெறுவது எவ்வாறு என்பதைத் தேடித்தேடி வாழ்வைத் தொலைத்துவிடுகிறோம். நம் மொழி, கலை, சமயம், கலாசாரம் என்பவற்றின் பெறுமதி நமக்குப் புரிவதில்லை. விஞ்ஞானத்தையும் ஆங்கிலத்தையும் மிகப்பெரிய சொத்துக்களாகப் பார்க்கும் மாயை நம் அறிவை மங்கலடையச் செய்திருக்கிறது. இன்றைய விஞ்ஞானம் சொன்ன, சொல்லாத நிறைய விடயங்களை இந்துமதம்எப்போதோ சொல்லிவிட்டது. அவற்றின் அர்த்தம் புரியாததாலும், அது விஞ்ஞானம் என்று சொல்லித்தரப்படாததாலும் நாம் அவற்றை மூடநம்பிக்கைகளாக்கிவிட்டோம். கற்பூரம் எரித்து தொட்டுக்கும்பிடப்படுவது அதன் புகையில் தொற்றுநீக்கக்கூடிய் சுவாசத்திற்குப் புத்துணர்ச்சியளிக்கக்கூடிய தன்மையுண்டு என்பதால். ஆனால் இன்று "புகையில்லாத சுத்தமான கற்பூரம்" என்று அச்சிடப்படுவதுதான் நம்மிடையே அதிக வரவேற்பைப் பெறுகிறது சுவர் கறுக்காது என்பதால்! மரங்களுக்கு பட்டுச்சாத்தி வழிபடுகிறார்கள் விட்டுவிடுங்கள்! மரங்களைக் காட்சிப் பொருட்களாகப் பார்க்கின்ற காலம் தொலைவிலில்லை அப்போது அம் மரங்கள் தேவைப்படும். காக்கைக்குச் சோறு வைப்பது, இறந்தவர்களுக்குத் திவசம் செய்வது போன்றவற்றினால் முன்னைய சந்த தியை நினைவுபடுத்தி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். அவர்கள் மீதிருந்த அன்பை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் இன்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெற்றோர் பிள்ளைகளைச் சந்திப்பது குறைவு. சிறுவர் இல்லங்களிலேயே பிள்ளைகள் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். தம் தேவைகளை எவ்வாறு நிறை வேற்றிக்கொள்வது என்பதுதான் அவர் களின் வாழ்க்கைப் பாடம். அவர்கள் வளர்ந்து பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடுகின்றனர். அவர்களில் தவறில்லை: அன்பு, பாசம் என்ன வென்பது அவர்களுக்குத் தெரிந்திராது. மற்றவர்களைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. மற்றவர்களுக்கு நிகழ்வ தெல்லாம் அவர்களுக்கு வெறும் செய்தி மாத் திரமே. சமூகத்தைப் பற்றிய சிந்தனை இருப்பதில்லை. நாமும் மெல்ல மெல்ல அபிவிருத்தியடைந்துவருகிறோம்! "தாய்ப் பன்றி இறந்துவிட பசியாலழுத குட்டிகளுக்கு சிவபெருமான் தாயாகிப் பாலூட்டினார்" என் பதன்மூலம் இந்துமதம் சொல்வது கடவுள் உயிர்கள் வருந்துவதைப் பார்த்திருக்க மாட்டார், உனக்கும் அந்த உணர்வு இருந் தால் நீ கடவுளை அண்மித்துவிடுவாய் என் பதைத்தான்.

மதங்கள் உருவாக்கப்பட்டது மனிதனை நல்வழிப்படுத்தவும் அவனுக்குச் சிறந்த வாழ் வியலை எடுத்துக்காட்டவும்தான். தவறான புரிந்துணர்வு காரணமாக சிலர் மதங்கள் பிரி வினையை உண்டாக்குகிறதென்று நினைக் கிறார்கள்.

**"அவரவர் தமதம தறி வறி வகை வகை**
**அவரவர் இறையவர் என அடி அமைண வர்கள்**
**அவரவர் இறையவர் குறைவிலர் இறை யவர்**
**அவரவர் விதி வழி அடைய நின்றாரே."**

என்கிறது நம் ஆழ்வார் பதிகமொன்று. 'ஒவ்வொருவரும் தமது சூழலுக்கும் வாழ்க்கை முறைக்குமேற்ப வெவ்வேறு கடவுள்களை வணங்குகின்றனர் அக் கடவுள்கள் யாவரும் ஒருவருக்கொருவர் குறைந்தவர்களல்லர். மனி தர்கள் அவர்கள் செய்யும் நன்மை, தீமை களுக்கேற்ப பலன்களை அனுபவிப்பார்கள்' என்பது இதன் கருத்து. உலகின் சில மதங் கள் ஓரிறைக் கொள்கையைக் கொண்டி ருந்தாலும் அவையெல்லாம் கடவுள் ஒரு வர் தான்: அவர்தான் இவர் என்று ஒரு கடவுளைச் சுட்டிக்காட்டின. ஆனால் இந்து மதம் சொன்னது "கடவுள் ஒருவர்தான் அவ ரைத்தான் நாம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கிறோமென்று!" மதங்களின் அடிப்படை யைத் தெரிந்துகொண்டால் தவறான எண் ணங்களை தவிர்க்கலாம்.

மனதில் நல்ல எண்ணங்களைக் கொண்டிருந்தால், கடவுளை முழுமையாக நம்பினால் நற்பலன்களை அடைவது திண் ணம். நம்பிக்கையும் விடாமுயற்சியும் தோற்றுப்போய்விடாது. கஷ்டத்திலிருப்பவர் களுக்கு உதவ நினைப்பவனுக்கு அதற் குரிய சக்தி வந்துவிடுகிறது. காலம் முழு வதும் அவன் கொண்டாடப்படுகிறான். மற்ற வர்களின் வாழ்த்துக்களாலேயே அவன் உயர்ந் துவிடுகிறான்.

அவனருளாலே அவன்தாழ் வணங்கி இனிய வாழ்வு பெறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பூசத் திருநாள்

**சஜிதா கிருஷ்ணபிள்ளை**
*1*ம் வருடம்
**பொறியியல் பீடம்**

முருகன் ஆலயங்களில் மட்டுமன்றி சிவ, வைணவ, அம்மன் கோயில்களிலும் தைப்பூசம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆயிரமாயிரம் அற்புதங்களை அள்ளித்தரும் உன்னத திருநாளான தைப்பூச நட்சத்திரத் தன்று, முதலில் நீரும், அதிலிருந்து உலகமும் உயிர்களும் தோன்றியதாக புராணங்கள் கூறு கின்றன.

முருகப் பெருமான் சூரசம்ஹாரம் செய்ய அன்னை உமையவளை வேண்டினார். உமை யவள் தன் சக்தியின் மூலம் ஜோதியை வேல் வடிவில் உருவாக்கி முருகனிடம் கொடுத்தார். இந்த வேல் பிரம்ம வித்தியா சொருபமானது என்று சாஸ்திரம் கூறும். அந்த வேல் பிறந்த நாள் தைப்பூசத் திருநாள் ஆகும்.

பூசநாளின் பிரதான தேவதை குருபகவான். கோள்களில் ஞானம் தருவபவர். அதுபோல் நட்சத் திரங்களில் பூச நட்சத்திரம் சிறப்பு வாய்ந்தது. ஆதலால் தைப்பூசத்தன்று புனித தீர்த்தத்தில் நீராடி, குரு பகவான் ஆகிய பிரகஸ்பதியையும், குருவின் குருவான ஸ்ரீ தட்சணாமூர்த்தியை யும் வழிபடுவதால் கல்வி ஞானத்தில் சிறந்து விளங்கலாம்.

பாம்பு கடித்து இறந்துபோன பூம்பாவை என்ற பெண்ணின் அஸ்தி கலசத்தில் இருந்து எழும்பும்படி பதிகம் பாடி ஞானசம்பந்தர் அவளை உயிர்ப்பித்தார். இந்த நிகழ்வு தைப்பூசத்தன்று நிகழ்ந்ததாக மயிலைக் கபாலீஸ்வரர் தல புராணம் கூறுகிறது. ஸ்ரீ வள்ளியை முருகப் பெருமான் திருமணம் புரிந்த நாள் தைப்பூச நன்நாள் என்று புராணம் கூறுகின்றது. தைப் பூசத் திருநாள் முருகப்பெருமானுக்கு உரியதாகப் போற்றப்பட்டாலும் தில்லைவாழ் நடராஜப் பெருமானுக்கும் உரியநாள் என்றும் புராணம் கூறுகின்றது.

ஆதிகாலத்தில் புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர், ஜைமினி முனிவர் ஆகிய மூவருடன் தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவர், முப் பத்து முக்கோடி தேவர்கள், முனிவர்கள் மற்றும் பக்தர்கள் அனைவரும் தரிசிக்கும் வகையில் உமையவ ளுடன் இறைவன் நடனம் ஆடினார். அதுவே ஆனந்த நடனம் ஆகும். இந்த அற்புத நிகழ்வு சிதம்பரத்தில் தைமாதத்தில் பௌர்ண மியுடன் கூடிய பூச நாளில் நடந்ததாக புரா ணம் கூறுகின்றது. தைப்பூச நன்நாளில் முருகப் பெருமான் எழுந்தருளிய தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். அவ் வழிபாட்டில் கலந்து முருகனை தரிசித்தால் புண்ணியம் சேரும் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயமும் நவீன பிரபஞ்சக் கொள்கையும்

ரோகினி இராமச்சந்திரன்
நான்காம்வருடம்
பொறியியல்பீடம்

நமது பிரபஞ்சம் எவ்வாறு தோற்றம் பெற்றது? அதன் தன்மை என்ன? அதன் தற்போதைய நிலை என்ன? எதிர்காலத்தில் அதற்கு என்ன நடை பெறும் என்பது தொடர்பில் பல கருதுகோள்கள் நவீன விஞ்ஞானத்தினால் முன்வைக்கப்பட்டாலும் நமது பிரப்பஞ்சமானது ஒருபெரு வெடிப்பினிலே (Big bang theory) தோற்றம் பெற்றது என்பது அவற்றில் முதன்மையானது.

அதன்படி நமது பிரபஞ்சமானது 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறிய துகள் வெடித்துச் சிதறியதில் இருந்து உருவானதாகவும் அது தொடர்ச்சியாக விரிவடைந்து செல்லும் போது ஏற்பட்ட வெப்பநிலை மாற்றங்களால் நட்சத்திரத் தொகுதிகளும் கோள்களும் உருவானதாகவும் அந்த விரிவடைதல் செயற்பாடு தற்போது தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் சொல்லப்படுகின்றது. ஈற்றில் அவ் விரிவடைதல் செயற்பாடு நிறுத்தப்பட்டு மீண்டும் இப்பிரபஞ்சமானது பழைய நிலைக்கு ஒடுங்கக்கூடும் (Big crunch) என்றும் நம்பப்படுகின்றது. இவ் ஒடுங்குதலும் விரிதலும் மீண்டும் மீண்டும் நடைபெறும் ஒரு செயற்பாடாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் ஐயுறுகின்றனர்.

இக்கோட்பாடு சரியானது என நாம் கருதின் இப்பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்து நட்சத்திரங்களும் கோள்களும் கரும் பொருட்களும் (Black matter) இந்தப் பூமிப் பந்தில் வாழும் அனைத்து உயிரினங்களும் ஒரு சிறிய துணிக்கையில் இருந்தே உருவாகியிருக்க வேண்டும். அவ்வாறெனில் இவ் அனைத்துப் பொருள்களின் அமைப்பிலும், இயக்கத்திலம் சிறிய துணிக்கையின் இயல்பே பிரதிபலிக்க வேண்டும். $E=mc^2$ என்ற விஞ்ஞான கோட்பாட்டிற்கு இணங்க திணிவும் சக்தியும் ஒரே பொருளின் இரண்டு அம்சங்களாகும் இக் கோட்பாடும் பிரபஞ்சம் எங்கும் ஒரே பொருள் வியாபித்து நிற்புதை உணர்த்தி நிற்கின்றது.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊன் ஆகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாடும்
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே"
(திருவாசகம், திருச்சதகம் 15)

என்ற திருவாசகமும் ஒரே பரம்பொருளே எங்கும் வியாபித்து இருப்பதை உணர்த்துகின்றது.

ஆதியந்தமில்லாதவனை, பிரளயத்திலிருந்து பிரபஞ்சத்தை சிருஷ்டி செய்கின்றவனை எண்ணிறைந்த வடிவமெடுத்திருப்பவனை அனைத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மூடிக் கொண்டிருப்பவனை அனுபூதியில் அறிகின்றவன் பாசங்களிலிருந்து முத்தியடைகின்றான்.

(சுவேதாஸ்வரத உபநிடதம் 5.13)

"யார் என்னை எல்லாவற்றும் எல்லாவற்றிலும்
என்னிடத்திலும் காண்கின்றானோ அவன் காட்சியினின்று
நான் மறைவதில்லை அவனும் என்
காட்சியின்றும் மறைவதில்லை.
(பகவத்கீதை, தியானயோகம், சுலோகம் 30)

வேறு வேறு உருவும் வேறு வேறு இயற் கையும்
நூறு நூறு ஆயிரம் இயல்பினது ஆகி ஏறு உடை ஈசன் இப்
புவ்னி உய்யக் கூறு உடை மங்கையும் தானும் வந்தருளி"
(திருவாசகம் கீர்த்தித் திருவகவல்)

மேலும் பல தேவார, உபநிடத புராணக் குறிப்புக்கள், ஒரே பொருளே எங்கும் விரவியிருப்பதாயும், வெவ்வேறு வடிவு எடுப்பதையும் தொடர்ந்து வலியுறுத் துகின்றன. இதைத் தான் மாணிக்கவாசகர் "மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறாய் வந்து அறிவாய்" என சிவபுரணத்தில் குறிப்பிட்டார் போலும்

பிரபஞ்சம் தோற்றத்துக்கும் பின் ஒடுக்கத்துக்கும் உள்ளாகின்றது என்பதை கிருஷ்ணபகவான் பின்வருமாறு கூறுகின்றார்.

நான் பிரபஞ்சம் முழுவதினுடைய தோற்றத்திற்கும்
ஒடுக்கத்திற்கும் காரணம்
(பகவத்கீதை, ஞானவிக்ஞான யோகம். சுலோகம் - 06)

பிரபஞ்சமானது எண்ணிறைந்த கோளவடிவான பொருள்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை அவை தொடர்ந்தும் விரிவடைந்து செல்கின்றன என்பதை மாணிக்கவாசகர் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் அளப்பரும் தன்மை
வளப் பெரும் காட்சி, ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூன்று ஒரு கோடியின் மேல்பட விரிந்தன"

(உண்டை - உருண்டை, பிறக்கும் - குவி யல்)
(திருவாசகம், திருவண்டப் பகுதி)

ஆயிரம் யுகம் பிரம்மாவுக்கு ஒரு பகல் என்றும் ஆயிரம் யுகம் அவருக்கு ஒரு இரவு என்றும் அறிபவர். இராப்பகலின் தத்துவத்தை அறிபவர் ஆகின்றனர். பகல் வரும் போது தோன்றா நிலையிலிருந்து தோற்றங்கள் யாவும் வெளிப்படுகின்றன. இரவு வரும் போது ஒடுக்கம் என்பதனுள் அவைகள் மறைகின்றன.
(பகவத்கீதை, அசப்ரம்பயோகம், சுலோகம் 17, 18)

இங்கே பிரம்மாவுக்கு ஒரு பகல் எவ்வாறு ஆயிரம் யுகம் நீளமுடையதாக இருக்கமுடியும் என்று நீங்கள் ஐயுறலாம். ஐன்ஸிடினின் பொதுச் சார்புக் கொள்கையின் (General relativity) பிரகாரம் வெவ்வேறு வேகங்களில் இயங்கும் இருபொருட்களில் இருப்பவர்கள் ஒரு செயல் இடம்பெறுவதற்கு பிரம்மா என்பதை நீங்கள் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் இயங்கும் சக்தி எனக் கருதின் இக் கூற்று சரி யானதே.

மேலும் பொதுச் சார்புக் கொள்கையின் பிரகாரம் ஒளியின் வேகத்தில் பயணம் செய்யும் ஒரு பொருளினுடைய காலம் மாற்றமடைவதில்லை. தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் பிரபஞ்சம் ஒளியினுடைய வேகத்திலும் அதிக வேகத்தில் விரிவடைந்து செல்கின்றது. எனவே பிரபஞ்சத்துக்கு வித்தாக அமைந்த துணிக்கையைப் பொறுத்த வரையில் அதன் காலமோ (t) இடமோ (d) மாற்றமடையவில்லை. அதாவது காலம் மற்றும் இடப்பெயர்ச்சி அச்சில் ஒரே புள்ளியிலேயே இருக்கிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரை அது விரிவடைந்து செல்கிறது. அதைத் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் சுலோகம் குறிப்பிடுகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

**"இந்தப் பிரமம் அசைகிறது. இது அசையாதிருக்கிறது இது அண்மையில் இருக்கிறது. சேய்மையில் இருக்கிறது அனைத்தின் உள்ளும் இது இருக்கிறது. அனைத்தின் புறத்திலும் இது இருக்கிறது.**

(ஈசாவாஸ்யோ உபநிடதம் 5)

ஆத்மா ஆனவர் அணுவுக்குஅணுவாயும் பெரியதற்கு எல்லாம் பெரியதாயும் இருக்கின்றார். உயிர்களின் உள்ளத்தில் அவர் வீற்றிருக்கின்றார். ஆசையற்றவன் துயரத்தில் இருந்து விடுபட்டவனாய் திரிகரண சுத்தியின் வாயிலாக ஆத்மாவினுடைய மகிமையை அறிகின்றான்"

(கடோ உபநிடதம் 2.20)

இவற்றை தவிர உண்மையில் இந்துமதம் பிரபஞ்ச வெளிக்கு அப்பால் என்ன உள்ளது என்பது பற்றியும் ஆராய விளைகின்றது.

"தோற்றத்துக்கு அப்பால் உள்ளது. பூரணம், தோன்றியுள்ளதும். பூரணம் பூரணத்தில் இருந்து பூரணம் வந்து பின்பு பூரணமே எஞ்சி நிற்கிறது.

(உபநிடதம் - 1)

உண்மையில் பிரம்மம் அல்லது பரம் பொருள் என்பது பிரபஞ்சத்திற்கு உள்ளும் பிரபஞ்சத்துக்கு அப்பாலும் வியாபித்துள்ளது. அந்த பிரம்மமே இப் பிரபஞ்சத்தின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் நிகழ்த்தி அதனைத் தாங்குகின்றது.

மேலே கூறப்பட்ட கோட்பாடுகளின் ஊடாக பிரபஞ்சம் பற்றிய புரிதலில் நவீன பௌதிகமும் இந்து மதமும் சமாந்தரமாகவே பயணிக்கின்றன என்பது ஓரளவுக்கு புலனாகின்றது.

குறிப்பு: இங்கு பிரமம் என்பது சிருஷ்டி தேவன் பிரம்மதேவரையும் பிரம்மம் என்பது எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராட்சம், மஞ்சள், துளசி

பவினா தவபாலன்
*1*ம் வருடம்
பொறியியல் பீடம்

### உருத்திராட்சம்

உருத்திராட்சத்தை சைவர்கள் எல்லோரும் அணிதல் வேண்டும்.உருத்திராட்சம் இந்து மதத் தின் புறச்சின்னமாகும். இதனை அணிந்திருந் தால் உருத்திரசொரூபம் ஏற்படும். அணிந்த வரை சிவனாக வழிபாடு செய்யலாம் என்று மகான்கள் கூறியுள்ளார்கள்.

இரத்த அமுத்தம், காமாலைநோய், இருத யநோய் என்பவற்றை நீக்குகின்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இதில் இருந்து இவை என்பதால் அழகுக்குக்கு மட்டும் அணி யப்படவில்லை. ஆத்மீக விஞ்ஞான பூர்வபலன் உண்டு என்பதை அறியலாம்.

### மஞ்சள்

மஞ்சள் இந்துக்களின் புனிதப் பொருள், தாலி செய்ய வசதியற்றவர்கள் தங்கள் மனைவிக்கு மஞ்சளைக் கட்டுவது வழக்கம். தற்பொழுது மருவி மஞ்சள் நூலில் தாலியைக் கோர்த்துக் கட்டுகின்றார்கள். மஞ்சள் நீர் வீட்டைச் சுத்திக ரித்து புனிதத் தன்மையை ஏற்படுத்தி தெய்வம் வாசம் செய்யும் இடமாக மாற்றுகிறது. இதனா லேயே மஞ்சள் மாவில் பிள்ளையார் பிடித்து வணங்கும் வழக்கம் நிலவுகின்றது. இது ஓர் மிகச் சிறந்த கிருமிநாசினி ஆகும். இதனை வீடுகள், கடைகள், காரியாலயங்களுக்கு தெளிக்கும் பொழுது அங்குள்ள நோய்க் கிருமி கள் எல்லாம் இறந்து விடும் என்று விஞ்ஞானி கள் கூறுகின்றனர். முன்னோர்கள் சவர்காரத் திற்குப் பதில் மஞ்சளையே பூசிக் குளித்தார்கள்.

### துளசி

கருந்துளசி, திருமாலையும் வெண்துளசி சிவ பெருமானையும் குறித்து வழிபாடு செய்த லைக் குறிக்கும். பொதுவாக வெண்துளசி நட்டு வழிபடும் வழக்கம் இப்பொழுது உண்டு. விஞ்ஞானிகள் மற்றத் தாவரங்களையும் பார்க்க துளசி 1600 மடங்கு அதிகமான பிரா ணவாயுவை ($O_2$) வெளிவிடுகின்றது என்று கூறுகின்றனர். வீட்டிற்கு முன் வளர்க்கும் பொழுது பிராண வாயு வீட்டிற்குள் அதிகமாகச் செல்லும். அதனால் மக்கள் நலமடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி கவிதைகளில் வேதாந்தம்

க.கனகதுர்க்கா
2ம் வருடம்
தமிழ் சிறப்புத்துறை

பழகுதமிழில் பாட்டிசைத்த பாரதி பாமர மக்களினதும் நெஞ்சங்களைத் தொட்டுச் செல்லும் வகையில் கவிபாடிய எட்டயபுரத்து எழில் கொஞ்சும் தமிழ்க் கவிஞன், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞனாக விளங்கிய பாரதியின் கவிதைகளில் மரபின் மீட்டுருவாக்க சிந்தனைகளையும் நவீன சிந்தனைகளின் உள்ளடக்கங்களையும் ஒரு சேர அவதானிக்கலாம். அவ்வகையில் பாரதியின் கவிதை என்னும் எண்ணக் கருவினுள் உள்ளடங்காத பொருள் எதுவுமே இல்லை எனலாம். ஓயாமல் கவிபாடும் அவனது நா,அதற்கு ஒத்துழைக்கும் அவனுள்ளம், பாரததேச எல்லைகளை மட்டுமல்ல இப் பாரினது எல்லைகளையும் தாண்டி பரம்பொருள் பற்றிப் பேசவைத்தது எனலாம். அவ்வகையில் பாரதி கவிதைகளில் வேதாந்தக் கருத்துக்கள் செறிந்திருப்பதை நாம் நோக்க முடியும்.

பாரதி கவிதைகளில் வேதாந்தக் கருக்கதுகளைப் பற்றி நோக்க விளையும்போது வேதாந்தம் என்றால் என்ன என்பது பற்றியும் நாம் நோக்குதல் அவசியம். மேலும் பாரதிக்கும் வேதாந்தத்திற்கும் இடையிலான தொடர்பு என்ன? தன் கவிதைகளில் பாரதி வேதாந்தக் கருத்துக்களைப் புகுத்த வேண்டியதன் அவசியம் என்ன? என்ற கேள்விகளும் எம்மனத்தில் எழுவது நியாயமே.

இவ் அடிப்படையில் நோக்கும் போது வேதாந்தம் என்பது வேதம் அந்தம் எனப் பரிந்து வேதங்களின் இறுதிப் பகுதியான ஞானகாண்டமாகிய உபநிடதங்கள் எனப் பொருள்படும். பாரதி அடிப்படையில் பிராமண குலத்தில் பிறந்தவனாதலால் வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசபுராணங்கள், வேதாந்த தத்துவங்கள், சித்தாந்தம் போன்ற சமய இலக்கியங்களில் அவனுக்கிருந்த ஈடுபாடு, பரீட்ச்சயம் என்பன அவனது கவிதைகளில் மேற்கண்ட தத்துவ சாராம்சங்களை உட்புகுத்தத் தூண்டியது. அவ்வகையில் வேத உபநிடதங்கள் தந்த சிந்தனையின் அடிப்படையில் பரம்பொருள் பற்றிய உண்மையை அறிந்து கொண்ட பாரதி உருவ வழிபாட்டை ஏற்றுக் கொண்டு அது தரும் உயரியசிந்தனையான கடவுள் நம்பிக்கையையும் ஏற்றுக்கொண்ட தன்மை தன் கவிதைகளில் வேதாந்தத்தை வெளிப்படுத்தக் காரணமாகியது எனலாம்.

அவ்வகையில் உபநிடதம் கூறும் தத்துவப் பொருள்களான பிரம்மம், ஆன்மா, பிரபஞ்சம் மற்றும் கன்மம், மறுபிறப்பு, முத்தி, முத்திக்கான வழிமுறைகள் என்பன பற்றிய கருத்துக்கள் பாரதி கவிதைகளிலும் உட்பொதிந்திருப்பது நோக்கத் தக்கது. பொதுவாக பாரதியின் பல கவிதைகளில் ஆன்மீக சிந்தனை ஊடுருவி நின்றாலும் குறிப்பாக யான், மது, அறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம், கடவுள் எங்கே இருக்கிறார், ஒளியும் இருளும் அக்கினிக் குஞ்சு, கண்ணன் பாட்டு, விநாயகர் நான்மணிமாலை, குயில் பாட்டு முதலான முப்பது கவிதைகளில் வேதாந்த சிந்தனையை ஆழமாக நோக்கமுடியும்.

**பிரமம் பற்றிய சிந்தனை**

வேத இறுதிப் பகுதியில் எழுந்த "ஏகம், ஷத், விப்ரா, வஹூதா, வதந்தி' என்ற உயர்தத்துவ மகா வாக்கியத்தின் சிந்தனையில் முகிழ்ப்புப் பெற்ற உபநிடதங்கள் பிரம்மம் பற்றிய சிந்தனையின் வெளிப்பாடுகளே ஆகும். அவ்வகையில் வேத, உபநிடதங்களை உள்வாங்கி அவை தந்த சிந்தனையின் அடிப்படையில் பரம்பொருள் பற்றிய உண்மையை அறிந்து கொண்ட பாரதி இறைநம்பிக்கை கொண்டு அதனைப் பாலகர் முதல் பெரியோர் வரை, பாமரர் முதல் கற்றோர் வரை அறிந்து கொள்ளும் வண்ணம் பாடல்களை யாத்தான்.

**"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்.."** என்றும்

**"தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு**

**தீங்கும் வரமாட்டாது பாப்பா"** என்றும் வரும் பாரதியின் கவிதைகள் உபநிடதம் கூறும் பிரமத்தின் நித்தியத் தன்மையை விளம்புவனவாகும். மேலும் வேதாந்தம் கூறும் பிரம்மமானது ஆதியும் அந்தமும் அற்றது. பூரணமானது, அனைத்துக்கும் ஆதாரமானது, சொற்பதம் கடந்த சோதியானது, மனத்தாலும் வாக்காலும் விளக்க முடியாதது என்கிறது. இதனைப் பாரதியார் தன் கவிவரி ஒன்றிலேயே தத்ரூபமாக விளக்குகின்றார்.

**"சொல்லாலும் மனத்தாலும் தொடரவொணாத பெரும் சோதி..."**

சாந்தோக்கிய உபநிடதத்தில் வரும் உத்தாலகர் சுவேதகேது என்போருக்கு இடையில் நடைபெற்ற உரையாடல் பிரமத்தின் சர்வவியாபகம் பேசுகின்றது. அக்கருத்தினை உள்வாங்கி பாரதி தன் கவிதைகளிலும் பிரமத்தின் சர்வ வியாபகம் பற்றி பேசுகின்றான்.

**"யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்**

**யாவிலும் நின்றிடும் தெய்வம்"**

என்றும், தன் இன்னொரு கவிதையான "கடவுள் எங்கே இருக்கின்றார்" என்ற கவிதையில்

**"வல்லபெருங் கடவுளில்லா அணுவொன்றில்லை**

**மகா சக்தி யில்லாத வஸ்து வில்லை...."**

என்று இறைவனுடைய சர்வ வியாபகத் தன்மையைப் பாடுகின்றான். மேலும் இவ் இறைவனே பல்வேறு நாம ரூபங்களால் அழைக்கப்படுகின்றான் என்கின்ற உபநிடத சிந்தனையை பாரதியார் தன் கவிதையான விநாயகர் நான்மணிமாலையில், "..விநாயக தேவனாய் வேருடைக் குமரனாய், அல்லா யேகோவா போன்ற ஏனைய மதத் தெய்வங்களாயும் நிற்பது ஓரே இறைவன் தான்" என்கின்றார்.

மேலும் உபநிடதங்கள் பிரமத்தை பிரபஞ்சத்துடன் இணைத்தே பேசியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. இதையே பாரதியின் கவிதையிலும் காணமுடிகின்றது. உபநிடதங்கள் பிரமத்தை உலகத்துடன் தொடர்புபடுத்தி பின்வரும் இரு நிலை களில் குறிப்பிடுகின்றன.

பிருக தாரண்ய உபநிடதமானது பிரம்மம் உடலிலிருந்து விடுபட்ட நிலைலைய நிஷ்பிரபஞ்ச நிலை என்கிறது. இந்நிலையையே சித்தாந்த சொரூப நிலை என்று குறிப்பிடுகின்றது. இந்நிலை நிஷ்பிரபஞ்ச நிலையில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் குணம், குறி, நாமம், ரூபம், வடிவம் அற்றவன். வேதாந்தம் சுட்டும் இறைவனின் இந்நிலையை பாரதியார்

**"எல்லையில்லாப் பொருள் ஒன்று – தான்**
**இயல்பறிவாகி இருப்பதும் ஒன்று**
**சொல்லுவார் உண்மை தெரிந்தோர்**
**இதைத் தூவொளி என்று தொழுவோர் பெரியர்"**
என்று குறிப்பிடுகின்றார்.

சாந்தோக்கிய உபநிடதமானது பிரம்ம உலகத்தோடு கூடிய நிலையை சப்பிர பஞ்சநிலை என்கின்றது. இந்நிலையில் உள்ள இறைவன் தஜ்ஜலன் என்று அழைக்கப் படுகின்றான். இவ் இறைநிலையை சித்தாந் தம் "தடத்த நிலை" எனச் செப்பும். இந்நிலை யிலுள்ள இறைவன் குணம், குறிகளோடு, வடிவம், நாமம், ரூபம் உடையவன், உலகி னதும் உயிர்களினதும் தோற்றம் , நிலை பேறு, ஒடுக்கம் என்பவற்றுக்கு காரணமா னவன். இறைவனின் இத்தகைய நிலையைப் பாரதி தன் பாடல்கள் பலவற்றிலும் பிரதி பலித்திருப்பதைக் காணலாம். அவ்வகையில் பாரதியின் கண்ணன் பாட்டில் கண்ணனை பல்வேறு உருவில் வர்ணிக்கின்றார்.

உபநிடதங்கள் சிலந்தியிலிருந்து நூலும் தரையி லிருந்து தாவரமும் தோன்றுவது போல் பிரமத்தில் இருந்தே இப் பிரபஞ்சம் , ஆன்மா என்பவை தோன்றுகின்றன என்று குறிப்பி டுகின்றது. அதாவது பிரபஞ்சமும் ஆன்மாவின் தோற்றங்களே என்கின்ற வேதாந்தக் கருத்து பாரதியாரின் கவிதைகளிலும் ஊடுருவியுள்ளது. இதனையே

**"நீயும் அதனுடைத் தோற்றம் – அந்த**
**நீல நிறம் கொண்ட வானமும் ஆங்கே**
**ஓயுதல் இன்றிச் சுழலும் – அந்த**
**ஓங்கு பல் கோடி கதிர்களும் அஃதே"**

என்கிறார்.

மேலும் உபநிடதங்கள் கூறும் பிரமம் பற்றிய சிந்தனையை

**"உலகமே உடலாய் அதனுள்**
**உயிரதாகி விளங்கும் தெய்வம்"** என்றும்

**"ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி**
**அலையும் அறிவிலிகாள்**
**ஆயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம் உண்டாமெனக்**
**கேளீரோ"** என்றும்

**"ஒன்று பிரமமுளதுண்மை யஃதுண்**
**உணர்வெனும் வேதமெலாம்"** என்றும்
**நாமம் பல்கோடியோருண்மைப் பொருள் ஒன்று**
**நான்மறை கூறிடுமே"**
என்றும் குறிப்பிடுகின்றமை உபநிடதம் கூறும் பிரமம் பற்றிய சிந்தனையின் வெளிப்பாடே யாம்.

### ஆன்மா பற்றிய சிந்தனை

வேதாந்தம் பேசும் உயரிய தத்துவ சிந்த னைகளுள் ஆன்மா பற்றிய சிந்தனையும் முக்கியமானது. அவ்வகையில் உபநிடதங்கள் ஆன்மா பற்றிக் குறிப்பிடும் போது ஆன்மாக்கள் பல என்கின்றது. ஆன்மாவை உண்மைப் பொருள் என்றும் எண்ணிறைந்தது என்றும் அது கன்மத்தின் காரணமாகப் பல பிறவி களை எடுக்க வல்லது என்றும், குறிப்பிடுகின் றார். இக்கருத்தினை ஏற்றுக்கொண்ட பாரதி ஆன்மாக்கள் பல என்பதை தனது கவிதைக ளில் வெளிப்படுத்துக்கின்றார்.

**"வானில் தெரியும் புள்ளெல்லாம் நான்**
**மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் மூலம் பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என வெவ்வேறு பட்ட பல ஜீவராசிகள் இருப்பதனை தெளிவுபடுத்துவதனோடு ஆன்மாக்கள் பல என்ற வேதாந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கின்றார்.

முண்டகோ உபநிடதம் ஆன்மாக்களை இரு வகையாகப் பேசுகின்றது. ஒன்று பரமான்மா, இது பிரமம் எனப்படுகின்றது. மற்றையது ஜீவான்மா, இதுவே வேதாந்தம் கூற விளையும் ஆன்மா அல்லது ஜீவன், அல்லது, உயிர் இந்த இரண்டு வகையான ஆன்மாக்களினதும் இயல்பையும் முண்டகோ உபநிடதம் அழகிய உவமைகள் மூலம் விளக்குகின்றது.

ஒரு மரத்தில் அழகிய சிறகுடைய பறவைகள் அமர்ந்திருக்கின்றன. அவற்றிலே ஒன்று அம் மரத்தில் உள்ள காய், கனிகளை உண்டு மகிழ்கின்றது. மற்றைய பறவை அதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதில் பழத்தை புசித்து இன்பமடையும் பறவைதான் ஆன்மா என்றும் அவ்வாறின்றி அதன் நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டிருக்கும் பறவை தான் பரமான்மா (பிரமம்) என்றும் கூறுகின்றது. இக் கருத்தினை தன் கவிதைகளில் உள்வாங்கிய பாரதி அதனை சற்று வித்தியாசமான முறையில் போகி, யோகி என்கின்ற இரண்டு பேரிடையில் நடைபெறும் தர்க்கமான உரையாடலாக கவிபடைத்துள்ளான்.

அவ்வகையில் இவரின் "மது" என்னும் கவிதையில் இத்தன்மையான உரையாடல் ஒன்று இடம்பெறுகின்றது. உபநிடதங்கள் தர்க்க முறையிலும், வினா எழுப்பி விடைபகரும் முறையிலும், உரையாடல் வடிவிலும், செய் முறை வடிவிலுமாகப் பலமுறைகளில் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. உபநிடதம் வெளிப்படுத்தும் இம்முறையைக் கூட பாரதி தன் கவிதைகளில் கையாண்டுள்ளமை பாரதியின் கவிதையில் வேதாந்தம் பெற்றுள்ள முக்கியத்துவத்தையே காட்டுகின்றது எனலாம். "மது" என்னும் இவரது கவிதை உரையாடல் வடிவிலான தர்க்கம் நிறைந்த கவிதை. இதில் பங்கு கொள்பவர்கள் போகி,யோகி இரு வெவ்வேறு இயல்புடைய ஆன்மாக்கள் இந்த ஆன்மாக்களில் போகி உலகில் உள்ள சுகபோகங்கள் தான் உண்மையான வாழ்கை, இன்பமான வாழ்க்கை என்கின்றான். பச்சை முந்திரிப்பழம் கொண்டு மது தயாரித்து புசிப்பதும், பின்னர் கொஞ்சும் மாத ரோடு கூடிக் களிப்பதும் தான் இன்பம் என்கின்றான். அதை மறுக்கும் யோகி ஆனவர் போகியினுடைய அறிவீனத்தை தன் அனுபவஞானத்தால் உணர்ந்து பச்சை முந்திரி போன்றது உலகம் என்றும் அதனை ஞானத்தால் கடையும் போது உண்டாகும் சிவாக்கினியை உண்பது நிலைபேறான இன்பம் என்கின்றார். மேலும் கொஞ்சும் மாது குண்டலினி சக்தி என்றும் அதனை அறிந்து கொள்ள ஞானம் பெற வேண்டும் என்றும் குறிப்பிடுவதாக அமைந்த பாடல் வரிகளில் மேற்சொன்ன முண்டகோ உபநிடத்தின் சாயல் தென்படுவதை நோக்கலாம்.

உபநிடதங்களில் உள்ள மகா வாக்கியங்களும் ஆன்மா பற்றிய சிந்தனைகளைத் தெளிவுபடுத்துபவையாக உள்ளன. அவ்வகையில் உபநிடத மகாவாக்கியங்களாக 'அகம் பிரம்மோஸ்மி' 'தத்துவம் அஸி' என்பன ஆன்மா, பிரம்மம் அடிப்படையில் ஒன்று என்கிறது. இம் மகா வாக்கியங்களை மையப்படுத்திப் பாரதி தனது "யான்" என்னும் கவிதையில்

"பிரம்மமே யான் எனப் பேசுவர் பேசுக
பிரம்மமே யான் என பேசுவர் பெரியோர்.." என்றும்

"தத்துவமஸி தத்துவமஸி தத்துவமஸி நீயே..."
என்றும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வேதாந்தம் கூறும் ஆன்மா பற்றிய கருத்துக்களான ஆன்மா வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டுள்ள தன்மை, அறியாமையில் மூழ்கியுள்ள தன்மை, கன்மத்தால் தொடரப்படும் மறு பிறப்பு பற்றிய சிந்தனையின் வெளிப்பாடு ஊடாக பாரதியாரின் கவிதைகளான ஒளியும் இருளும், மது, குயிற் பாட்டு என்பவை விளங் குவதைக் காணலாம்.

## கன்மம், மறுபிறப்பு சிந்தனை

உபநிடதங்கள் ஆன்மா பற்றிய சிந்தனையை வெளிப்படுத்தும் போது கன்மம், மறுபிறப்பு பற்றிய சிந்தனைகளையும் வெளிப்படுத்துகி ன்றன. உபநிடதக் கருத்துப்படி ஒருவனது எண்ணங்களுக்கு ஏற்ப சிந்தனையும் சிந்த னைக்கு ஏற்ப செயலும், செயலுக்குஏற்ப பலனும் கிடைப்பதையே கர்மபயன் அல்லது வினைப் பயன் என்கின்றது. ஒருவன் செய்யும் கன்மத் துக்கு ஏற்பவே மறுபிறப்பு வழங்கப் படுகின்றது. கன்மமும் மறுபிறப்பும் மரமும் வித்துப் போல, சங்கிலித் தொடர்போல மாறிமாறி நிகழும் தைத்திரிய உபநிடதம், பிருகதாரண்ய உபநி டதம், கௌசீதகிய உபநிடதம், சுவேதாஸ்வதர உபநிடதம் போன்றவை இக்கன்ம மறுபிறப்புக் கோட்பாட்டினை நன்கு விளக்குகின்றன.

அவ்வகையில் பழைய சட்டையை மாற்றிப் புதுச் சட்டை அணிவது போலவும், தட்டான் ஒருவன் தங்கத்தை மாற்றி இன்னொரு தங்க ஆபரணம் செய்வதை போலவும் ஆன்மாவும் தான் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ற நல்ல பிறவியையும், தீய இழிந்த பிறவி களையும் பெற்றுக்கொள்ளும் இந்த வேதாந் தக் கருத்தை உட்புகுத்தியே பாரதியின் 'குயிற் பாட்டு' அமைந்துள்ளதைக் காணலாம். குயிற் பாட்டு வேதாந்த சிந்தனையின் கருவூலம் என் பதைப் பாரதியின் இம்மூன்று வரிகளும் விளம்பி நிற்கின்றன.

**"ஆன்ற தமிழ்ப்புலவீர் கற்பனையே யானாலும்**
**வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க**
**யாதானும் சற்றே இடமிருந்தால் கூறீரே"**

என்பதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். எனினும் கற்பனையாக அமைந்த குயிற்பாட் டின் கதைக்கரு மறுபிறப்பு, கன்மம் இரு நூலி ழைகளை இறுகப் பின்னிய ஒரு கயிறே எனலாம். அவ் வகையில் குயில், மாடன், நெட் டைக் குரங்கன், சோழ இளவரசன் என்போ ரின் மறுபிறப்புக் கதை யாகவும், பழைய பிறப் பின் கன்மைத்தை உணர்த்துவதாகவும் அமைந்த இந்த குயிற்பாட்டில் மறுபிறப்பு என்னும் சொல்லை நேரடியாகவே பாரதி கையாண் டுள்ளதைக் காணலாம். அவ்வகையில் சோழ இளவரசன் ஆவி துறக்கும் தருணத்தில் சொல்லும் வரிகளான

**"ஆவி துறப்பேன் அழுதோர் பயனில்லை**
**சாவிலே துன்பமில்லை தையலே இன்னமுநாம்**
**பூமியிலே தோன்றிடுவோம் பொன்னே நினைக் கண்டு**
**காமுறுவேன் நினைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்**
**இன்னம் பிறவியுண்டு மாதரசே..."**
**என்னும் அடிகளினும்**

**"குயிலே கேள் முற்பிறப்பில் வீறுடைய வேந்தொழிலார்.."**
எனவரும் அடிகளிலும் கன்மம், மறுபிறப்பு சிந்தனைகள் கூறப்பட்டுள்ளன

## முத்தியும் முத்திக்கான வழிகளும்

ஆன்மாக்கள் கன்மங்களிலிருந்து விடுதலை யடைதலே முத்தி பெறுவதற்கான வழி என்று கூறும் உபநிடதங்கள் அவை முத்தி பெறு வதற் கான வழியாக ஞானம், வைராக்கியம் என்பவற் றைக் கூறுகின்றன. பாரதியும் இவ் இரண்டு வழிகளை ஏற்பதோடு முத்திக்குரிய வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்திகளை இராமனுஜர், மத்துவர் கூறிய பக்தியையும் வலியுறுத்துகின்றார்.

வைராக்கியம் என்பது பற்றுக்களில் இருந்து முழுமையாக விடுதலை பெறல். இந்நிலையை அடைவதற்குப் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரம தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உபநிடதம் கூறுகின்றது. இதனையே பாரதி

**ஐந்து புலனை அடக்கி அரசு**
**ஆண்டு மதியைப் பழக்கித் தெளிந்து**
**நொந்து சலிக்கும் மனதை மதி**
**நோக்கில் வெல்ல விட வேண்டும்** என்கிறார்.

மேலும் ஞானம் என்பது தெளிந்த தூய அறிவு எனவே ஒருவன் சிறந்த தெளிவான அறிவைப் பெற்றுக்கொள்வானாயின் அவன் முத்திக்கு தகுதி உடையவன் என்றும் பக்தியினாலும் இறைவனை அடைய முடியும் என்றும் பாடுகிறார் பாரதி

**"பக்தியினால் இந்தப் பாரினில் எய்திடும்**
**மேன்மைகள்கோடி**
**சித்தம் தெளியும்..."**

என்று கூறுவது பக்தியினால் முத்தி பெறலாம் என்ற தத்துவத்தையே சுட்டுகின்றது எனலாம்.

மேலும் உபநிடதம் கூறும் முத்தி பற்றிய சிந்தனையையும் பாரதி ஏற்றுக்கொள்கின்றார். உபநிடதம் ஆனது ஜீவன் முத்தி, விதேக முத்தி என்னும் இரு வகையான முத்தி நிலை பற்றிப் பேசுகின்றது. அவ்வகையில் ஜீவன் முத்தி என்பது ஆன்மா உடலோடு இருக்கும் போதே பெறும் முத்தியாகும். விதேக முத்தி என்பது ஆன்மா உடலை விட்டு நீங்கியபின் பெறுகின்ற முத்தி. இவற்றில் பாரதி ஏற்றுக் கொள்வது ஜீவன் முத்தியினையே எனலாம். செத்த பிறகு சிவலோகம் போவது என்பதை வன்மை யாகக் கண்டிக்கும் பாரதி

**"தோன்றி அழிவது வாழ்க்கை - இதில்**
**துன்பத்தோடின்பம் வெறுமையென் றோதும்**
**மூன்றில் எது வருமேனும் - களி**
**மூழ்கி நடத்தல் பரசிவ முத்தி"**

என்கிறார். உலக வாழ்க்கையில் வரும் துன்பம், இன்பம், வறுமை என்பவற்றை எல்லாம் ஒன்றாக மதிக்கும் நிலைதான் முத்தி என்கின்றார். இது சைவசித்தாந்தம் விளக்கும் இருவினை ஒப்பு நிலைக்கு ஒப்பானதாகும்.

இவ்வாறு பாரதியார் வேதாந்தக் கருத்துக்களை அடியொற்றி தனது பாடல்களில் அத்தத்துவத்தை வெளிப்படுத்தி உள்ளதோடு வேதாந்தம் கூறும் பிரமம் பற்றிய சிந்தனை அவரின் அனைத்துக் கவிதைகளையும் ஊடுவி நிற்கின்றது எனலாம். பிரமம் எத்துணை சர்வவியாபகத் தன்மை வாய்ந்ததோ அத்தகைய சர்வவியாபகத் தன்மையை பாரதியின் கவிதைகள் அத்தனையிலும் நோக்கக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தனித்திறமை தஞ்சைப் பெருங்கோவில்

சிவலிங்கம் துஷன்
3 ம் வருடம்
பொறியியல்பீடம்

10 ஆம் நூற்றாண்டில், சோழப் பேரரசு அதன் எச்ச நிலையில் இருந்தபோது அருண் மொழி என்ற இராஜராஜ சோழ மன்னனால் (985 - 1012 ), 7 ஆண்டுகளில் இந்தக் கோயில் ஆரம்பத்தில் இராஜஜேஸ்வரம் என் றும் பின்னர் தஞ்சை நாயக்கர்கள் ஆண்ட காலத்தில் தஞ்சைப் பெருவுடையார் கோவில் என்றும் அழைக்கப்பட்ட இக் கோயில் 17, 18 ம் நூற்றாண்டுகளில் மராட்டிய மன்னர்களால் ஆளப்பட்டபோது பிரகதீசுவரர் ஆகியது. தஞ் சைப் பெரிய கோயில் எனவும் இக் கோயில் அழைக்கப்படு கின்றது. இது 1987 ம் அண்டு உலகப் பாரம்பரிய சின்னம். இது (Unesco) ஆல் அறிவிக்கப்பட்டது. இக்கோயிலுக்கு 2010 ஆம் ஆண்டோடு 1000 வருடம் பூர்த்தி யாகின்றது.

தஞ்சைப்பெரிய கோயிலின் சிறப்பு என்கின்ற போது இரண்டு அல்லது மூன்று தளங்கள் மட்டும் கொண்டு கோயில்கள் கட்டப்பட்டு வந்த காலத்தில், கற்களோ கிடைக்காத காவிரி சமவெளிப் பகுதியில் 15 தளக்களைக் கொண்ட சுமார் 60 மீற்றர் உயரமான ஒரு கோயிலை இராஜராஜன் எழுப்பி யது மாபெரும் சாதனையே. இதனைவிட கல் வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், வழி பாட்டுக்கான செப்புத் திருமேனிகள் என்று பல புதிய அம்சங்களையும் இத் திருக்கோயில் கொண்டுள்ளமை சிறப்பான ஒன்றாகும். இது கோயிலா? வழிபாட்டுத் தலமா? வெறும் சைவ சமயத்துக்குண்டான கற்றளியா, இல்லை! இது ஒரு ஆற்றங்கரை நாகரிகத்தின் வரலாற்றுப் பதிவு, திராவிடர் என்று வடமொழியில் அழைக்கப்பட்ட தமிழ் மக்களின் அறிவுத் திறமைக்கு கற்களால் கட்டப்பட்ட திரை, காலம் அழிக்க முடியாது சான்றிதழ். காவிரிக்கரை மனிதர்களின் சூட்சும குணத்தின் வெளிப்பாடு விதவிதமான கலைகளின் மனித நுட்பத்தின் மனத் திண்மையின் ஒருமித்த சின்னம்.

பிரமாண்டமான இக்கோயிலின் அமைப்பை நோக்குவதற்கு சற்றுமுன் அக்கால அளவுத் திட்டங்களைப் பார்க்கின்றபோது,

எட்டு நெற்கதிர்களை அகலவாட்டில் ஒன் றோடு ஒன்று நெருக்கமாக அமைத்து அந்த நீளத்தை விரல் , மானாங்குளம், மானர் அது அளவிடப்பட்டது. மேலும்

24 விரல் ஸ்ரீ 1 தஞ்சை முழும் ஆகும்

தற்போதைய அளவுகளின்படி ஒருவிரல் என்பது 33 மில்லிமீற்றர் ஆகம். மேலும் கருவறை வெளிச் சுவர்களில் காணப்படும் கலசத்தூண்களின் அகலம் 10 விரல்களாகம். அதாவது 0.33 மில்லி மீற்றர் ஆகும். இதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சைக் கோயிலின் அடிப்படை அளவாகும். இதனை அலகு என்று குறிப்பிடலாம். அதன்படி கோயில் அமைப்பை நோக்குகின்ற போது,

விமானத்தின் திட்டமிட்டஉயரம் 180 அலகு 59.4 மீற்றர் ஆகும். குறிப்புகளில் இது (59.75 தொடக்கம் 65.85 மீற்றர் வரை குறிப்பிடப்படுகின்றது)

இலிங்கத்தின் உயரம் - 12 அலகுகள் 3.96 மீற்றர் ஆகும்.

(உலகின் மிகப் பெரிய இலிங்கம் இதுவாகும்)

கருவறை - 24 அலகுகள் கொண்ட சதுரம்

உட்சுவர் - 48 அலகுகுள்

வெளிச்சுவர் - 72 அலகுகள் கொண்ட சது ரங்களாகும்.

விமானத்தின் அடிப் பகுதி (பொனா) - 90 அலகுகள்

விமானத்தின் கடைக்கால் -108 அலகுகள் கொண்ட சதுரம்

ஆழம் - 5 அலகுகள்

நந்தி (ஒரே கல்லால் செய்யப்பட்டது) -

உயரம் - 14 மீற்றர் , நீளம் - 7 மீற்றர், அகலம் - 3 மீற்றர்

நந்தி மண்டபம் நாயக்கர் காலத்தில் கட் டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த அளவுகளைப் பார்க்கின்ற போது தற்கால தொழில்நுட்பத்தின்படி சாதாரணமானது. தெரிந்தாலும் இதற்குப் பின் பொறியியல் எமை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

இக்கோயிலுக்கான பொறியியல் நுட்பங்கள் என்று பார்க்கின்றபோது மொத்தமாக 130,000 தொன் கிரனைட் கற்களால் கோயில்கட்டி முடிக்கப் படுகின்றது. அதனைவிட விமானம் 42, 500 தொன் கொண்டதாக இருக்கின்றது. அதேவேளை, இந்தப் பிரதேசம் பாறைகளால் சூழப்பட்டது என்றாலும் பாளைகளின் தாங்குத் திறனை சோதிது பார்க்காமல் கட்டி இருக்க மாட்டார்கள் என்கின்ற போது ஆச்சரியமாகின்றது. இதனைவிட 180 அல குகள் கொண்ட கோயிலின் விமானம் எப் படிகட்டப்பட்டது என்பது பற்றி எந்தவித குறிப்புகளும் இல்லை. சில வாகனங்கள் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. இதனைவிட கோயிலிற் தேவையான கற்கள் திருச்சிக்கு சற்று தெற்கே எள்ளகிரவர் தாண்டி இருக்கின்ற நார்த்தா மலையில் இருந்து வந்திருக்கின்றது. கிட்டத்தட்ட 60 கிலோ மீற்றர் தூரத்துக்கு எப் படிக் கொண்டு வந்தார்கள்? தற்போதைய பாரமேற்றும் வாகனங்களோடு ஒப்பிட்டுப் பார்க் கும்போது ஒரு தடவையில் அதிகூடியது 20 தொன் படி கணக்குப் பொட்டு பார்த்தாலும் 6500 தடவையில் தேவைப்பட்டிருக்கும் யோசிக்கவே பிரமிப்பாகிறது தமிழரின் பொறி யயில் நுட்பங்கள்.

தஞ்சை என்கின்ற போது எமக்கு ஞாபம் வருகின்ற விடயம் என்னவென்றால் தலை யாட்டி பொம்மைகள். அதன்படி தற்போதைய ஆய்வொன்றின்படி கோயில் மிக ஆழத்துக்கு நிலத்தை தோண்டி அதனுள் மண்ணை (மணல் மண்) நிரப்பி அதன் மேல் கட்டப் பட்டு இருக்கின்றதெனவும், மேலும் இவ் அமைப் பானது பூகம்பத்தையும் தாங்கக் கூடிய சக்தி கொண்டதாக அறியப்படுகின்றது. மொத்தத்தில் தற்போது இல்லாத ஏதோ ஒரு தொழில் நுட்ப அறிவை எம்மவர்கள் பயன்படுத்தி இருப்பது தெளிவாகின்றது.

தஞ்சைப் பெரிய கோயிலில் இருந்த ஒரு கல்வெட்டு தமிழராகிய எமக்கு கற்றுத் தருகின்றபாடம் என்னவென்றால் அதில் கோயில் கட்டியாகிவிட்டது. நிர்வகிப்பதற்கு யார்? யார்? என அவரவருக்கு வீடு ஒதுக்கி விட்டு இலக்கம் சொல்லி, பெயர் எழுதி கல்வெட்டில் நீள்கிறது. இதனையும் விட கோயில் வேலை செய்பவர்களுக்கான சம் பளம் பற்றியும் எழுதப்பட்டிருக்கின்றது. மேலும் கோயிலுக்கு யார் தானம் தந்தனரோ அவர் கள் தந்த முழுதொகையினாலும் பெரிய தொகையினாலும் தங்க ஆபரணமானாம் கல்லில் வெட்டப்பட்டு இருக்கின்றது. அக் கல் வெட்டானாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங் கொடுத்தனவும் , நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும்..." என்று செல்கின்றது. தான் மட்டும் இக் கோயிலை கட்டியதாக ஒரு நினைப்புக்கூட இல்லை அந்த மாமன்னனுக்கு இல்லை. இதுதான் அந்த பாடல்.

தஞ்சைப் பெரிய கோயில், தமிழராய் பிறந்த அனைவரும் கொண்டாடுவதற்குரிய ஓர் அற்புதமான சோழர் கால வரலாற்றுச் சான்று. எமது எதிர்கால சந்ததிக்கு எடுத்து சொல்வதற்குகந்த வரலாற்றுப்பதிவு. இது ஏன் இன்னமும் உலத அதிசயமாக தெரிவு செய்யப்படவில்லை என்பது எனது கேள்வி? யார் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் காலம் பதில் சொல்லும், தமிழர்கள் யார் என்று!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜயோகம்

கிருஷாந்தி வைகுந்தவாசன்
1ம் வருடம்
பொறியியல்பீடம்

ராஜயோகம் மற்ற யோகங்கள் ஒவ்வொன்றுடனும் பொருந்துவதாக நம்பிக்கையுடனும், அது இன்றியோ எந்த வகையிலாவது சாதனை செய்பவர்களுக்கு எல்லாம் இது பொருந்தும். ஒவ்வொரு சாஸ்திரத்துக்கும் தனியான ஒரு ஆராய்ச்சி முறை உள்ளது போல் இந்த ராஜயோகம் சமயசாஸ்திரத்துக்கே உரிய ஒரு சிறந்த முறை. இந்த சாஸ்திரமும் பயில்பவரின் பற்பல இயல்புகளுக்கு ஏற்றவாறு பற்பல செயல்முறைகளை உடையது. இதன் முக்கிய பகுதிகள் பிரணாயாமம், மன ஒருமைப்பாடு, தியானம் என்பன. கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்கு "ஓம்" அல்லது வேறு புனித சொற்களைக் குருவிடம் இருந்து பெறுவது பெருந்துணையாக இருக்கும். "ஓம்" என்பது அனைத்திலும் உயர்ந்தது. அதன் பொருள் பரபிரம்மமே இந்த புனிதச் சொற்களை ஓதும் போதே இவற்றின் பொருளையும் தியானிப்பதே முக்கிய பயிற்சியாகும்.

ஞானயோகம் - இதிலே மூன்று பகுதிகள் உள்ளன. முதலாவது உண்மையைப் பற்றி கேட்பது. அதாவது ஆன்மா ஒன்றே மெய்ப்பொருள் மற்றையவை மாயை என்பதை கேட்டறிதல். இரண்டாவது எல்லா வகையிலும் இந்தத் தத்துவத்தை நியாய முறைப்படி ஆராய்வது. மூன்றாவது வாதங்களை முற்றிலும் நிறுத்தி விட்டு அனுபவத்தால் உண்மையை அறிவது. இந்தக் காட்சிக்கு வேண்டுவனவாகிய நான்கு.

1. பிரம்மமே உண்மை மற்றையவையாவும் உண்மையற்றவை என்ற உறுதி
2. சிற்றின்ப நுகர்ச்சியிலுள்ள ஆசையை முற்றிலும் விடுத்தல்
3. ஐம்புலன்களையும் மனதையும் அடக்குதல்
4. விடுதலை அடைவதில் மிகுந்த ஆசை என்பவை

எப்போதும் உண்மைப் பொருளையே தியானிப்பது ஆன்மாவுக்கு அதன் உண்மையான இயல்பை நினைவூட்டுவது ஆகிய இரண்டுமே இந்த யோகத்தின் வழிகளாகும். இது அனைத்திலும் உயர்ந்த நெறி. ஆனால் அனைத்திலும் மிகவும் கடினமானதுமாகும். பலருக்கு இது அறிவுக்கு எட்டலாம். ஆனால் அனுபவத்தில் உள்ளவர் மிகச் சிலரேயாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தமும் நான்கு ஆரிய சத்தியங்களும்

திரவியநாதன் திலீபன்
மெய்யியல், உளவியல்த் துறை

இந்திய தத்துவ சிந்தனைகள் எனக் கூறும் போது இந்தியாவில் தோன்றிய தத்துவங்களும், கோட்பாடுகளுமாகும். இந்தியத் தத்துவங்களை தரிசனங்கள் (Vision of Truth) என்றும் அழைப்பர். இந்தியத் தரிசனம் என்பது ஆன்மீக விடுதலைக் கான மார்க்கங்களை எடுத்துச் சொல்வதாகும். இந்தியத் தரிசனத்தை ஆய்வு செய்த டாக் டர் இராதாகிருஸ்ணன் "இந்தியத் தத்துவம் என்பது அழிவற்ற தத்துவங்களைக் குறிக் கின்றது. பொதுவாக இந்தியத் தத்துவங்களை வேத, உபநிடதக் கருத்துக்களை ஏற்று எழுந் தவை" என்றும், மறுத்து எழுந்தவை என்றும் கூறுவார். இவற்றை வைத்தீக தரிசனங்கள் எனவும் அவைத்க தரிசனங்கள் என்றும் அழைப் பர். ஐவகைத் தரிசனங்கள், வேதாந்தம், சித் தாந்தம் என்பன வைதீக தரிசனங்களாகவும், சமணம், பௌத்தம், உலகாயுதம் அவைதீக தரி சனங்களாகவும் விளங்குகின்றன. இவற்றைப் புறச் சமயங்கள் என்றும் அழைப்பர்.

உலகில் பெருமதங்களில் ஒன்றாகவும், உயர்ந்த சிந்தனைமிக்க தரிசனமாகவும் பௌத் தம் விளங்குகிறது என்பதில் எவ்வித ஐயமு மில்லை. இந்தியத் தத்துவ வரலாற்றில் பௌத் தம் கி.மு. 6ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என பலரும் கூறிக் கொள்வர். இது கௌதம புத்தர் என்றழைக்கப்பட்ட ஒரு தனி மனிதன் தமது சொந்த முயற்சியாலும், அனுபவத்தாலும் கண்டுபிடிக்கப்பட்ட வழியாகும். (புகழ்பெற்ற தத்துவமேதை ரசல் (Russell) புத்தரையும் சோக் கீரட்டீஸையும் நிகரானவர்கள் என்றே எழுதுகி றார்)

புத்தரின் கருத்துக்கள் மூன்று நூற்றாண்டு காலமாக வாய்மொழி மரபாக வந்தவையா கும். ஆசிய மக்களால் மட்டும் பின்பற்றப்பட்டு வந்த பௌத்தம் இன்று பல நாடுகளிலும் பரவி மக்களிடையே நிலைத்து நிற்கின்றது. பௌத் தம் புத்தரைப் பற்றி ஐரோப்பாவில் பலர் நல்ல நூல்களை எழுதியுள்ளனர். குறிப்பாக Sri Edwin Arnold எனும் ஐரோப்பியர் 19 ம் நூற்றாண்டில் இறுதிப் பத்தாண்டுகளில் The Light of Asia of the great என்றொரு ஆங்கில நூலை எழுதினார். இது உலகப் புகழ் பெற்ற நூலாகவும் விளங் குகின்றது.

ஒவ்வொரு சமயமும் வாழ்க்கை யினை ஒழுங்குபடுத்தும் நெறிமுறைகளை விளக் குகின்றது எனலாம். இதற்கு பௌத்தம் விதி விலக்கானது ஒன்றல்ல. இந்த வகையில் பௌத் தத்தில் நான்கு விடயங்கள் முதன்மையாகப் பேசப்படுகின்றது. அவற்றினை ஆரியசத்தி கள் (For Noble Truths) என்றழைப்பர். அவை துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரணமார்க்கம் என்பன. இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியசத்திகள் பகவத்கீதையிலும் விரி வாகப் பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**துக்கம்** - வாழ்க்கை முழுவதுமே துக்கம் நிறைந்துள்ளது. துக்கத்தின் உண்மையை விப ரிக்கும் போது அனைத்து துன்பங்களுக்கும் முதற்காரணம் பிறப்பே ஆகும் என புத்தர் கூறுகிறார். இதனை பின்வரும் உரையாடல் முறையினூடாக தெளிவுபடுத்தி விளக்கும் போது

கேள்வி : பிறப்பது ஏன்?
பதில் : ஒரு மனிதனின் மனம் - உடல் போன் றவற்றின் சேர்க்கையால் பிறப்பு உண்டாகிறது.

கேள்வி : மனம் – உடலின் சேர்க்கையை முன்னெடுக்கும் காரணிகள் எவை?
பதில் : மனதின் உள்ளுணர்வினால் உந் தப்பட்டு புலன்களின் தொடர்பு தோன்றுகிறது. மனம் - உடலில் சேர்கையின் காரணம் புலன் உணர்வுகளின் தொடர்பேயாகும்.

கேள்வி : புலன்உணர்ச்சியின் காரணம்?
பதில் : அவாவின் தோற்றத்தினால் புலன் உணர்வுகள் தோன்றுகிறது.

கேள்வி – புலன் உணர்வின் தோற்றம் என்ன?
பதில் : பற்று அல்லது ஆசை தோன்றுவதால் புலன் உணர்வுகள் தோன்றுகின்றன.

கேள்வி : பற்று தோன்றுவதன் காரணம் என்ன?
பதில் : உணர்வுகளின் உருவாக்கம் தோன் றுவதால் பற்று தோன்றுகிறது.

கேள்வி : உணர்வுகளின் உருவாக்கம் தோன் றக் காரணம் என்ன?
பதில் : புலன்களின் தொடர்பினால் உணர்வு தோன்றுகிறது.

கேள்வி : புலன்களின் இயக்கம் எப்படி உருவாகிறது?
பதில் : மனமும் உடலும் ஆகிய புலன்கள் அடிப்படைத் தொடர்பு காரணமாக தன்னு ணர்வு இயங்குகிறது.

கேள்வி : தன்னுணர்வு தோன்றக் காரணம்?
பதில் : விருப்புள்ள செயல்களைப் பொறுத்து தன்னுணர்வு தோன்றுகிறது.

கேள்வி : விருப்புள்ள செயல்கள் எப்படி உருவா கிறது?
பதில் : அறியாமையின் காரணமாக விருப்புள்ள செயல்கள் உருவாகின்றன.

கேள்வி– அறியாமையால் என்ன தோன்றுகி றது?
பதில் : அறியாமையின் காரணமாக துன்பம் தோன் றுகிறது.

[பௌத்தம் ஏன்? டாக்டர் - தம்மானந்தா பக். - 20]

எனவேதான் பிறப்பு இல்லையேல் துன்ப மும் இல்லை. இதனாலேயே புத்தர் தெளிவாக பிறப்பதும் துன்பம், வாழ்வதும் துன்பம், இறப்ப தும் துன்பமாகும் எனக் கூறுகின்றார்.

(The four noble truths are regarded as the central doctrine of the Buddhist tradition and are said to provide a conceptual frame work for all Buddhist thouht. These four truths explain the nature of Dukka. Pali commonly translates as suffering. The obvious physical and mental suffering associated with birth, getting older, illness and dying)

மேலும் துக்கத்தினை தெளிவுபடுத்தும் **ஓசோ** உனக்கு மகிழ்ச்சி எதைக் கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையோ அதையெல்லாம் துக்கம் கொண்டிருக்கிறதாம். உலக வாழ்வே துக்கமயமானது என்பது முதலா வது உண்மை என்பதனை மணிமேகலை பின்வருமாறு எடுத் துக்காட்டுகிறது.

'பிறந்ததோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்.....' என்பதாகும்.

புத்தர் குறிப்பிடுவது போல பிறப்பதே துன்பம் அதற்குள்ளேயும் இவ்வுலகில் துன்பத்திற்கு மேல் துன்பம். உலகில்பெரும்பாலானோர் ஒழுக்க நிலையிலிருந்து வழுவிவிட்டார்கள். உலகம் பாவங்கள் நிறைந்ததாக மாறி விட்டது. எங்கு பார்த்தாலும் கொலை, கற் பழிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் என எண்ணிலடங்கா. இது பகுத்தறிவுள்ள மனிதனின் செயற்பாடா? அல்லது விலங்கினுடையதா? என்று எண்ணத் தோன் றுகிறது. தட்டிக்கேட்ப தற்கோ ஆளில்லை அதர்மம் தலைதூக்கிவிட்டது. எல்லோரும் கலியுகம் ஆரம்பித்துவிட்டது என்று கூறிக் கொள் கிறார்கள். இது பற்றி பாரதி கூறுகையில் 'பலவீன மான உயிர்களுக்கு மனிதன் எதுவரை அநி யாயம் செய்கிறானோ அது வரை கலியுகம் இருக்கும் அநியாயம் நீங்கினால் கலியுகம் இல்லை' என்பதாகும்.

பொதுவாக அறத்தை நிலைநாட்ட மனி தர் அவ்வப்போது வரலாற்றில் தோன்றுவது வழக்கம். அவ்வாறு தோன்றுபவர் தன் சமூகத் தாரை நேர் வழியில் கொண்டு செல்வார். எனவே இப்பாவச் சுமைகளை மீட்பதற்கு மீண்டும் ஒரு யேசு கிறிஸ்து அல்லது தர்மத் தைப் போதிப்பதற்கு மீண்டும் ஒரு புத்தர் இப்ப பூவுலகில் அவதரிக்க வேண்டும்.

**துக்க உற்பத்தி** - துக்கதிற்குக் காரணம் பற்று ஆகும். அதாவது விரும்பாததை அடைவதும், விருப்பமானதைத் துறப்ப தும் துக்கமளிப்பவை எனப் புத்தர் கூறி னார். (ஆசையைப்போல் கொடிய நெருப்பு வேறில்லை. துவேசத்தைப் போல் கொண் டது விடாத பிடி வேறில்லை. மோகத்தைப் போன்ற வலை வேறில்லை. வேட்கையைப் போல்ப் பாயும் நதி வேறில்லை எனத் தம்மபதம் கூறு கின்றது.)

போர்க்களத்தில் உறவினர்கள், நண்பர்கள் அழியப் போகிறார்கள் என்பதையிட்டு அருச் சுனன் துக்கப்பட்டான். அது அவர்கள் மீதுள்ள பற்றேயாகும். அதேபோல் கிரேக்க தத்துவஞா னியான பிளேட்டோவும் எதென்ஸ் நகரத்தை விட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகள் வேறு நாடுக ளில் காலத்தினை கழித்திருந்தார். அதற்கு காரணம் தமது குருவான சோக்கிரட்டீஸின் இழப்பேயாகும். எனவே உலகில் பற்று இல்லாத எந்த மனினும் இருக்க முடியாது. ஆனாலும் அப்பற்றினை நிலையற்ற பொருள் மீதோ, துன்பம் தருவனவற்றிலுமோ வையாது நிலை யானதும், இன்பமே மயமான பரம்பொருளின் மீது பற்று வைக்க வேண்டும் எனப் பகவான் கண்ணன் அருச்சனனுக்கு கூறியருளினார். என்பதை பகவத் கீதை எடுத்துக்காட்டுகிறது. இதனை வள்ளுவர்

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' [குறள் - 350]

என்ற குறளினூடாக வலியுறுத்துகின்றார்.

(The Second noble truth is that the or igin of Dukka can be known within the context of four noble truths. The origin of Dukka is commonly defined as craving)

மனிதனிடம் துன்பங்களுக்கு எளிமையான மார்க்கத்தை அறிய புத்தரிடம் பிரபஞ்சத் தத்துவங்களைப் பற்றி பின்வரும் கேள்விகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கப்பட்டன.

உலகம் அழிவற்றதா?
உலகம் அழிவுடையதா?
உலகம் முடிவுடையதா?
உலகம் முடிவற்றதா?
ஜீவனும் உடலும் ஒன்றா?
ஜீவனும் உடலும் வெவ்வேறா?
மரணத்திற்கு பிறகு முத்தி பெறுகின்றார்களா?
முத்தி பெறவில்லையா?

இக்கேள்விகளுக்கு எல்லாம் புத்தர் மௌனத்தினையே சாதித்திருந்தார். ஏனெனில் பௌதீகத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களைப் பற்றி கதைத்துக் கொண்டிருக்காமல் யதார்த்த உலகியல் நிலையைப் பற்றி சிந்திப்பது மேலாகும் எனக் கூறினார். மேற் குறிப்பிட்ட புத்தரின் மௌனத்திற்கு பௌத்தத்தை பின் தொடர்ந்தோர் பலவாறு பொருள் கொண்டனர். சிலர் உடன்பாடாகவும் இன்னும் சிலர் எதிர்மறையாகவும் பொருள் கொண்டனர். இதனாலேயே பிற்பட்ட காலத்தில் பௌத்தத்தில் பல பிரிவுகள் தோற்றம் பெறலாயின.

**துக்க நிவாரணம்** - ஆசையை ஒழித்தலே துக்க நிவாரணமாகும். எல்லா வகைத் துன்பங்பங்களிலிருந்து விடுபடுவதே நிர்வாணம். இதனை திருமூலர்

'ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசைவிட விட ஆனந்தமாமே......'

எனக் கூறுகிறார்.

மேலும் விருப்பமான விடயங்கள் தடுக்கப்படுவதனால் உலகம் தடுக்கப்படுகின்றது. உலகம் தடுக்கப்படுவதனால் மறுபிறவி தடுக்கப்படுகிறது. பிறப்பின் தடுப்பால் முதுமை, மரணம், சோகம், அழுகை, வேதனை, முதலியவை யாவும் அழிந்து விடுகின்றன. இத்துக்கத்தின் தடுப்பே புத்தர் தத்துவத்தின் முக்கிய பகுதி ஆகும். உயிர்கள் யாவும் அவா, பற்று மகிழ்ச்சி, புலனின்பம் ஆகிய சிக்கல்களுக்கு கட்டுப்பட்டு விடுகின்றன. இவைகளே பிரச்சினை. அதனூடாக துன்பம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணங்களாகும். இவற்றினின்று எப்படி விடுபடுவது?

"பேருண்மையைத் தானமாகக் கொடுப்பது எல்லாத்தானங்களையும் விடச் சிறந்தது

பேருண்மையின் நறுமணம் மற்ற எல்லா நறுமணங்களையும் விடச் சிறந்தது

பேருண்மையை அறிவதால் கிடைக்கும் இன்பம் மற்றெல்லா இன்பங்களையும்விட சிறந்தது எவ னொருவன் ஆசையை அழிக்கின்றானோ அவன் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுகி றான்"

எனத் தெளிவுபடுத்துகின்றது. (புத்தர், தம்மபதம் - 345) மேலும் வள்ளுவர் விளக்குகையில் துன்பமே இல்லாதிருக்க விரும்பினால் பற்றுக்களை விட்டொழிக்க வேண்டும். பற்றுக்களை விட்ட பிறகுதான் துறவறத்தால் அடையக் கூடிய பல நன்மைகள் கிடைக்கும் எனக் கூறினார். இதனை பின்வரும் குறட்பா வரிகள் ஆதாரப்படுத்துகின்றது.

வேண்டின் உண்டாகத் துறக்க துறந்த பின்
ஈண்டு இயற் பால பல [குறள் - 342]

(The Third noble truth is that the complete cessation of Dukka is possible. Cessation is the goal of ones spiritual practice in the Buddhist Tradition)

**துக்க நிவாரணம் மார்க்கம்** - துக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினை தடுப்பதற்கான வழி என்ன? என்பதற்கு சிறந்த எட்டு விதமான வழிகள் குறிப்பிடப்படுகின்றன. இதனை அட்டாங்க மார்க்கங்கள் என்றும் கூறுவர்.

(The fourth noble truth indentifies a path to this cessation. According to Buddhist tradition the Buddha first taught the four noble truths in the very fist teaching he gave after the attained enlightenment)

நற்காட்சி (Right View)
நல்நோக்கு (Right Intention)
நல்வாக்கு (Right Speech)
நன்னடத்தை (Right Conduct)
நல்வாழ்க்கை (Right Life )
நன்முயற்சி (Right Effort)
நல்லுணர்வு (Right Awareness)
நற்செயல் (Right Action) என்பன

இவ்வழிகளைப் பின்பற்றி விடுதலை நிலையாகி நிர்வாண நிலையை அடைய இறைவனோ வேறு யாருடைய உதவியோ தேவை இல்லை என புத்தர் போதித்தார்.

இவ்வாறான புத்தபெருமானின் போதனைகளைச் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் மற்ற சமயங்களைத் தவறு என்றோ, இதுதான் உண்மைச் சமயம், இதுவே இந்தநாட்டுக்கு மட்டும் உரித்துடையது என அடிப்படை வாதம் பேசமாட்டார்கள். அதுமட்டுமல்லாமல் பிற சமயங்களையும் தங்கள் சமயத்திற்கு இணையாகவே கருதுவர். எப்போதும் பொதுமைத் தன்மையினையே கருத்தில் கொள்ளுவார்கள். பொதுவாக எல்லாச் சமயங்களும் ஒரு மனிதன் எப்படியும் வாழலாம் எனக் கூறாமல் இப்படித் தான் வாழ வேண்டும் எனக் கூறுகின்றது. எடுத்துக்காட்டாக.

பௌத்தம் - பஞ்சசீலம், அட்டசீலம், தசசீலம்
இந்து சமயம் - பஞ்சமாபாதங்களை விலக்கல்
கிறிஸ்தவம் - பத்துக்கட்டளைகளைக் கடைப்பிடித்தல்
இஸ்லாம் - பொய், களவு போன்ற பாவங்களை தவிர்த்தல்

என்பவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

எனவேதான் புத்தரின் போதனைகளைச் சரியாகப் பின்பற்றுவோர் விடுதலை என்ற இலக்கை அடைவதோடு துன்பக்கட்டுகளிலிருந்து விடுதலை பெற உந்துசக்தியாகவும் விளங்குகிறது.

'நான் போதிப்பது யாவும் துன்பமும் அவற்றின் துடைப்புமே' என்று புத்தர் கூறி மொழிந்தார்.

உசாத்துணைப் பட்டியல்


1. இராதாகிருஷ்ணன்.ச - 1970 கீழைத்தேச நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு
2. தேவி பிரசாத் சட்டோபாத்யாய - இந்தியத் தத்துவவியலில் நிலைத்திருப்பனவும் அழிந் தனவும்
3. பசாம் .ஏ. எல். - 1954 வியத்தகு இந்தியா
4. லக்சுமணன் - 2005 இந்திய தத்துவஞானம்
5. ஹிரியண்ணா. எம் -1966 இந்திய தத்துவம்
6. மகாதேவன் ரி.எம்.பி. -இந்து சமயதத்துவம்
7. வரதராஜன் -2003 இந்திய தத்துவ தரிசனம்
8. ராகுல் சாங்கிருத்தியாயன் - 2003 பௌத்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவவியல்

9. இமானுவல் இன்பநாதன் - 1994 இந்திய மெய்யியல் ஓர் அறிமுகம்

10. சித்தார்த்தா புத்தரும் அவர் தம்மமும்

11. சிவானந்தமூர்த்தி, அன்ரன்டயஸ் - 1998 மெய்யியல் ஓர் அறிமுகம்

12. சூரியமூர்த்தி. எஸ் - மன அமைதியும் புத்தரின் விபாசனா தியான முறையும்

13. மல்லிகா இராஜரட்ணம் - (மெய்யியல். உளவி யல்துறை) விரிவுரைக் குறிப்புக்கள்

14. David Kalupahana - 1986 Nagarjuna : The Philosophy of Middle way

15. En.wikipedia.org

16. Faculty.washiton.edu





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமங்களும் செயற்பாடுகளும்

சர்மிலா கார்த்திகேசு
1ம் வருடம்
பொறியியல்பீடம்

திருநீறு பூசி தோப்புக் கரணம் போட்டுத் தான் எங்களுடைய எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டும். விநாயகர் வழிபாடு முக்கிய-மானதொன் றாகும்.

திருநீறு சுத்தமான பசுஞ் சாணத்திலிருந்து பெறப்படுகிறது. பசுஞ்சாணம் பல மூலிகைக ளின் கழிவு அதை எரித்துப் பெறுவது மிகுந்த சக்தி உள்ள மூலிகைப் பொடியாகி திருநீறு ஆகும். திருநீற்றை நெற்றியில் பூசும்போது அநேக நோய்கள் மாறுகின்றன என்று வைத் திய நிபுணர்கள் கூறுகின்றனர். நாய், பூனை, கோழி போன்ற விலங்குகள் தம் உடலில் ஏற் படுகின்ற நோய்களை நீக்குவதற்கு சாம்பல் குளிப்பதை அவதானிக்கலாம். சுடலைப் பொடியை சிவபெருமான் விரும்பி அணிகின்றார். சிவசின்னங்களில் முக்கியமானவை திருநீறு,உருத் திராட்சம், திருவைந்தெழுத்து ஆகிய பஞ்சாட்சர மந்திரமுமாகும். திருநீறு அணியும் போது வெண்மை விபூதி அணிதல் வேண்டும்.

வெள்ளை நிற விபூதியை அணிந்தால் போக மோட்சம் கிடைக்கும். கருமை நிற விபூதி அணிந்தால் வியாதியை உண்டாக்கும். செந்நிற விபூதியை அணிந்தால் கீர்த்தியைக் குறைக் கும். புகைநிற விபூதியை அணிந்தால் ஆயுள் குறையும். பொன்னிற வீபூதியை அணிந்தால் செல்வத்தைக் கெடுக்கும். தோப்புக்கரணம் போடும் போது உடலின் பல்வேறு சுரப்பிகள் துண்டப்பட்டு உடல் புத்துணர்ச்சி யுடன் செயற்பட ஆரம்பிக்கும். குட்டுகின்ற பொழுது இரண்டு கபச் சுரப்பி கள் செம்மையாகத் தொழிற்பட தூண் டிவிடும். இவ்வாறு சைவ மக்கள் நாளாந்தம் அனுட்டிக்கும் நல்ல கருமங்கள் அனைத் தும் நல்ல கருத்துக்கள் பலவற்றைக் கொண்டு விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளசியின் மகத்துவம்

செ.செல்வலக்ஷ்மி
2ம் வருடம்
பொறியியல் பீடம்

துளசி அனைத்து பக்தித் தொண்டுகளின் சாரம் துளசியின் இலை, பூ, வேர், கிளை எல்லாம். ஆன்மீகமானவை. பக்தியுடன் துளசியின் இலையை கிருஷ்ணருக்கு அளிப்பவர்கள் அவருக்கு அருகிலேயே வாழ்வார்கள்.

துளசியின் மண்ணை எடுத்து உடலில் பூசிக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரை வணங்கினால் ஒவ்வொரு நாளும் நூறு நாள் பூஜை செய்த பலனை அடைவார்கள். ஒருவர் துளசியைப் பார்த்தாலோ அல்லது அது இருக்கும் வீட்டிற்குச் சென்றாலோ அவரது பாவங்கள் நீங்குகின்றன.

துளசி உள்ள காடுகள், வீடுகளில் கிருஷ்ணன் ஆனந்தமாக வசிக்கின்றார்.

துளசி உள்ள வீடுகள் எந்தக் கேடான காலத்திலும் வீழ்ச்சி அடையாது. அதுவும் அல்லாமல் எல்லாப் புனித ஸ்தலங்களிலும் அது புனிதமானது.

துளசியின் வாசனையை முகர்ந்து பார்க்கும் அனைவரையும் தூய்மையாக்கும். துளசி உள்ள இடங்களில் கிருஷ்ணர் மற்றும் எல்லா தெய்வங்களும் பிரத்தயஷ்யமாகின்றன.

துளசியைக் கொண்டு கிருஷ்ணரைப் பூஜிப்பவன் தன் முன்னோர்கள் அனைவரையும் பிறவித்தளையிலிருந்து விடுவிக்கின்றான். மேலும் கிருஷ்ணருக்கு படைக்கப்பட்ட துளசியை தலையிலோ வாயிலோபோட்டுக் கொண்டவர் கிருஷ்ணரின் திருநாட்டிற்குள் நுழைவார்.

கலியுகத்தில் ஒருவர் துளசியை நினைத்தாலோ, வளர்த்தாலோ, வணங்கினாலோ அவர் எல்லாப் பாவங்களில் இருந்து விடுபட்டு இறுதியில் கிருஷ்ணரை அடைகின்றார்.

மேலும் துளசியின் மகிமையைப் பிறருக்குச் சொன்னால் ஆன்மீக உலகில் நிலையான ஒரு இடம் காத்திருக்கும் என்பது திண்ணம்.

***ஸ்ரீ துளசி வணக்கம்***

**வருந்தாயை துளசி தேவ்யாயை**
**ப்ரியாயை கேஷவச்ஸ்ய**
**கிருஷ்ண பக்தி ப்ரதே தேவி**
**ஸ்ஸத்யவத்யை நமோ நம.**

இவ்வாறு இந்து சமயத்தில் மிக முக்கியமான ஸ்தானத்தை வகிக்கும் இத் துளசியை நாம் மருத்துவ மற்றும் விஞ்ஞான கண் கொண்டு நோக்குவோமானால்

நாள்பட்ட வயிற்றுப்புண், இதயச் சோர்வு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்ற நோய் களுக்கு தடுப்பு மருந்தாக துளசி இலைகள் வியத்தகு முறையில் செலாற்றுகின்றன.

சாதாரண குடிநீரில் 200 மில்லி லீற்றர் அளவு எடுத்து அதில் 10 துளசிகளை இரவு படுக்கும் போது போட்டுவிடவும். பின் காலை உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக இந்தத் துளசி தீர்த்தத்தை உட்கொண்டால் அது இரப்பை, வயிறு, குடல் போன்றவைகளில் படிந் துள்ள தேவையற்ற அழுக்குளை நீக்கி சுத்தப் படுத்தும்.

பனிக்காலங்களில் பல்வேறு நோய்களை தடுக்கும் ஆற்றல் துளசிக்கு உண்டு. முக்கிய மாக சளிக்கு சரியான எதிரியாகும்.

10 துளசி, 2 ஏலக்காய் நசுக்கி சிறிது சுக்கு எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு ரம்ளர் தண்ணீர் ஊற்றி நன்கு கொதிக்க வைத்து பின் தேவைக்கு ஏற்றவாறு தேன் அல்லது பால் கலந்து சாப்பிட்டால் ஆஸ்துமா, இளைப்பு, இருமல், மூளைக் காய்ச்சல், நிமோனியா, கல்லீரல் சிதைவு ஆகிய நோய்கள் வராது. இந் நோய்கள் வந்தால் அவற்றை வளரவிடாது தடுக்கும் ஆற் றல் இக் கசாயத்துக்கு உண்டு.

மதுபானம், போதை மருந்து, சிகரெட் புகை யால் பாதிக்கப்பட்டு சிதைவடைந்த கல்லீரல் நோய்கு ஆளானவர்கள் அதிலிருந்து விடுபட தினமும் காலை உணவுக்கு முன்னர் 50 மில்லி லீற்றர் துளசிக் கஷாயம் சாப்பிடுவது நல்லது.

நம் உடம்பின் முக்கிய உறுப்புக்களான இத யத்துக்கு சீரான இரத்தஓட்டம் செல்லவும், நுரை யீரலில் சளி சேராமல் தடுக்கவும், போதை மருந்துகளின் பாதிப்பை முறியடித்து மூளையின் திசுக்களுக்கு ஊட்டமளித்து சிறுநீரகம் பாதிப்பு அடையாமல் தடுக்கவும், நீரிழிவு குணமடை யவும் துளசிக் கஷாயம் உதவும்.

துளசி மணம் பட்டவுடன் சுவாசம் புத்து ணர்வு பெறுவதை உணரலாம். உடலுக்கும் மனத்துக்கும், தென்பும் வலுவும் தரக்கூடிய மூலிகை துளசி ஆகும். பாம்பு, தேள் மற்றும் இவைபோன்ற விஷஜந்துக்கள் துளசி வாசம் பட்ட உடனேயே விலகி ஓடும்.

இவ்வாறு சிறப்பு மிக்க துளசியை ஒவ்வோர் இந்துக்களும் வீட்டில் வளர்ப்பதன் மூலம் அதன் மகத்துவத்தை ஏனையோருக்கும் உணர்த் துவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ நோக்கில் மதம்

ச.ரகுராஜ்
விடுகைவருடம்
மருத்துவபீடம்

சிந்துவெளி நாகரிகத்திலிருந்து தோன்றி மிக நீண்ட பாரம்பரியம், வரலாறு, விழுமியத்தைக் கொண்ட இந்துமதம் மனிதனை மனிதத்துவம் மிக்கவனாக வாழவைக்கின்றது. இந்து மதத்தில் கூறப்படும் சிலவகையான நடைமுறைகள், விழு மியங்களால் மருத்துவத்தில் சில வைத்தியச் செயற் பாடுகளை செயற்படுத்துவதில் சிக்கல்கள் இருப்ப தாக ஒருபாலான மக்கள் கருதுகின்றனர். அவை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

இந்துக்களின் உணவு மரக்கறி ஆகாரம். மிருகங்களை வேட்டையாடிப் புலாலை உண்ணும் பழக்கம் அற்றவர்கள். சில கட்டுப்பாடான சைவ மரக்கறிச் சாப்பாட்டு பழக்கம் உள்ளவர்களுக்கு சில வகையான விற்றமின் குறைபாடுகள் ஏற்படும் சாத்தியம் உள்ளது. சிலவகையான விற்றமின்களை தனிமையாக மாமிச உணவிலிருந்து மட்டுமே பெறமுடிவதுடன் அவை உடலுக்கு மிகவும் அவசியமானது. அவற்றைப் பூர்த்திசெய்ய எமது உணவை நிறையுணவாக்க நாம் பழ வகைகள், பாற்கட்டி, யோக்கற் என்பவற்றை உட்கொள்வதுடன் அவற்றை உட்கொள்வதில் பிரச்சினை இருப்பின் விற்றமின் மாத்திரைகளை எடுக்க வேண்டும். இதைவிட நீரிழிவு நோயுடையவர்கள் இன்சுலினை மனிதன்.பன்றி என்பவற்றிலிருந்து பெறுவதில் இச்சையற்றவர்கள். இதற்கு தற்போது நவீன முறைமூலம் நுண்ணங்கிப் பிறப்பாக்கம் மூலம் பெறப்படும் இனிசுலினே சந்தையில் உள்ளது என்ற தகவல் விழிப்புணர்வை ஏற்படுத்தும்

ஒரு மனிதன் தனது சுயநினைவை இழந்து தன்னிச்சையாகச் செயற்பட பல காரணிகள் உண்டு. இதற்கு மருத்துவ ரீதியில் பல காரணிகளைக் கூறமுடியும். உதாரணமாக மூளையில் நுண்ணங்கித் தாக்கம், மூளையில் இரத்த ஓட்டப் பாதிப்பு, உளவியல் நோய்கள், மூளையில் ஏற்படும் கட்டிகள் என்பலவாகும். இவ்வகையான நோயாளர்கள் உடனடியாக வைத்திய வசதியை நாடின் அதற்குரிய தீர்வை எட்டமுடியும். இதைத் தவிர குறிப்பிட்ட நபருக்கு பேய் பிடித்ததாகச் செய்யும் பரிகாரங்கள் பெருமளவில் வெற்றியளிப்பதில்லை.

இந்துக்களின் சமூகக் கட்டமைப்பில் குடும்பம் பலவானது. அனேகமான குடும்பம் கூட்டுக் குடும்ப அமைப்பானது. இதன் போது பல வகையான நோய்கள் அதற்கான பரிகாரங்களைக் கடைப்பிடிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக நீரிழிவு, குருதிய முக்கம், வலிப்பு, இலிங்க அங்கம் தொடர்பான நோய்களுக்கு சமூகரீதியில் வித்தியாசமான ஒரு நோக்கு உள்ளது. இதைவிட சில வைத்திய நடைமுறைகள் உதாரணமாக கால் துண்டிப்பு, நிரந்தர சிறுநீர்ப்பை பொருத்துதல், நிரந்தர மலம் அகற்றும் பை என்பன தொடர்பான சமூகச் சிக்கல்கள் இன்று நிலவுகின்றன. இதைவிட சில மாத்திரகளின் பாவிப்பு, உதாரணமாக நீரிழிவு மாத்திரைகள் வேறு நோய்களின் போது பாவித்தல் மற்றும் கர்ப்பத் தடை மாத்திரைகள் வேறு நோய்களுக்கு பயன்படுத்துக்கின்றபோது அது தப்பான முறையில் நோக்கப்படும். இவற்றைத் தவிர்க்க மக்கள் நோய்கள் தொடர்பான முழுமையான தகவல்களைப் பெற்று சமூகத்தில் குறிப்பிட்ட நோயாளிகளையும் மனிதனாக நோக்கப்பட வேண்டும்.

கருக்கலைப்பு என்பது இந்துக்களின் மத்தியில் செயற்படுத்தப்படுவதில்லை. ஒரு சிசுவை அழிப்பது என்பது பாவமாகும். எனவே தகுந்த விழிப்புணவு டன் குடும்பத்திட்டமிடல், தகுந்த முறையில் ஆண், பெண் தொடர்புகள் என்பன மூலம் கருக்கலைப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கொடுக்க முடியும் இதைவிட நாம் அறிந்தவரை எம் மதத்தில் குருதிப் பரிமாற்றத்திற்கோ, உடல் உறுப்பு பரிமாற்றங்களுக்கோ எந்தத் தடையும் இருந்ததில்லை. எனவே அவை உரிய முறையில் பல உயிர்களைக் காக்க உதவு கின்றது.

விரத நடைமுறைகள் சிலவகையான நோய்கள் உடையவர்களில் பாதிப்பை ஏற்படுத்தும் உதாரணமாக நீரிழிவுநோய், சிறுநீரகநோய், அனுசேப செயற்பாட்டு தொகுதி நோய்கள், ஓமோன் சம்பந்தமான நோய்களை உடையவர்கள் நீண்ட நேரம் உபவாசம் தொடர்பான விரதங்களைக் கடைப்பிடிப்பதால் அத்துடன் அதற்குரிய மாத் திரைகளுடனான பாவனையும் நோய் நிலைமையை பாதித்து மரணம் வரை இட்டுச்செல்லும் . எனவே இவ்வகை நோயுள்ளவர்கள் தகுந்த முறையில் ஒருநேர போசனத்தவிர்ப்பு, அல்லது மருத்துவ ஆலோசனையுடனான அனுஷ்டானம் மூலம் தேவையற்ற சிக்கல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்கலாம்.

உடற்பயிற்சி, யோகம், தியானம், இந்து மதத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளால் உடலியல், உளவியல் வியாதிகளின் மிகச் சிறந்த தீர்வாக அமையும் அவற்றைத் தகுந்த முறையில் செயற்படுத்த வேண்டும். தற்கால ஆலயங்களில் செயற் படுத்தப்படும் சில கிரியைகள் சிக்கலானவை. அவை பண்டையகால நடைமுறைக்குரியன. உதாரணமாக யாகம், ஊதுபத்தி புகை என்பன இக்காலத்தில் நகரமயமாக்கிய சிறிய பரப்புள்ள கோயில்களில் செயற்படுத்துவதால் ஆலய பூசகர்களும், அடியவர்களும் புகை சம்பந்தமான பல நோய் களுக்கு முகம்கொடுக்க நேரிடும். உதாரணமாக முட்டு, சுவாசப்பை தொடர்பான நோய்கள், கண் நோய்கள், ஒவ்வாமை மற்றும் நீண்ட கால நோக் கில் புற்றுநோய் என்பவற்றுக்கு அடித் தளமிடப்படும். எனவே இந்நடைமுறைகளை தகுந்த பரப்புள்ள பெரிய ஆலயங்களில் செயற்படுத்தும் போது ஏற்படும் பின்விளைவுகள் தவிர்க்கப்படும்.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்கில் இந்து மதத்தின் செயற்பாடுகள், விழுமியங்கள் நன்கு குறித் தொதுக்கப்பட்டவை. அவற்றைச் சரியான முறையில் நாம் அடுத்தபரம்பரைக்கு கையளிப்பது எம் தலையாய கடமையாகும்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பது விரதம்

சோ.வேணுயா
2ம் வருடம்
பொறியியல் பீடம்

மனிதராய்ப் பிறந்த அனைவரதும் வாழ்க்கையுடன் சமயம் பின்னிப் பிணைந்துள்ளது. பண்டைய கால சமுதாய வாழ்க்கையில் இயற்கை, சமூக ஒழுக்கம் பற்றிய ஒரு விளக்கமாக சமயம் விளங் குகின்றது. இயற்கையுடன் இணைந்து ஒழுக்க நெறியை நிலைநாட்டுதல் என்னும் கருத்துடைய 'ரித' என்ற வடமொழிச் சொல்லுடன் தொடர்புடையதாக 'விரதம்' என்ற சொல் தமிழில் உருவாக்கப்பட்டுள்ளது.

எமது இதிகாசங்கள் புராணங்களில் தவம், விரதம் பற்றிய கருத்துக்கள் பல்வேறு இடங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். தான் செய்ய வேண்டிய விடயத்தில் உறுதியாக மனதில் தீர்மானம் செய்வது விரதம் ஆகும். "காப்பது விரதம்" என்பது ஒளவைப் பிராட்டியின் வாக்கு. ஆன்ம ஈடேற்றத்துக்கு எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யக்கூடாது என்பது பற்றிய விளக்கத்தை அறிந்து அதன்படி அனுஷ்டிப்பதே விரதம் ஆகும். தவம் என்பது கடுமையான வழிபாட்டு முறை ஆதலால் எளிமையான முறையாக விரதத்தைக் கைக்கொள்வது சுலபம் என 'சைவத் திருக்கோயில் கிரியை நெறி' எனும் நூல் எடுத்தியம்புகிறது.

சமூகத்தில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்தும் சாதனமாக விரதங்களை இந்துக்கள் வழிபாட்டு முறையில் கைக்கொண்டு வந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குரிய நெறிகளைக் கைக்கொள்வதால் சமூகத்தில் சிறந்த குடும்பத் திட்டம், சமூகப் பண்பாடு, உடல் ஆரோக்கியம், தூய்மை, கொடை, எளிமை, அடக்கம், சுகாதாரம் போன்ற பண்பாடுகள் பேணப்படுகின்றன.

விரதம் என்ற சொல் ஆணை, கட்டளை, விருப்பம், ஒழுக்கம் எனப் பலவாறு பொருள்படும் எனப் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் உருவான விரதம், வழிபடும் முறைக்கு ஒரு வழியாக அமைந்தது. தூய்மையான சூழ்நிலையில் மனதை ஒருமைப்படுத்தி பக்தியை வெளிப்படுத்த உதவுகின்றது. மனதை செம்மைப்படுத்தியவர்களே விரதம் கடைப் பிடிக்க தகுதியானவர்கள். மனத் தூய்மை, உடல் தூய்மை இரண்டும் உணவுக் கட்டுப்பாட்டால் அமைகின்றன.

விரதம் இருப்பதன் அடிப்படையே உணவு துறத்தல் ஆகும். உபவாசம் என்பதும் இதில் அடங்கும். ஒருவேளை உணவு உண்ணுதல், இருவேளை உணவு உட்கொள்ளுதல், பானம் அருந்தி மறுநாள் விரதத்தை முடித்தல் போன்ற பல முறைகளில் விரதம் கைக்கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதங்களுள் சில, நித்திய விரதங்கள் என்றும், வேறு சில காமிய விரதங்கள் என்றும் சொல்லப்படும். சில தேவைகளை முன்னிட்டு இறைவனிடம் நமது வேண்டுதல்களை முன் வைத்து குறிப்பிட்ட காலத்திற்கு அனுஷ்டித்து அதன்பின் உத்தியாவனம் செய்யப்படுபவை காமிய விரதங்கள். அப்படியல்லாமல் எதுவி தப் பலன்களையும் எதிர்பாராமல் அனுஷ்டிக்கப் படும் விரதங்கள் நித்திய விரதங்கள் ஆகும்.

ஈழநாடு எனும் நூலில் க.வை.ஆ.சர்மா விர தம் பற்றிக் கூறுகையில், "தாய் தந்தை யர் இறந்த திதிகளாக ஆண்டுதோறும் வரும் சிரார்த்த தின விரதம், மாதம் தோறும் வரும் அமாவாசை விரதம், புரட்டாதி மாதத்தில் வரும் மாளய சிரார்த்தனதின விரதம், சித்திரை, ஐப் பசி மாதப் பிறப்புக்களான விஷீ புண்ணியகால விரதங்கள், ஆடி, தை மாதப் பிறப்புக்களான அயன புண்ணிய கால விரதங்கள் என்பன பிதிரர் விரதங்களுள் சிறந்தவை இவை கால எல்லை கருதாமல் அறிவு உள்ளவரை கடைப்பி டிக்க வேண்டிய விரதங்களாம்" என்கின்றார்.

இன்னஇன்ன விரதங்கள் இன்னஇன்ன நோக்கத்துக்காக அனுஷ்டிக்கப்பட வேண்டும் இத்தனை வருடங்கள் கைக்கொள்ளப்பட வேண்டும், இவ்வாறு கைக்கொள்ளப்பட வேண்டும் என்றெல்லாம். விதிமுறைகள் உண்டு. அவற்றை அறிந்து முறையாக கைக் கொள்வது அவசியம். பூஜை முறைகள் வழி பாட்டு முறைகள்,உணவுக் கட்டுப்பாடுகள் சிறப் பாகக் குறிப்பிடப்படாத எல்லா விரதங்களுக்கும் பொதுவான விதி முறைகள் பின் வருமாறு:-

1. அதிகாலை துயில் எழுதல்
2. நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகள் அணி-தல்
3. சந்நியாவந்தனம் முதலிய நித்திய கர்மானு ஷ்டானங்களை முறைப்படி செய்தல்
4. ஆலய வழிபாடு செய்தல்
5. காலை, மாலை வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி வழிபட்டு இயன்றவரை திருமு றைப்பாடல்கள், தோத்திரப் பாடல்களைப் பாடு தல்.
6. விபூதி, உருத்திராக்கம் முதலிய சமய சின் னங் களை அணிந்திருத்தல்
7. காலை உணவினை நீக்கி, மதியம் ஒரு வேளை மட்டும் அன்னமும், இரவில் பால், பழம் அல்லது பலகாரம் உண்ணல்.

விரத நாளிலும் அதற்கு முதல் நாளிலும், மறுநாளிலும் மச்சம், மாமிசம், முட்டை முதலியவற்றை முற்றாக நீக்குதல் அவசிய மாகும். உபவாசம் விரதம் எனினும் முதல் நாளிலும், அடுத்த நாளிலும் ஒருநேர உணவு உண்டு விரதம் இருத்தல் வேண்டும். ஒரு விரதத்தின் பாரணை நாளில் இன்னொரு விர தமும் உபவாசமாக வந்தால் முதலாவது விரதத்தில் பாரணையை துளசி தீர்த்தம் அருந்தி நிறைவேற்றி விட்டு இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அனுஷ்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

திருமயிலை சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் "விரதத்தை கிரமப்படி அனுசரிக்கமு டியாதவர் தம்மால் இயன்றளவு அனுசரிப்பதே தகுதி. தம்மளவுக்கு மீறி தேகத்தை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்புத் தோன்றும். இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும் என்கிறார்.


இந்து சமயக் கடவுளுக்கு விரத காலத் தில் படைக்கப்படும் உணவுகள், நாம் உண்ண வேண்டிய உணவுகள், உண்ணத் தகாத உணவுகள் போன்றவை எமது புராண இதி காசங்களில் கூறப்பட்டுள்ளன. அவை விர தங்கள் கைக்கொள்ள வேண்டிய முறை கள், அவற்றின் வரலாறு, பெருமை போன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவற்றை கூறுவதுடன் நில்லாது விரதங்களின் நோக்கத்தையும், அதனால் ஏற்படக் கூடிய பலன்களையும் கூறுகின்றன. வீட்டில் நியமங்களை செய்ய முடியாதவர் கோயில்களுக்குச் சென்று கடைப்பிடித்து வீடு திரும்பி விரதம் முடிப்பர். அப்படி பார்க்கும்போது கோயில்களுக்கும் விரதங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்புள்ளமை புலப்படும்.

எமது சமயத்தில் விரதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மிகவும் தூய்மையானதாகவும் நுட்பம் நிறைந்ததாயும் காணப்படுகின்றமை உற்று நோக்கத்தக்கது. வேறு எந்த சமயத்திலும் இல்லாதவாறு குளித்து தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து விரதம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நியதி இருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு மேற்கொள்வதால் மன அமைதியும், நிறைவும் கிடைப்பதை உணர முடியும். அந்தவகையில் ஆன்ம ஈடேற்றத்தைப் பெற இந்து மதத்தில் விரதங்கள் உதவுகின்றன என்றால் அது மிகையாகாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டில் உழவர் திருநாளாம் தைத்திருநாள்

சக்திவேல் கமலகாந்தன்
இரண்டாம் வருடம்
தமிழ் சிறப்புத்துறை

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகளில் ஒன்றாக விளங்குவதும், முக்கியமானதுமான பண்டிகை தைப்பொங்கல் பண்டிகையாகும். தைப்பொங்கல் ஆனது தமிழர்களின் மிக உன்னத விழாவாக அதுவும் குறிப்பாக இந் துக்களின் முக்கிய பண்டிகையாக இது விளங் குகின்றது. தைமாதத்து முதல்நாள் இந்தத் தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

ஆங்கில நாட்காட்டிகளில் தைமாதம் அதா வது ஜனவரி என்பது தமிழர்களின் அல்லது தமிழுக்கு உரித்தான தைமாதம் பிறப்பதற்கு ஏறத்தாழ 14 நாட்களுக்கு முன்னதாகவே பிறந்து விடுகின்றது. ஆனால் தமிழுக்கு தை மாதம் பிறப்பது ஆங் கில நாட்காட்டியின் படி ஜனவரி 14 அல்லது 15 ஆகும். இந்த ஜனவரி 14 அல்லது 15 ஆம் திகதியில் கொண்டாடப்படுகின்ற விழாவே தைப்பொங்கல் ஆகும்.

தை மாதமே தமிழுக்கு முதல் மாதமாகக் காணப் படுவதால் அம்மாதத்தில் வருகின்ற தைப்பொங்க லும் கூடிய சிறப்புப் பெறுகின்றது. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பார்கள் எமது முன்னோர்கள். இது பாரம்பரியமாக பின்பற்றப் பட்டு வரும் ஒரு முதுமொ ழியாகும். முன்னைய வருடத்தில் அவர்கள் (தாம்) அனுபவித்த கஷ்டங்களுக்கு எல்லாம் இந்தத் தைமாதத்தில் ஒரு தீர்வு கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

தைமாதத்தில் (தமிழுக்கு) முதல் நாளில் கொண் டாடப்படும் இந்த விழாவானது தமிழர்களின் உன்னதத்தையும், அவர்களின் பண்பாட்டு பாரம்பரியங்களையும் எடுத்துரைக்கின்ற அதே வேளை, இந்த தைப்பொங்கல் விழாவின் பிரதான அம்சமாக "நன்றிக் கடனை செலுத் துதலே" விளங்குகின்றது. நன்றி செலுத்துதல் என்பது ஒருவர் செய்த உபகாரத்துக்கு அவரது அந்த உதவியை நினைவு கூருதல் என்று சொல்லலாம். அத்தகைய நன்றி செலுத்துகின்ற பண்டிகையாக தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

இந்த உலகில் உழவுத் தொழிலே சிறந் தது. அதற்குப் பிறகே ஏனைய தொழில்கள் யாவும். அதனை பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவரும் உறுதிப்படுத்தி உள்ளார்.

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"**

எனக் கூறியிருப்பதானது உழவர்களின் மேன் மையையும் உன்னத நிலையையும் எடுத்து இயம்புகின்றது. இத்தகைய சிறப்புக் கொண்ட உழவர்கள் பயிர் செய்வதற்கு அவற்றோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்த வேலைகளைச் செய்வதற்கும் சூரிய ஒளியும் மழையும் இன்றி அமையாதன ஆகின்றன. சூரியபகவான் மூலமே இந்தச் செயற்பாடுகள் அதாவது மழை மற்றும் ஒளி என்பன கிடைக்கின்றன. மழை இல்லாது போயின் உழவுத் தொழிலை மேற் கொள்ள முடியாது அதன் அடிப்படையில் தமது உழவுத் தொழிலுக்கு உதவி புரிந்த சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே இப்பண்டிகை உழவர் களால் கொண்டாடப்படுகிறது.

தமிழர்களின் பிரதான தொழில்களில் ஒன்றாக உழவுத் தொழில் காணப்படுகின்றது. அது இன்று நேற்றல்ல. சங்ககாலத்திலேயே மருத நிலத்து மக்களின் பிரதான தொழிலாக இருந்ததை நாம் அறிவோம். அத்தகைய உழவுத் தொழிலில் ஒரு சிறப்பு நாளாகவும் நன்றி தெரிவிக்கும் நாளாகவும் அமைவதே இத்தைப்பொங்கல் பண்டிகை. தைப் பொங் கலை உழவர் திருநாள், மகர சங்கிராந்தி, நன்றி செலுத்தும் நாள் என்றும் அழைப்பர்.

இந்தத் தைப்பொங்கல் பண்டிகையானது **"மகரசங்கராந்தி"** எனவும் அழைக்கப்படு கின்றது. அதற்கு என்ன காரணம் எனில் சூரி யன் தனுசு இராசியில் இருந்து மகர ராசிக்குச் செல்லும் அந்தக் காலப் பகுதியைக் குறிக்கும். மகர ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் "மகரரவி" எனப்படும். இந்தக் காலத்தில் சுபகா ரியங்களைச் செய்வது உகந்ததாகும். ஆதவ னின் பூரண கடாட்சம் இந்த நாளில் கிடைக்கும் என்பது ஒரு நம்பிக்கை

மேலும் சூரிய பகவானுக்கு வழிபாட்டாற் றுவது வேதகாலத்தில் இருந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. (ரிக்) வேத்தில் 'அக்கினி' எனச் சூரியபகவான் போற்றப்படுகின்றான். அத்தோடு இதிகாச, புராணங்களிலும் சூரிய வழிபாடுகள் நிகழ்ந்தமையை அறியக் கூடியதாக உள்ளது.

ஆகவே தைப்பொங்கல் பண்டிகை என்பது ஒரு பாரம்பரிய விழா என்றும், நன்றி செலுத் தும் முகமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் , நல்ல விளைச்சலைத் தந்தமைக்காகவும் சூரிய னுக்கு நன்றி செலுத்தி வழிபடுகின்றனர். மழை யின் உதவி காரணமாக உழவினை மேற் கொண்டு தாம் பெற்ற விளைச்சலை வீட்டுக்குக் கொண்டுவந்து அதன் பயனை அனுபவிக்கும் முதல் நாளில் அத்தகைய விளைச் சலை தந்தமைக்காக சூரிய தேவனுக்கு நன்றி கூறுகின்றனர். இவ்வாறு உழவுத் தொழிலை மேற்கொள்கின்ற உழவர்கள் இல்லாது விடின் இவ்வுலகம் இயங்காது. அதனை வள்ளுவர்

**"சுழுன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழுந்தும் உழவே தலை"**

என மிகப் பொருத்தமாகப் பதிவு செய் துள்ளார். என்னதான் நாம் கண்டுபிடிப்புக் களை செய்தாலும் உணவின்றி வாழ்வது சாத் தியமற்றது. ஆகவே ஏர் பிடிக்கும் உழவன் பின்னே ஏனைய தொழில்கள். எல்லாவற் றிலும் உழவே தலைசிறந்தது என்கிறார் வள்ளுவர். எனவே உழவர்களால் கொண் டாடப்படுகின்ற தைத் திருநாளை உழவர் திருநாள் என்பதில் ஐயமில்லை.

தைத்திருநாளுக்கு முதல் நாள் "போகிப் பண்டிகை" என்ற விழா எடுப்பது வழக்கம் இவ்விழாவில் பழைய பொருட்கள் மற்றும் தேவையற்ற பாவனைக்கு உதவாத பொருட் களை வீட்டு முற்றத்தில் போட்டு எரிப்பர். அதனால் தமது கஷ்டங்களும் சேர்ந்து அகற்றப்படுவ தாக தமிழர்கள் உணர்கின்றார்கள். இது பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற அடிப்படையை உணர்த்துகின்றது. அன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டினை அலங்கரித்துத் தைத் திருநாளை வரவேற்க ஆயத்தமாகிவிடுவார்கள்.

தைத்பொங்கல் தினத்திலே அதிகாலை வேளை எழுந்து நீராடி புத்தாடை அணிந்து முற்றத்திலே கோலமிட்டு மாவிலை தோரணங் களையும் வீட்டில் தொங்கவிட்டு அலங்கரித்து இந்துப் பண்பாட்டின் மங்களத்தை ஏற்படுத்து வர். முற்றத்திலே புதுப் பானையிலே பொங் கல் பொங்கி சூரிய பகவானின் வருகைக்க ாக காத்திருப்பர். அத்தோடு பழங்கள் மற்றும் கரும்பு, தானியங்கள் என்பவற்றையும் படைத்து வழிபாடாற்றுவர். சூரியபகவான் உதிக் கும் போது அவனை வரவேற்று பொங்கலைப் படைத்து தூப தீபம் காட்டி வழிபடுவர். பின் னர் அயலவர்களுடன் பொங்கல் மற்றும் தின் பண்டங்களை பரிமாறித் தமது நன்றியைத் தெரிவிப்பர்.

தமிர்களின் பாரம்பரிய இடமாக விளங்கு கின்ற இந்தியாவில் 4 நாட்களும் எமது நாட்டில் 3 நாட்களும் இந்த உழவர் திருநாள் கொண்டா டப்படுகின்றது. இந்தியாவில் போகிப் பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும்பொங் கல் என்பன கொண்டாடப்படுகின்றன.போகிப் பண்டிகை தைப்பொங்கலுக்கு முதல் நாளிலும் அதாவது முத லாவதாகும் இரண்டாம் நாளில் தைப்பொங்கலும் 3 ஆம் நாள் பட்டிப்பொங்கலும் இறுதி நான்காம் நாளில் காணும் பண்டிகை யும் கொண்டாடப்படுகின்றது.

போகிப் பண்டிகையில் பழையவற்றைப் போக்கலும், மாட்டுப் பொங்கலில் உழவினை மேற்கொள்ளவும் இன்னொரு வகையில் உதவியாக இருந்த மாடுகளுக்கு நன்றி கூறு முகமாகவும், காணும் பண்டிகை உற்றார், உறவினரை அழைத்து விருந்தளித்து தமிழர்க ளின் பாரம்பரிய விளையாட்டுக் களை விளை யாடும் நாளாகவும் இது கொண்டாடப்படுகின் றது. இவ்வாறான விளையாட்டுக்கள் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தவும் ஓர் இணக்கப்பாடு உருவாகவும் ஏதுவாக அமைவதோடு தமி ழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களையும் பண்பாடு களையும் மீட்டுருவாக்கம் செய்து புத் துயிர் அளிப்ப தாகவும் அமைகின்றன.

எனவே தமிழர்களின் பாரம்பரிய கலா சாரத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிக் கின்றன. இந்தத் தைப்பொங்கலையும் அத னோடு இணைந்த எமது பண்பாட்டு விழுமியங் களையும் நாமும் கட்டிக்காத்து வாழ்வில் சிறப் போமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

பாலினி பாலச்சந்திரன்
*1*ம் வருடம்
பொறியியல் பீடம்

பக்தியோகம்

பக்தி அல்லது வழிபாடு என்பது ஏதேனும் ஒரு வழியில் அன்பு செய்த மனினுக்கு மிக எளிய, மிக இனிய, மிகவும் இயல்பான முறை யாகும். இந்த பிரபஞ்சத்துக்குரிய இயல்பான நிலை கவர்ச்சியே. உறுதியாக அதற்குப் பின் நிகழ்வது பிரிந்து போவதே. அதுபோலவே மனிதனின் நெஞ்சில் ஐக்கியத்தை நோக்கித் தள்ளும் இயல்பான சக்தி அன்பே. அது தன்னளவில் துயரத்துக்கு காரண மான ஒன்றாயினும் தகுந்த விதத்தில் தகுந்த பொருளில் செலுத்தப்பட்டால் விடுதலையையும் தர வல்லது. பக்தியின் நோக்கம் இறைவனே. அன்பு செய்பவரும் அன்பை ஏற்பவரும் இன்றி அன்பு உண்டாக முடியாது. மேலும் நமது அன்பை ஏற்பவர் முதலில் அந்த அன்புக்குப் பதிலாக நம்மீது அன்பைச் செலுத்துபவராக இருக்கவேண்டும்.

ஆதலால் அன்புக் கடவுள் ஒரு வகையில் மனிதத் தன்மையுடையவராய் இருக்க வேண்டும். அவர் அன்புத் தெய்வமாதல் வேண்டும். அத்தகைய கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்வியை ஒதுக்கி விட்டாலும், நெஞ்சில் அன்புள்ளவர்களுக்கு பிரமம் அன்புத் தெய்வமாக, உருவக் கடவுளாக வருகின்றது என்பது உண்மையே.

இறைவனை நீதிபதியாகவோ, தண்டிப்பவராகவோ, பயத்துடன் பணியப்படவேண்டிய ஒருவராகவோ வழிபடும்முறைகள் தாழ்ந்தவையே. அவை வரவர விரிந்து உயர்ந்த முறைகளாகலாம். எனினும் அன்பு என்னும் பெயருக்குரிய தகுதி வாய்ந்தவை அல்ல. அன்பு ஒரு முக்கோண விளக்காகும். இந்த முக்கோணத்தின் கீழ்ப் பக்கம் உள்ள முதற்கோணம் அச்சமின்மை, இரண்டாவது கோணமாவது அன்பு ஒரு போதும் எதையும் எதிர் பாராதது, கெஞ்சாதது. மூன்றாவதாகிய உச்சிக் கோணம் ஆவது அன்பு ஒன்றுக்காவது, அன்பு ஒன்றுக்காகவே அன்பு செய்வது. அன்பைப் பெறுபவரைப் பற்றிய எண்ணமும் மறைந்துவிடும். அன்புக்காகவே அன்பு செய்ய அன்பே வழி. இது மிக உயர்ந்த தனித்துவமாகும். பரம்பொருளும் இதுவும் ஒன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதா இந்துக்களின் குல மாதா

K. தனஞ்ஜெயன்
விலங்கு மருத்துவபீடம்

தொன்றுதொட்டு மனித இனம் தன்னுடைய அறிவு, அனுபவ வரலாற்றில் சிலவற்றையே மிக்க பயன் அளிப்பதாக அனுபவித்து உள் ளது. அதன் அடிப்படையில் மரங்களில் வாழை யையும், தென் னையையும், வேம்பினையும் மிருகங்களில் நன்றி அறிதலில் நாயினையும், பலத்தில் யானையையும் போற்றுவது போல் வாயில்லா ஜீவன்களில் மனித சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து நிற்பது பசு என்றால் அது மிகை இல்லை. ஏனெனில் பசு மனிதர்களுக்கு உடல், உளரீதியில் இரண்டறக் கலந்துள்ளது. உண்மையில் நம் எல்லோருக்கும் பசுவே தாயாக இருந்து பால் தந்து காக்கின்றது. அதன் அடிப்படையிலேயே பசுவைப் போற்றி தெய் வமாகவும் வழிபட்டு வருகிறோம்.

மேற்கத்தைய வரலாற்று இயல் காலத் திற்கும் முன்பிருந்தே "சனாதன தர்மம்" என்ற இந்து மதம் "எல்லாம் இறை மயம்" என்றும் "தத்துவமசி" அதாவது "நீயும் பரம் பொருளே" என்றும் அத்வை தம் - எல்லாம் ஒன்றே அதாவது பரம்பொருள் இன்றி வேறொன்றும் இல்லை என்றும் காண்பவை எல்லாம் கட வுளின் எண்ணற்ற தோற்றங்கள் என்றும் கூறிவந்திருக்கின்றது.

இந்த நிலையில் எல்லாமே இறைவடிவம் என்றே கூறுகின்றது. இருந்தாலும் தொன்று தொட்டு சிலவற்றையே, சில வடிவங்களிலேயே அனைத்துக் குணங்களின் ஐக்கியத்தை உணர்ந்து இருக்கின்றோம்.

பலவற்றுள் ஐக்கியப்பாடு வெளிப்படையாக தெரியா விட்டாலும் எல்லாமே சர்வகுண ஐக்கிய வடிவமே யாவும் பஞ்சபூதங்களின் ஒவ்வொரு வகை அளவு கலவை வடிவமே.

இவற்றள் சில இனங்கள் தெய்வ அம்சங்கள் நிரம் பியதாக அறியப்பட்டதில் இந்து மதத்தில் பசுவுக்கே முதலிடம் கொடுக்கப்படுகின்றது. எனவே இந்துத் தத்துவக் கோட்பாட்டின் படி பசுவை வழிபட்டுப் பயன்பெறுதல் வேண்டும். இந்து மதம் பசுவை வெறுமனே மாடு என்று அழைக்காமல் பசுத்தாய், கோமாதா என்று வழங்கி வந்திருக்கின்றது. எனவே இவ் அடிப்படையில் தோன்றியதே கோபூனாக ஆகும். அதற்காக ஏனைய உயிரியை இழிவு படுத்தவோ, அழிக்கச் சொல்லியோ இந்து மதம் சொல்லவில்லை. எனினும் இந்து மதத் தில் பெற்ற தாய்க்கும் ஈடாக கருதப்படும் ஒரு மிருகம் பசு மட்டுமே. அன்னைகூட இரண்டு வயது வரைதான் பால் தருவாள். ஆயினும் எந்த வயதிலும் பசுவின் பால், மோர், தயிர், நெய் நம் உணவில் சேர்த்துக்கொள்ள மறப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. எனவே பசுவையே அட்சய பாத்திர மாக, வற்றாத ஊற்றாகப் போற்றி வருகின்றது இந்து மதம்.

பண்டைய காலம் தொட்டு வரும் பசு வழிபாடு மூட நம்பிக்கை அல்ல. நம் மூதாதையர்களின் அறிவுடைமையினால் உருவான மிக முக்கி யமான செயற்பாடே. நவீன வாழ்வு வாழ்வு முறை மோகத்தினால், பண்டையோர் விஞ்ஞான அடிப்படையில் மெய்ஞான மும் கூட்டுவாத அளித்துள்ள பாரம்பரிய பண்பாட்டை மறவாது இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு ஜீவ அணுவின் அடிப்படை அமைப்பான DNA ஒரு மனிதனில் பல தலைமுறை மூதாதையர்களின் இயல்புகளை உள்ளடக்கி இருப்பது போலவும் மிகச் சிறிய ஆலம் விதை பிரமாண்டமான ஆல மரத்தின் தன்மைகளை உள்ளடக்கி இருப்பது போலவும் ஒவ்வொரு பசுவும் அனைத்து தேவரின் எருமை வடிவமாகும். அதாவது ஐக்கிய ஸ்வரூபம் கோமாதா பிறப்பு என இந்து நுல்கள் கூறுகின்றன. அதாவது பசுவின் உட லின் ஒவ்வொரு பகுதியிலம் தெய்வங்கும் புனிதத்துக்கு உரியவர்களும் இருப்ப தாக கூறப்படுகின்றது.

பாரதத்தில் வேதகாலம் தொடங்கி இன்று வரை கோமாதவின் பெருமைகளையும், அத னைப் பராமரிக்க வேண்டிய அவசியத்தையும், கோமாத வழிபாடுகளையும் தெரிவிக்காத நூல் கள் இல்லை எனலாம்.

இந்துதொன்மைவியலில் (சமஸ்கிருதத்தில் எழுதப்பெற்ற வேதங்களையும், புராணங்க ளையும் அடிப்படையாகக் கொண்டது) வேத லோகத்தில் 'காம தேனு' என்ற பசுவைப் பற்றி குறிப்பிடுகின்றன.

இது கேட்கின்ற பொருளைத்தரும் சக்தி படைத்ததாக சித்தரிக்கப்படுகின்றத. அசுரர் களும் தேவர்களும் பாற்கடலை கடையும் போது கற்பகவிருட்சம் போல காமதேனுவும் தோன்றியது என்கிறன. இது பெண்ணின் தலையும், மார்வும் பசுவின் உடலும் மயில் தோகையும் இணைந்து தோற்றமளிக்கிறது.

சிவன், முருகன், விநாயகன், பெருமாள் முதலிய தெய்வங்களுக்கு வாகனமாக காம தேனு உள்ளது. இறைவன் வீதியுலா வரு கையில் காமதேனுவின் வாகனங்களில் காட்சி தருகின்றார்.

அப்பர் பெருமான் தனது தேவாரத்தில் ஆ வினுக்கு அருங் கலம் அரன் அஞ்சாடுதல்" என்று பாடுகின்றார். இங்கு 'ஆ' என்றால் பசு அஞ்சாடுதல் என்றால் பஞ்சகவ்வியத்தால் அபிசேகம் செய்தல் எனப்பொருள்படும். பஞ்ச கவ்வியம் என்பது பசுவிடம் இருந்து உண் டாகும் பால், தயிர், நெய், கோசலம், கோமியம் என்னும் ஐந்து பொருட்களும் குறிப்பிட்ட விகி தாசாரத்தில் சேர்ந்த கலவை ஆகும்.

திருமந்திரம் எழுதிய திருமூலர் என்வர் பசுக்களுக் காக வாழ்ந்த சித்தர் ஆவார்.

'கோ' என்றால் 'பூமி' என்றும் அர்த்தம். புரா ணக் கதைகளில் பூமாதாவே கோமாதவாக 'த்த வாபர்' யுகம் முடிந்து கலியுகம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக உருப்பட்டதாக கூறுகின்றது. அதற் கேற்பதான் பகவான் கோபாலனாகப் பிறந்து அந்த அவதாரத்தில் கோக்களோடு அத்யந்தமாக உறவாடினார் என்று கூறப்படுகின்றது.

**இந்துக்களின் பசுவின் வகிபாகம்**

சீவ விரத வழிபாட்டில் பால் அபிஷேகம், நெய் அபி ஷேகம் , தயிர் அபிஷேகம் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் முக்கியம் பெறுகின்றன.

பால் அபிஷேகத்தில்...

சகஸ்ரலிங்க மூர்த்திகளுக்கு பசுவின் பால் அபிஷேகம் சிறப்புடையது. பால் அபிஷேகமானது கன்று உள்ள பசுவின் பசுக்கன்று வேண்டிய அளவு பால் ஊட்டியபின் கறந்த பாலை கறந்த சூடு ஆறமுன்னரே அபிஷேகம் செய்ய வேண்டும் என கூறப்படுகின்றது.

கன்றக்குட்டிகள் பசுவின் மடியை பலமுறை முட்டி, முட்டி பாலூட்டும் போது பசுவின் உடலில் சுதமகங்கா என்ற ஒரு திவ்வியநீர் சுரக்கும். இதை தர்ம கங்கா என்றும் கூறுவது உண்டு. இது பாலில் சேரும் போது 'தர்மகங்காமிர்தம்' எனப்படுகின்றது.

இப்பாலே சகஸ்கலிங்கமூர்த்தியின் அபிஷேகத் துக்கு ஏற்புடையது எனக் கூறப்படுகின்றது. இதைத் தான் சுந்தரரும் 'கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி' என்று பக்தர்கள் இறை அமிர்தத்தை பெறும் முறையாக சுட்டிக் காட்டுகின்றார்.

இப்பால் அபிஷேகம் கோசிங்கம் எனப்படும் பசுக் கொம்பினால் செய்வது மிகுந்த புண்ணியம் ஆகும். இவ்வகையான பால் அபிஷேகம் இவை மிகுந்த சிறப்புடையாகவும், வற்றாத செல்வளம் ஏற்படுத்தும் என்று கூறப் படுகின்றது.

நெய் அபிஷேகத்தினை தேவாரத்தில் திருநெய்தானம் என்று குறிப்பிடப்படுகின்றது. தில்லை ஸ்தலம், நெய் அபிஷேகத்துக்கு சிறப்பானது ஆகும். இது சிறப்பாக பிணி நீங்குவதற்காக செய்யப்படுகின்றது.

**வீபூதி தயாரித்தலில்...**

விபூதியே இந்து சமயத்தவரின் பிரதான அடையாளச் சின்னமாகும். இவ்விபூதியானது நோயில்லாததும், கன்றுடன் கூடியதுமான பசுவினை பூசித்து அப்சுவில் இருந்து பெறப்படும் சாணத்தை பிண்டமாக செய்து உலர்த்தி அக்கினியில் தகனம் செய்து மூல மந்திரத்தினால் சுத்தி செய்யப்பட்டு தயாரிக்கப் படுகின்றது. இவ் விபூதியே இந்து கிரியை களில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

கிரியைகளில் கருமங்களை செய்யத் தொடங்கும் முன்பு குறிப்பிட்ட ஸ்தலத்தில் துடைத்து சுத்தம் செய்து கோமியத்தால் நன்றாக மெழுக வேண்டும். சுத்தம் செய்த ஸ்தலத்தில் கருமம் செய்தால் தேவர்கள் அங்கு வந்து கருமங்களை நிறைவேற்றச் செல்வார்கள் எனவும், இவ்வாறு சுத்தம் செய்யாமல் அரக்கர்களும், பூதங்களும், பிரேதங்களும் அங்கு செய்ய விடாமல் தடுத்து நிறுத்தி விடும் எனவும், அக்கருமங்களின் பயனை அடைய முடியாமல் போய்விடும் என்றும் இதி காசங்கள் கூறுகின்றன.

கிரியைகளில் கோமயத்தில் பிள்ளையார் பிடிப்பதே மிகவும் சிறப்பானதாகும்.

**கோ தானம்**

தானங்களில் பலவித தானங்கள் சொல்லப்பட்டு இருந்தாலும் கோ தானம் என்கிற பசு தானமே மிகவும் விசேடமாகும்.

வருடப் பிறப்பிலும் புண்ணிய காலங்களிலும் கோ தானம் செய்வது மிகவும் விசேடம் ஆகும்.

தானம் செய்யப்படும் பசு வியாதி இன்றியும் கன்று டன் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இக் கோ தானம் அதனை பராமரிக்கக் கூடிய சக்தி உள்ளவர் களுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும் பராமரிப்ப செலவும் சேர்த்தே கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

உதாரணம்: ஆலயங்களுக்கு, கற்றோர்களுக்கு

கோ தான பலன்களாக பசுவின் ஒவ்வொரு ரோமத் திற்கும் ஒரு ஆண்டாக பல ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் கிருஸ்ணபகவானுடன் சேர்ந்து இருக்க முடியும் என்றும் தான் அறியாமல் செய்த பாவங்கள் விலகுகின்றன என்றும் ஒருவரின் முன் ஏழு , பின் ஏழு தலை முறை கள் மோட்சத்துக்குப் போகவழி செய்யும் என்றும் கைலாசத்தில் சிவ கணங்களுடன் சிவபெருமானை தரிசிக்கும் சந்தர்ப்பம் கிட்டும் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இறக்கும் தறுவாயில் கோதானம் செய்யப் படும் போது எமபயம் நீங்குகின்றது என்றும் கூறப்படுகின்றது.

மேலும் அந்திமக் கிரியைகளில் பசு முக் கிய இடம் வகிக்கின்றது. இவ்வாற பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு இந்துவின் வாழ்க்கையிலும், தன் உதிரத்தை பாலாக்கி தருகின்றதாலும் நன்றிக்கடன் செலுத்தும் நோக்கில் பட்டிப் பொங்கல் கொண்டாடப்படுகின் றது.

எனவே இவ்வாறான அருமை பெருமை களை கொண்ட பசுக்களை நாம் நமது இல்லத் தில் பேணிக் காத்திடல் வேண்டும். அவ்வாறு செய்ய இயலாத இடத்து அருகில் உள்ள ஆலயத்திலோ, தொழுவத்திலோ சாதமும், வெல்லமும் கொண்ட உணவையோ, வாழைப் பழத்தையோ கொடுத்தால் சிறப்பாகும்.

மேலும் பலரும் கலந்துகொள்ளக் கூடிய முக்கிய நாட்களில் 108 கோபூசை, 1008 கோபூசை செய்வது நாட்டுக்குச் சிறப்பாகும்.

எனவே இந்துவாகிய நாம் நமது நன்மை நாடி வரும் பசுவை ஆதரிக்க வேண்டும் என் பதை விட பசுக்களப் பராமிரிப்பது நமது கடமை என்பதே முக்கியமாகும்.


உசாத்துணை நூல்கள்


சிவார்ச்சனா சந்திரிகை (அப்பைய தீட்சகர்) தமிழ் அக்கம்

நம் தரிசனம் இதழ்

ஸ்ரீ கருட புராணம் (தமிழ் ஆக்கம்)

தமிழ் விக்கிப்பீடியா (Tamil wikipedia)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவையிற் சிறந்த தமிழ்ப்புலவர்

# காளமேகம்

இ.வேல்கஜன்
பொறியியல் பீடம்
மூன்றாம் வருடம்

தமிழால் சைவநெறிக்கு வளம்சேர்த்த புலவர்கள் பலர். அப்படி சைவ இலக்கியங்க ளில் தவிர்க்கவொண்ணா இடம்பெற்ற ஒருவர் கவி காளமேகம்.

கவி காளமேகத்தின் இயற்பெயர் வரதன். தமிழ் நாட்டின் திருவரங்கம் ஆலயத்தில் மடைப்பள்ளி பரிசாரகனாக இருந்த அவர், அருகிலிருந்த திருவானைக்கா சிவன் கோயி லில் ஆடல்மகளாக இருந்த மோகனாங்கி மீது ஆசை கொண்டு அங்கேயே தங்கியிருந்தார் அங்கு அம்பிகையை நோக்கித் தவம் செய்த ஒரு சித்தருக்குக் கிடைக்கவேண்டிய அம்மன் அருள், எதேச்சையாக இவருக்குக் கிட்டவே, நினைத்தவுடனே பாடும் ஆற்றலை அடைந் தார்.

வரதன் கோயிலில் தூங்கிக் கிடந்ததாகவும், அந்தவழியே இளம்பெண் வடிவமெடுத்து உலாப் போன அம்பிகை தாம்பூலத்தை உமிழ இடம் கேட்க, தூக்கக் கலக்கத்தில் அவள் மோக னாங்கி தான் என்றெண்ணி மயங்கிய வரதன், அவள் உமிழத் தன் வாயைத் திறந்ததாகவும், அந்தத் தாம்பூல எச்சிலை உண்டதாலேயே அவன் கவி காளமேகமாக மாறியதாகவும் ஐதிகங்கள் கூறும்.

காளமேகம் என்றால், "இடைவிடாது மழை கொட்டும் மேகம்" என்று பொருள். நினைத்த பொழுதில் நினைத்தது போல் கவி பாடும் வல்லமையை அவர் கொண்டிருந்தார். இவரது பாடல்களில் ஒரேபாடலில் இரு பொருள் தரும் சிலேடைப் பாடல்களும், நகைச் சுவை உணர்வு மிகுந்த தனிப்பாடல்களும் பிரசித் தமானவை. உதாரணத்திற்கு சிலவற்றை இங்கே பார்க்கலாம்:

**கண்டீரோ பெண்காள் கடம்பவனத்து ஈசனார்**
**பெண்டீர் தமைச்சுமந்த பித்தனார் – எண்திசைக்கும்**
**மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்**
**அக்காளை ஏறினாராம்.**

பித்தனான ஈசன் தங்கையை எரித்தான், அக்காவுடன் தப்பாக நடந்துகொள்கிறான், கவனம் பெண்களே என்று எச்சரிப்பது போலி ருக்கும் இப்பாடலின் உண்மையான பொருளே வேறு.

தங்கை – தன்கைக்கு மேலே நெருப்பிட்டா ராம்,

அக்காளை – அந்தக்காளையில் ஏறினாராம்

கடம்ப வனத்து இறைவன், கங்கை யையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்புறம் உமையையும் (பெண்களை) சுமந் தவர், கையில் தீயை ஏந்தி, காளையில் ஊர்கி றார் என்பதை இகழ்வதுபோல் புகழ்ந்து பாடுகி றார் புலவர்.

**நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்**
**வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது - விஞ்சுமலர்த்**
**தேன்பாயும் சோலைத் திருமலை ராயன்வரையில்**
**பாம்பாகும் வாழைப் பழம்**

இந்தப்பாடல், பாம்பிற்கும் பொருந்தும், வாழைப் பழத்துக்கும் பொருந்தும் எப்படி?

முதலில் பாம்பைப் பார்ப்போம்:
அது நஞ்சுண்டு, தோலுரிக்கும், நாதன் முடிமேலிருக்கும், பாம்பு தீண்டினால் நாம் மீள மாட்டோம்.

சரி, வாழைப்பழத்துக்கு எப்படிப் பொருந் தும்?
அது நஞ்சி (நைந்துபோய்) இருக்கும், தோலை உரிக்கலாம், பஞ்சாமிர்த அபிசேகம் செய்யும் போது இறைவன் முடியிலிருக்கும், வெஞ்சினமாக (சிற்றுண்டியாக) அதை பல் லால் கடித்தால் வாய்க்குள்போய்விடும்.

எனவே திருமலைராய மன்னனின் தேன்பாயும் வளமிக்க ஊரில் பாம்பும் வாழைப் பழமும் ஒன்று தான் என்று நகைச் சுவையாக முடிக்கிறார் கவிஞர்.

சைவ-வைணவ மோதல்கள் முற்றியி ருந்த அவர் காலத்தில், அரியும் சிவனும் ஒன்று என்பதுபோல், தன் வழக்கமான பாணியிலே உறைக்கும்படி கூறியிருக்கிறார் காளமேகம்.

**சாரங்க பாணியார் அஞ்சக்கரத்தர் கஞ்சனைமுன்**
**ஓரங்கம் கொய்த உகிர்வாளர் - பாரெங்கும்**
**ஏத்திடு மையாகரினதாய் இவர் உம்மைக்**
**காத்திடுவர் எப்போதும் காண்.**

இதை சிவனுக்கென்று எடுத்தால்
சாரங்கம் – மானை ஏந்தியவர், ஐந்து அக்கரத் தார் (பஞ்சாட்சரன்),
கஞ்சனை – பிரமனின் தலையைக் கொய்தவர்,
ஏத்திடும் உமையாகர் – உமையம்மையை ஒரு பாக முடையவர்.

விஷ்ணுவுக்கென்று எடுத்தால்,
சாரங்கம் எனும் வில்லினை ஏந்தியவர்,
அம்சக்கரத்தர் – அழகிய சக்கரம் கொண்டவர்,
கம்சனைக் கொன்றவர்,
மையாகர் – கருமை நிறத்தினுடையவர்.
என்று இருவேறுவிதமாகப் பொருள் வரும்.

**காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை**
**கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க - கைக்கைக்குக்**
**காக்கைக்குக் கைக்கைக்கா கா.**

ஏதோ கெக்கே பிக்கே என்று உளறுவதாக எண்ணவேண்டாம். இது முழுக்க முழுக்க பொருளுள்ள பாடல் என்றால் நீங்கள் நம்புவீர் களா?

காக்கைக்கு ஆகா கூகை – காகத்திற்கு கூகை ஆகாது
கூகைக்கு ஆகா காக்கை – கூகைக்குக் காகம் ஆகாது
கோக்கு கூ காக்கைக்கு – கோ (அரசன்) வுக்கு நாட்டைக் காப்பதற்கு
கொக்கு ஒக்க – கொக்கைப் போல,
கைக்கைக்கு – பகையை எதிர்த்து
காக்கைக்கு – (நாட்டைக் ) காப்பதற்கு
கைக்கு ஐக்கு ஆகா – சிறந்த ஐ (அரசன்) யாலும் ஆகாது. (கூகை – ஆந்தை)

இரவில் கண்தெரியாத காகம், பகலில் கண்தெரியாத கூகை என்றவாறு எதிரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனம் அறிந்து தாக்கவேண்டும். கொக்குப் போல காத்திருந்து சரியானசமயத்தில் எதிரியை சமாளிக்கா விட்டால், அரசனால் நாட்டைக் காப் பாற்றமுடியாது என்பதை சுற்றிவளைத்துச் சொல்லும் இந்தப் பாடல், காளமேகத்தின் தமிழ்ப் புலமைக்கு ஒரு அற்புதமான சான்று.

இப்படி படிக்கப் படிக்க சுவாரசியமாக இருக்கும் எத்தனையோ இனிமையான 'காளமேகம் தனிப் பாடல்கள்' கிடைக்கின்றன. தமிழ் மீதும் சமயம் மீதும் மாறா அன்பு கொண்டவராயின், ஒருதடவை அவற்றைத் தேடி படித்துப் பாருங்கள்! சந்தர்ப்பவசத் தால் மேலைத் தேய-ஆங்கில மோகத்தில் ஓரளவு மூழ்கியவர் நீங்கள் என்றால் நிச்சயம் மாறுவீர்கள்.

*****

"காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நீள்தரையில் வந்ததன்பின்
வாரென்று மென்முலையார் ஆச்சியர்கை வந்ததன்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே"

"மேகமாய் வானத்தில் இருக்கும் போது கார் என்ற பெயரைப் பெற்றாய். மழையாய் தரைக்கு வந்தபின் நீர் என்ற பெயரைப் பெற்றாய். மார்புக் கச்சையால் கட்டப்பெற்ற மென்மையான முலைகளையுடைய இடைச்சியர்களின் கையிலே வந்ததன் பின்னர் மோர் என்ற பெயரைப் பெற்றாய். மூன்று பெயர்களைப் பெற்றுவிட்டாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பண்பாட்டில் கோலக் கலை

**வி.ஆரணி**
**2ம் வருடம்**
**பொறியியல் பீடம்**

எமது சைவசமயமானது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். சிந்துவெளியில் கிடைத்த சில சான்றுகள் இக்கருத்தினை உறுதி செய்கின்றன. எமது இந்து சமயமானது சிறந்த பண்பாட்டினை பின்னணியாகக் கொண்டு போற்றப்பட்டு வருகின்றது. பண்பாடு என்பது குறிப்பிட்ட இனமோ சமூகமோ தன் அறிவினாலும் அனுபவத்தாலும் பேணிப் பாதுகாத்து வரும் செயல்களையும், நடைமுறைகளையும் உள்ளடக்கியதாகும். அந்த வகையில் உள்ளத்தையும், உடலையும், சுத்தமாகப் பேணுதல், எல்லோருடனும், அன்பாகப் பழகுதல், உணவு, உடை, வீடு என்பவற்றை அழகுபடுத்துதல் போன்றவற்றுடன் கோலம் போடுதல், மாலை கட்டுதல், சிற்பம் செதுக்குதல், ஓவியம் வரைதல் போன்ற செயல்களும் பழைய காலத்தில் இருந்தே போற்றப்பட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான கோலக் கலை பற்றி அறிந்து கொள்வோம். ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு கோயிலாகக் கொள்ளப்படுகிறது. எனவே அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து வீட்டையும் சூழலை யும் சுத்தம் செய்து பின்னர் முற்றத்தில் பசுவின் சாணத்தை நீரில் கரைத்து தெளித்தோ அல்லது மெழுகியோ கொள்ளலாம் பின் வாயிலுக்கு நேராக உள்ள பொருத்தமான இடத்தில் வெள்ளை மாவினால் கோலம் போடலாம். இவ்வாறு செய்வது இலக்குமி தேவியை வரவேற்பது போலாகும். சைவ மதத்தினர் சிறப்பாக மார்கழி மாதத்தில் கோலம் போடத் தவறுவதில்லை. மார்கழி மாதத்தில் ஊர்ந்து செல்லும் ஜீவராசிகளின் எண்ணிக்கை அதிகமாகும். இவற்றுக்கு உணவு கொடுக்கும் நோக்கிலேயே சைவமக்கள் கோலம் போடுகின்றனர். தற்காலத்தில் பூரண கும்பம் வைக்கும் வேளைகளில் கோலம் போடுவது வளர்ந்து வருகின்றது.

மாக்கோலம் ஆனது அவை வரையப்படும் முறைகளைக் கொண்டு இரண்டு வகைப்படும். அவையாவன கம்பிக்கோலம், புள்ளிக்கோலம் ஆகும். கம்பிக் கோலம் என்பது கோடுகளை எளிமையான வடிவவியல் ஒழுங்குகளில் வரைவதன் மூலம் அழகிய சீரான வடிவங்களைப் பெறுதலைக் குறிக்கும். புள்ளிக் கோலம் ஆனது கோடுகளை வரைவதற்கு முன் புள்ளிகளை இட்டு அதன் அடிப்படையில் வரையப்படுகி றது. புள்ளிகள் இடப்படும் முறையை அடிப்படையாகக் கொண்டு இது நேர் புள்ளிக்கோலம், ஊடு புள்ளிக் கோலம் என இரண்டு வகைப்படும். நேர் புள்ளிக் கோலத்தில் புள்ளிகள் கிடையாகவும் நிலைக்குத்து வரிசையிலும் ஒரு சதுர வலைப்பின்னல் வடிவில் அமையும். ஊடு புள்ளிக் கோலத்தில் ஒன்றுவிட்ட நிரல்களில் உள்ள புள்ளிகள் ஒரே கிடைக் கோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலும் அவற்றுக்கு இடையில் உள்ள புள்ளிகள் முன் கூறிய வரிசைகளுக்கு இடையிலும் வரும் வகை யில் சமபக்க முக்கோண வலைப் பின்னல் வடிவில் அமைந்திருக்கும். அத்துடன் இப்புள்ளிக் கோலத்தில் கோடுகள் வரைவதன் அடிப்படை பற்றி இரு வகைப்படும். அவையாவன வரையப்படும் கோடானது புள்ளிகளைத் தொட்டுச் செல்லும். மற்றையது புள்ளிகளை தொடாமல் அவற்றுக்கு இடையில் வரையப்படும்.

அடுத்து நிறக்கோலத்தை எடுத்து நோக்குவோமானால் நிறக் கோலம் ஆனது தரையில் கோட்டுருக்களை வரைந்து அதற்கு நிறப் பொடிகளை அல்லது வேறு பொருள்களைக் கொண்டு நிறமூட்டி அழகுபடுத்துவர். (தற்காலத்தில் கோலங்கள் பொதுவாக அழகுக்காகவும் மரபினைப் பேணுவதற்காகவும் மற்றும் வீட்டுக்கு வருபவர்களை வரவேற்பதற்காகவும் இடுவர்.)

கோலம் இடுவதன் மூலம் எந்தவித உபகரண உதவியும் இன்றி கைவிரல்களின் முயற்சி கொண்டு அழகான நேரிய கோடுகளை வரைதல். நல்ல கருத்துக்களை வெளியிடத்தக்க அமைப்புக்களை உருவாக்கல், வர்ணங்களை பொருத்தமான முறையில் உபயோகித்தல் போன்ற கலை நுணுக்கங்களை வளர்க்க முடியும். கோலங்கள் போடுவதை தினமும் வழக்கமாக்கிக் கொள்வதன் மூலம் எமது உடலுக்கு ஓரளவு பயிற்சியை அளிக்கிறது. காலை நேரத்தில் கற்பனை வளத்தையும், அழகுணர்வையும் வளர்க்கும். தெய்வ உணர்வை உண்டாக்கும்,உற்சாகம், மகிழ்வு, முயலும் திறன் என்பன சுடர் விடும். அத்துடன் நவக்கிர தோஷம் நீங்குவதற்காக தோஷ நீக்கத்துக்கு உரியவர்களை பயன்படுத்திக் கொள்வார்கள். எனவே பலவகை யிலும் நம் வாழக்கைக்கு உதவும் கோலக் கலை வளர்க்கப்பட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயலால் வேறு யார் துணை?

சிவகாமி
2ம் வருடம்
தமிழ் சிறப்புத்துறை பேராதனைப்
பல்கலைக்கழகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

அமலனும் உமையும் கைலையில் இருக்க
அமரர்கள் சென்றுதம் குறைகளை மொழிய
சமரிடும் சூரனின் கொடுமைகள் களைய
குமரனாய் ஆறுதிரு முகத்துடன் உதித்தாய்

அவனிதான் உலகென சுற்றி வந்தாய்
அன்னையும் தந்தையும் உலகென உணர்ந்தாய்
அண்ணனைக் கோபித்து ஆண்டவா நீயும்
ஆண்டியாய்ப் பழனியில் அமர்ந்தனை ஏனோ?

பழமுனக் குணர்த்திய தத்துவம் உறைக்க
பழனியில்போய்நீயும் கோயில் கொண்டமர்ந்தாய்
அழகனாய் எம்மின மனங்களில் உறைந்தாய்
அன்பொடு குறிஞ்சியில் உறைவதும் ஏனோ?

ஈழத்தின் தலையெனத் திகழ்ந்திடும் நகராய்
யாழதில் உன்திருக் கோயில்கள் கண்டேன்
நல்லையில் மாவையில் சந்நிதி தனிலும்
தொல்லைகள் போக்கிடும் இறைவனாய்க் கண்டேன்

பல்கலை கற்றிட இங்கு நான் வந்தேன்
இல்லையே நீயென ஏங்கியே நின்றேன்
எல்லையில்லா உந்தன் கருணையை நினைத்தேன்
பல்கலைக் குறிஞ்சியில் குமரனாய்க் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சியில் உறைந்திடும் தத்துவம் உணர்ந்தேன் - எம்.
குறையொரு குணத்தையும் மேம்படுத்திடவே
குமரனாய் இங்கு நீ உறைந்தனை ஐயா
கும்பிட்டு உன்னடி தொழுகின்றோம் ஐயா!

ஓடியே வருகின்றோம் உன்னடி தேடி - தினம்
நாடியேவருகின்றோம் வீட்டையும் மறந்து
பாடியும் பரவியும்உன் புகழ் கூறி - நாம்
கூடி இங்கு உன்னோடு இருப்பதும் சுகம் தான்

எத்தனை குறைகள் தான் எமக்கு நேர்ந்திடினும்
ஏதாவதுதொரு குறை உனக்கு வைத்தோமா?
மொத்தமாய்த் தமிழர் நாம் படுகின்ற அவலம்
இத்தனை காலமாய் நீ அறிந்திலையோ?

அம்மையப்பரொடு அண்ணனும் சேர
அணங்குகள் இருவர் துணையுனக் கொண்டு
அன்பாக உன்னடி தொழுதிடும் நமக்கு
ஆரையா துணையிங்கு நீயலால் வேறு

உயிரொடு உணர்வையும் உடலையும் அழித்தார்
உன்திருக் கோயில்கள் பலத்தையும் கவந்தார்
எளியவர் இதைத்தான் செய்திடல் முடியும் - இனி
என்னையும் உன்னையம் பிரித்திடலாமோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

**மீருஜா விஜயகுமார்**
**1ம் வருடம்**
**பொறியியல் பீடம்**

- இறைவனை நெருங்கிவிட்ட ஞானிக்கு அரசனும் துரும்பாகி விடுவான்.
- ஆணவம் போகிக்கு வரும். யோகிக்கு வராது. எல்லாவற்றையும் கடந்த நிலை ஞானியின் நிலை.
- என்னுடையது என்று சொல்ல இறைவனைத் தவிர ஒருவனுக்கு வேறு எதுவும் இல்லை.
- எவ்வளவு பெரிய ஆணவக் காரனும் இறுதியில் இறைவன் என்னும் நெருப்புக்கே சொந் தமாகி விடுவான்.
- பற்றற்ற துறவியின் சடலம் எரியும்போது கூட அந்த நெருப்பு அவர்கள் ஊனுடலை எரிப்பதோடு நின்று விடுவதில்லை. ஞான ஒளியைப் பரப்புகிறது.
- புறப்பட்ட இடம் எவனுக்குத் தெரிகிறதோ அவனுக்கே தான் போய்ச் சேர வேண்டிய இடமும் தெரியும்.
- மனிதர்களுக்கு வெற்றி வரும்போது, ஆணவம் கூடவே வரும். அடிவிழும் போது அதுவும் நாய்க் குட்டி போல அடங்கிவிடும். ஞானியின் ஆணவம் இறைவனை சந்திக்கும் வரை நீடிக்கும். காரணம் அந்த ஆணவம் தன்னை அறிந்து கொண்டதற்கான தத்துவ விளக்கம்.
- உலகத்தில் தலை சிறந்த முடிவான டாக்டர் ஆண்டவனே! மற்றவர்களெல்லாம் தற்காலி கமா னவர்களே!
- வாழ்க்கை அரங்கில் எவனுடைய ஆணவமும் செல்லுபடியாகாது. ஆனால் ஞானியின் ஆணவம் உலகத்தையே ஆட்டிவிடும் அதற்கு பெயர் ஆணவம் அல்ல தெய்வீக உணர்ச்சி யின் திரட்சி.
- ஞானி இறைவனுடைய காலாக நிற்க விரும்புகிறான். மனிதனோ இறைவனுடைய தலையே தானென்று எண்ணுகிறான்.
- இறை நம்பிக்கை என்பது சாதாரண மனிதனையே அரச பதவிக்கு உயர்த்தி விடுகிறது.
- வரவு செலவு எழுதுகின்ற செட்டியாரை விட, துறவு கொண்டு விட்ட ஞானிக்குத்தான் மரியாதை அதிகம்.
- ஆசையும் மோகமும் இல்லாதவன் எவனுமே தலை நிமிர்ந்து நிற்க முடியும். ஆசை வளர்வதும் ஆணவம் பெருகுவதும் அழிவுக்கே அறிகுறி.
- அறிவும் உணர்ச்சியும் தாமதித்தே வருகிறது. ஆனால் காலம் முந்திக் கொண்டு வருகிறது.
- காலம் பார்த்து காரியம் செய்தால் பூமியையே விலைக்கு வாங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய வழிபாடு

உ.நிவேதிகா
2ம் வருடம்
விலங்கு மருத்துவ பீடம்

இந்து சமயம் பல வணக்கத் தெய்வங்களையும் வழிபாடுகளையும் பேணிவரும் சமயமாகும். செவிவழிச் செய்தியாகக் கேட்டு வழிபடப்படும்பலதெய்வங்களில்ஒன்றாக இல்லாமல் நேரடியாகக் கண்ணாலே கண்டு காட்சியினால் அறிந்து வழிபடும் ஒரு தெய்வமே சூரியன். ரவி பாஸ்கரன், ஆதித்தியன், சவிதா, சுகான், பானு, மார்த் தாண்டன் என பல பெயர்களோடு அழைக்கப்பட்டு வரும் இத்தெய்வ வழிபாடு தொன்மைக் காலத்திலிருந்து இன்றைய வரையில் சிறப்புடைய ஒரு வழிபாடாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவ் வழிபாட்டின் தொன்மை இற்றைக்கு நாலாயிரம் (4000) ஆண்டிற்கு முற்பட்டதாகுறிப்பிடுவர். இந்து சமயத்தின் மூல இலக்கியமாகவும் இந்தியாவின் முதல் இலக்கியமாகவும், கொள்ளப்படும் வேதங்களிலே விண்ணுக்குரிய தெய்வங்களில் ஒன்றாக சவிதா, பகன், பூஷா, விஸ்னுகேசி, வைசுவாதரன், விநஷாகம எனும் பெயர்களால் சுட்டி வழிபாடாற்றப் பட்டதாக அறிய முடிகிறது. ஆதாலால் சூரிய வழிபாடு பழமை மிக்கதாகும்.

சைவ ஆகமங்களிலே சூரியன் சிவனுடன் தொடர்படுத்தப்படுகிறான். சிவன் சூரிய மண்டலத்தில் ஒளிர்வதாகவும் சிவனின் அட்ட மூர்த்தங்களில் ஒன்றாகவும் நான்கு முகமும் எட்டுக்கைகளும் சிகப்பு நிறமும் உடையவராக சிவ சூரியன் என சைவத்துடன் சூரியன் இணைக்கப்பட்டு கூறப்படுதலால் சைவ வழிபாட்டு நெறியிலே சூரியன் முதன் மைப் படுத்தப் படுகிறான்.

உபநிடதத்தில் சூரியனே பரப்பிரமமாக சுட்டப்படுகிறான். எல்லாவற்றையும் ஒளிர்வாக்கும் இயல்பு சூரியனுக்கே உரியது எனக் கூறப்பட்டுள்ளது. புராணங்களிலும் பிரம்ம புராணம், உபபுராணமாக விளங்கும் சௌர புராணம் என்பவை சூரியனின் சிறப்பை கூறுவனவாகும். இதிகாசத்திலே பாரதக் கதையில் குந்திதேவி சூரிய மந்திரத்தை உச்சாடனம் பண்ணியதன் விளைவாக சூரியன் தோன்றி குந்தி கர்ணனை உற்பவிப்பதற்கு காரணமாக சூரியன் விளங்கினான் எனக் கூறுகிறது. இராமாயணத்திலும் இரகுவம்சம் சூரியன் வழி வந்த வம்சம் எனக் கூறப்படுகிறது. பழமை மிக்க இலக்கிய குறிப்புகளின் அடிப் படையில் நோக்குகின்ற போது சூரிய வழிபாடு தொன்மைக் காலத்தில் இருந்தே நிலவி வந்த வழிபாடு என்பது தெரிய வருகிறது. இத்தகைய சூரிய வழிபாட்டை பேணும் சமயிகள் நவக்கிரகங்களில் ஒன்றாக சூரியனை சிறப்பிக்கின்றனர். நவக்கிரக மண்டலத்தில் நடுநாயகமாகவும் சுபக் கிரகமாகவும் விளங்குபவர் என்றும் அவர் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு செல்லும் கால அளவைக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களைக் கணிப்பிடுவர் என்றும் அங்ங னம் கணிப்பிடும் முறை "சூரிய சித்தாந்தம்" "சௌமாரம்" எனவும் கூறுவர்.

சூரியனை ராகு, கேது பற்றும் காலமே சூரிய கிரகணம் எனவும் சூரியனோடு சந்திரன் கலந்திருக்கும் காலம் அமாவாசை எனவும் குறிப்பிட்டு இக்காலங்கள் வழிபாட்டுக்குரிய காலமாக கொள்ளப்படுகிறது.

சூரியன் சிவனை நோக்கி தவம் செய்து கிரக பதமும் ஒளிமண்டலத்தில் ஆயிரம் கிரகணங்க ளுடன் விளங்கும் போது பெற்றார் என்றும் இருளை அளிக்கவும் ஒளியை உணர்த்தவும் வெப்பம் தரவும் வல்ல இவரே உலகம் முழு மையையும் ஒளிர வைத்து மற்றைய 8 கோள் களும் ஒளிர உதவவும் சந்திரனோடு ஒன்றி நிற்பவராகக் கொள்ளப்படுகிறது. இயற்கையை ஒளிர வைக்கும் ஒளித் தெய்வமாய் சூரியனை சிவாலயங்களில் சிவனின் பரிவாரத் தெய்வங் களில் நடுநாயகமாகவும் கொள்கின்றனர்.

"நவக்கிரக ஆராதனை" என்ற நூலில் சூரி யன் சிவந்த நிறம், செம்மரபு, செவ்வாடை அணிந்து செங் குடை, கொடி உடையவராகி ஒளிவீசும் தேரில் பத்மாசனத்தில் கிழக்கு முகம் நோக்கி இரு புயங்களுடன் தாமரை மலர் ஏந்தி வீற்றிருப்பார் எனக் கூறப்படுகிறது. இதே நிலையில் சூரியனை உருவகப்படுத்தி கோயில் அமைத்து வழிபடப்படுவதை காணமுடிகிறது. இந்தி யாவில் மைசூர், ஒரிசா, தஞ்சை திரு விடைமருதூரிலும் சூரியனாருக்கென சிறப்பான கோயில்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இயற்கைத் தெய்வமாகவும் உருவகப்படுத்தி உருவவடிவிலும் வழிபட உகந்த இந்தச் சூரி யனை மந்திரத்தினால் ஆராதித்து வழிபடலாம் எனவும் அந்த வகையில் "காயத்திரி மந்திரம்" சூரியனுக்குரிய மந்திரமாகக் கொள்ளப்பட்டு அம்மந்திரத்தை உச்சாடனம் செய்து கொள்ளப் படுகின்றது.

சூரிய வழிபாடு வாழ்வை ஒளிரவைக்கும். "கண்கெட்ட பிறகு, சூரிய நமஸ்காரம்" என்ற பழமொழி கண் ஒளிர நமஸ்காரமே உகந்தது என்பதாகச் சுட்டுகின்றது. மயூரகவி என்ற வடமொழிப் புலவர்

"சூரிய சதகம்" பாடிக் கண் ஒளி பெற்றதாக அறிய முடிகின்றது.

இந்திய நாட்டில் மட்டுமல்ல ஐரோப்பா, தென் அமெரிக்கா, சீனா, கிரிஸ், மெச்சிக்கோ, யப்பான் முதலான நாடுகளிலும் சூரிய வழிபாடு முதன்மைப் படுத்தப்படுதலைக் காணமுடிகிறது. தென்கிழக்காசிய நாடுகளில் ஈழத்திலும் தாய்லாந்திலும் சூரிய வழிபாடு சிறப்புற்று விளங்குகின்றது. "தைத் திருநாள்" உழவர் நன்றிக் கடனை சூரியனுக்குச் செலுத்தும் ஒரு திருநாளாக "உழவுத் திருநாள்' தைப்பொங்கல் என்னும் பெயர்களோடு வீடுகள், வயல் நிலங் கள், ஆலயங்கள் என்பவற்றில் பொங்கல் இட்டு பூஜித்து வருகின்றனர். இந்துக்களில் சமயத் திருநாட்களில் தைப்பொங்கல் சமய ஆசாரத்துடன்கொண்டாடப்பட்டு வரும் திருநா ளாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட வழிபாடுகளை சூரிய னுக்காக ஆற்றி சூரியனை சிறப்புடைய தெய் வமாகப் போற்றிய இந்து சமயிகள் வழிபாட்டில் தனித் தெய்வமாக சூரியனை வழிபடுவதற்கு உகந்தவாறு சங்கரர் என்னும் சமய தத்துவ வாதி சூரிய வழிபாட்டின் ஒழுங்கினை வகுத்து சௌரம் எனும் மதப் பிரிவினை ஸ்தாபகம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும் . இது இந்து சமயத்தின் அறுவகை சமயப்பிரிவுகளில் ஒன் றாக விளங்கி சூரியனை முதற்தெய்வமாக கொண்டுவரும் ஒரு மதப்பிரிவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது, ஆகவே சூரியவழிபாட்டை மேற்கொண்டு சகல ஒளியையும் பெற்று வாழ் வோமாக..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றொத்திசைவு

இலட்சுமணன் ஸ்வன்
பொறியியல் பீடம்
மூன்றாம் வருடம்

எடுத்துக்கொண்ட விடயப்பரப்பு கொஞ்சம் சிக்கலானது தான். ஆனால் அலசப்பட வேண்டியது காலத்தின் தேவை. இங்கு மைக்ரோ பக்டீரியன்ஸ் பற்றியது தான் "மரத்துள் மறைந்தது மாமத யானை" என்றோ நனோ டெக்னாலஜிபற்றி அப்போதே நம்மாழ்வார் சொல்லிவிட்டார். என்றோ எந்தக் கருத்தையும் சொல்லவரவில்லை.

விஞ்ஞானமும் சமயமும் ஆதாரமாக ஒரே இலக்கை நோக்கிய பயணமே. இரண்டினதும் நோக்கமும் தெரியாதது தெரிவது அணுகும் விதத்தில் மாத் திரம் மாறுபாடுகள்.

ஒரு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞானமும் மதக் கொள்கைகளும் ஒரே புள்ளியில் இருந்தன. விஞ்ஞானங்கள் மதங்கள் சொல்லப்படுபவையாக மட்டும் விளங்கின. (ஒரு சில சுயநல உட்புகுத்தல்களும் இருந்திருக்கலாம் மறுப்பதற்கு இல்லை) ஆனால் காலம் செல்லச்செல்ல சில விஞ்ஞான முன்னேற்றங்களின் பிரதிபலிப்புகள் இக்கொள்கைகளை விலத்த வைத்தன. விலகிக் கொண்டிருப்பதுதான் எங்கள் வெற்றுப் பார்வைக்கு தெரிந்துகொண்டிருந்ததே தவிர அது ஒரு வட்டப்பாதையில் விலகிச் செல்கின்றது என்ற உண்மையை அதிகம் பேர் உணரவில்லை. அதாவது மீண்டும் ஒரு புள்ளியிலேயே சந்திக்கப்போகின்றன. எடுத்துக்கொண்ட விடயப் பரப்பு கொஞ்சம் சிக்கலானது என ஆரம்பத்தில் சொல்லக் காரணம் இங்கு சொல்லப்படும் விஞ்ஞான முடிவுகளும் கொள்கைகளும் மிகமிக அண்மையானவை. தொடர்புபடுத்தக் கூடிய விடயப்பரப்புக்கள் ஏராளம். அனைத்தையும் எழுதுவது என்பது "தி ஃபிளா ஸ்டோரி" நாவலுக்கு விவரணம் எழுதுவது போல் ஆகிவிடும். ஆக விடயப்பரப்பை மட்டுப்படுத்தி நோக்குகின்றோம். இங்கு பிரபஞ்சம் மற்றும் கால (யுகம்) கணிப்புக்கள் பற்றிய இந்து சமயத்தின் கோட்பாடுகளை மட்டும் எடுத்து நோக்குவோம்.

இந்து சமயத்தில் எந்தவொரு இடத்திலும் இறைவனின்தோற்றம்பற்றியும்அண்டங்களின் (பூமியின் அல்ல) படைப்புப் பற்றியும் அல்லது உருவாக்கம் பற்றியும் "ஆதி" பற்றியோ "அந்தம்" பற்றியோ அறுதியிடப்படவில்லை. "ஆதியும் அந்தமும் இல்லாதவன்" என்ற கருப்பொருள் மட்டும் தொன்றுதொட்டு இருந்து வருகின்றது.

ஆனால் சென்ற வருட தொடக்கம் வரை இருந்து வந்த பூமியினதும் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகங்களினதும் உருவாக்கம் பற்றிய பெரு வெடிப்பு (Big Bang) கொள்கையும் "பாட்டனின் கொலை" என்னும் கொள்கையும் பூமியின் உருவாக்கம் தற்செயலானதும் காரணகர்த்தா இல்லை என்பது போன்ற தோற்றத்தையும் , நடந்த சம்பவங்கள் நடந்தவையே எவற்றின் கட்டுப்பாட்டுக்குள்ளும் இல்லாதவையே என்ற கொள்கையை வேரூன்ற வைத்தன.

ஆனால் உண்மை கொஞ்சம் வேறுமாதிரி இருந்தது. எந்தக் கொள்கையை வைத்து இந்து சமயப் படைப்பியல் மற்றும் முழுமுதல் இறைக்கொள்கை மறுக்கபட்டதோ (வேறு சமயங்களிலும் இக்கொள்கை பின்பற்றப்பட்டு இருக்கலாம்) அந்தக் கொள்கைகளில் ஓட்டை கள் இருந்தன. மாற்றுக் கொள்கைகள் முன்வைக்கப்பட, மீண்டும் ஒருமுறை சம யங்களும் விஞ்ஞானமும் ஒரு புள்ளியில் சந்திக்க நகர்வுகள் முன்னெடுக்கப்பட "வளர்ச் சியடைந்த விஞ்ஞானமே மந்திரம்" என் னும் ஆதர். சி. கிளாக் அவர்களின் கூற்று உண்மையாகிக்கொண்டிருக்கிறது. ஆனால் இவற்றை இன்னும் கொஞ்சம் தெளிவாகக் விளங்கிக்கொள்ள விஞ்ஞானத்தின் தற் போதைய மிக மிக அண்மைய நிலைப்பாடு பற் றிய ஒரு நோக்கல் அவசியம்

"பாட்டனின் கொலை" கொள்கையின் பெயரே கொஞ்சம் அபத்தமாகத் தான் இருக்கிறது இல்லையா? கொள்கை அதைவிட அபத்தமாக இருக்கும். கொள்கை என்னவென்றால் உங்களால் இறந்த காலம் செல்ல முடியு மென்றால் அங்கு உங்கள் பாட்டனாரை இளமைக் காலத்தில் நீங்கள் சந்திக்க முடியும் என்றால் ஏதாவது ஒரு காரணத்துக்காக நீங்களே அவரைக் கொலை செய்ய வேண்டி வந்தது என்றால் (அப்பப்பா எத்தனை 'என்றால்') உங்கள் தந்தை எப்படி பிறந்திருக்க முடியும்? நீங்கள் எப்படிப் பிறந்திருக்க முடியும்? நீங்கள் பிறந்திருக்க முடியாது என்றால், பிறகு எப்படி உங்கள் பாட்டனாரை கொன்றிருக்கமுடியும்? ஆக, அதெல்லாம் முடியவே முடியாது. எல்லாம் கற்பனை. என்ற முடிவு எட்டப்பட்ட வேளை முன்வைக்கப்பட்ட கொள்கை தான் சமாந்தர அண்டக் கொள்கை.

அது என்ன ஏதென்று ஆராயமுன்னர் அதனை புரியவைக்க பயன்படுத்தப்போகும் உபவஸ்துக்கள் பற்றி கொஞ்சம் விளக்கம் தேவை. நிற்க, கட்டுரையின் அடி நாதத்தில் இருந்து பாதை விலத்திச் செல்வது போல் தோன்றின் மன்னிக்க, பூரண விளக்கத்துக்கு மேல் உள்ள இத்யாதிகள் தேவைப் படுகின்றன. இங்கு எல்லோருக்கும் எழும் அடிப்படைச் சந்தேகம் காலப் பயணம் சாத்தியமா என்பது கூட வேண்டாம். முதலில் நாம் இறந்த காலத்தை பார்க்க முடியுமா? ( வீடியோ எடுத்து வைத்து அல்ல) என்பதே இந்த அடிப்படைச் சந்தேகத்தைக் கூட போக்காமல் மேலே செல் வது உத்தமமாகப்படவில்லை. எங்கள் எல் லோருக்கும் பரீட்சையமான விடயத்தின் மூலம் இதைக் கவனிப்போம்.

ஒளியாண்டு என்பது தூரத்தை அளக்கப் பயன்படும் ஒரு அலகு. அதாவது ஒரு ஆண்டு முழுவதும் ஒளி பயணித்தால் அது எவ்வளவு தூரம் போகும் என்பதே. (ஒரு செக்கனில் அண்ணளவாக 3 லட்சம் கிலோ மீற்றர்கள் பயணிக்கும்) பூமியில் இருந்து 5 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ள ஒரு கிரகத்தில் அல்லது உப கோளில் ஒரு இராட்சத தளவாடிகளைக் கொண்டு சென்று வைப்பதாகக் கருதின், பூமியில் இருந்து ஒரு பாரிய உருப்பெருக்க தொலைக்காட்டி மூலம் அத்தளவாடியை அவதானித்தால் (விம்பத்துலக்கம் பற்றிய கவலை வேண்டாம். தற்போது தினாத்துறை பிரபலமாகியுள்ள மார்க்ரி என்றும் கருவி மூலமே சந்திரனின் மேடு பள்ளங்களை படம் பிடிக்க முடியுமாம். எனவே அதைவிட பல மடங்கு துல்லியமான தொலைகாட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன) என்ன தெரியும் என்று நினைத்துப் பாருங்கள்....

10 வருடங்களுக்கு முன்னைய பூமியை நாம் அத்தளவாடியில் பார்க்க முடியும். புரிய வில்லையா? இப்படி சிந்தியுங்கள். பூமியில் இருந்து ஒளி தளவாடியைச் சென்றடைய 5 வருடங்கள், பின்னர் தளவாடியிலிருந்து தொலை காட்டியின் ஊடாக எமது கண்ணை வந்தடைய 5 வருடங்கள். ஆக மொத்தத்தில் யாதாயினும் ஒரு கணத்தில் நாம் தொலைகாட்டியின் ஊடாகப் பார்ப்பது அக்கணத்தில் இருந்து 10 வருடங்கள் முன்னைய உயிரோட்டமுள்ள பூமியையே.

கட்டுரைக்கருவில் இருந்து விலகிச் செல் கிறோம் போல் உள்ளது. சரி மறுபடியும் காலப் பயணத்துக்கு வருவோம். அதாவது காலப் பயணங்கள் மூலம் மாற்றம் ஒன்றை ஏற் படுத்தினால் அதன் விளைவு என்ன என்பது தான் சமாந்தர அண்டக் கொள்கை. உதாரணத்துக்கு முன்னர் குறிப்பிட்ட "பாட்டனின் கொலை" என்னும் எண்ணக் கருவையே எடுத்துக் கொண்டால், இச் சமாந்திர அண்டக்கொள்கை சொல்லும் முடிவுஎன்னவென்றால் இறந்த காலத்தில் நாம் ஏற்படுத்திய மாற்றத்துக்குப் பின்னர் ஒவ்வொரு நிகழ்வும் பல்வேறு கோணங்களில் மாற சாத்தியங்கள் உண்டு. அச்சாத்தியமான அத்தனை சம்பவங்களும் வெவ்வேறு அண்டங்கள் பயணிக்கும் (இங்கு அண்டம் எனக் குறிப்பிடப்படுவது மில்க்வே எனும் மகுடி வடிவ பால் வீதியையே) அதாவது ஒரு கோளத்தின் மையத்தில் இருந்து அதன் மேற்பரப்புக்கு கோடானகோடி ஆரைகள் வரையலாம் அல்லவா? அதைப் போல ஒவ்வொரு சாத்தியமான சம்பங்கள் உடனான அண்டமும் மற்றவற்றுக்கு சமாந்தரமாகப் பயணிக்கும் என்பதே.

இவ்விடத்தில் தோன்றும் பாரிய சந்தே கங்கள் என்னவெனில் நாம் இருப்பது இந்த அண்டத்தில் எனின், முரணான ஒரு நிகழ்வு நடைபெறும் போது எவ்வாறு இதே அண்டம் வெவ்வேறு பாதைகளில் வெவ்வேறு சம்பவங்களுடன் பயணிக்க முடியும்? நியாமான சந்தேகம் தான்! ஆனால் இது வரை நாம் பார்த்து உணர்ந்த சம்பவங்கள் எல்லாம் தூ க்கிச் சாப்பிடுவது போன்ற ஒரு உண்மைதான். இதற்கு விடை.

நான் பார்க்கும் தொட்டு உணரும் எந்த வொரு சடமும் நிலைத்த துணிக்கையால் ஆனவை அல்ல. (எங்கள் சார்ப்பாக நிலை யானவை தான் எதுவும் எங்கள் சார்ப்பாக நாளைக்கே மறைந்துவிடப் போகின்றவை அல்ல) அவை எல்லாம் எமது பார்வைப்புல மீடிறனுக்கு உட்பட்ட மீடிறனிலும், எங்களால் உணரக்கூடிய மீடிறனுக்கு உட்பட்ட மீடிறனிலும் அதிரும் போட்டோன் பொசித்திரன் போன்ற வஸ்துக்களே. (இது தொடர்பான குழப்பமான இன்னும் தெளிவாக்கப்படாத இரண்டு மூன்று எண்ணக் கருக்கள் உள்ளன.

இத்துணிக்கைகள் தங்களுக்குள் பிரிந்து சாத்தியமான ஒத்த துணிக்கைகளை உரு வாக்கக் கூடியன. பெருவெடிப்புத் தத்துவம் போல ஒரு துணிக்கையில் இருந்து பிரபஞ்சம் உருவானது என்பதைப் போல் இங்கு பிரிகை அடைந்தது. (கலப் பிரிவைப் போன்றது அல்ல) ஒத்த துணிக்கைகள் உருவாகின்றன. இவ்வாறான ஒத்த துணிக்கைகளின் கூட்டலால் சமாந்தர அண்டங்கள் உருவாகின்றன.

விஞ்ஞான சம்மந்தப்பட்ட இத்யாதிகள் முடிந்த நிலையில் கொஞ்சம் இந்து மதத்துடன் தொடர்புபடுத்திப் பார்போம் நிச்சயமாக நேரிடத் தொடர்புகள் புலப்படவில்லை என்பது மறுப்பதற்கில்லை.ஆனால் இக் கொள்கை எல்லாம் ஈற்றுநிலை இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயத்தில் குறிப்பிடப்பட்ட "மறுபிறவி" பூர்வஜென்ம பாவபுண்ணியம் போன்றவையும் சமாந்தர அண்டக்கொள்கையும் நேரிடையாக ஒப்பிட்டால் அபத்தமாகத் தோன்றலாம். ஆனால் சற்று கூர்ந்து பார்த்தால் இரண்டினதும் அடிநாதங்களின் ஒத்த இயல்பைக் காணலாம். அதாவது ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களின் ஊடாக (பாவபுண்ணியங்களாகக் கருதலாம்) சாத்தியமான நிகழ்வுகள் நடக்கின்றன. உடல் நிலையானது அல்ல என்ற கொள்கையும் பொன்னும் பொருளும் நிலையற்ற மாயை என்ற கருத்தும், சடங்கால் நிலைத்தவை அல்ல அந்ததந்த மீடிறன் வீச்சுனுள் உள்ளவைகளே உணரப்படுப்படுகின்றன போன்ற கொள்கைகளும் எங்கோயோ மேற் பொருந்தப்போவதான சாத்தியங்களாகக் நோக்கக் கூடாதா?

தற்போதுள்ள கொள்கைகள் தான் அறுதியானவை என்பது பொருளல்ல. இன்னும் சித்தாந்தங்களில் முன்னேற்றம் வரலாம். ஆதிக்கொள்கை யுடன் பொருந்தலாம். இத்தனை கால ஆராய்ச்சி முடிவுகளையும் பார்த்து முடிந்த கொள்கையும் நான்கு ஐந்து பக்க கட்டுரையில் அலசிவிட முடியாது தானே! தொடர்ந்து சரியாக மேற்கொண்டுள்ளேனா. கூற வந்த விடயங்களை தெளிவாகக் கூறியுள்ளேனா? என்று தெரியாது. ஆனால் நாம் பார்க்கும் நோக்கில் தான் விஞ்ஞானமும் எமது மதமும் மேற்பொருந்த வேண்டும் என்பதும் இல்லை. இப்படியும் ஒரு சாத்தியக் கூறுகள் இருக்கக் கூடாது என்பதும் இல்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57 வது இந்து மாணவர் சங்கத்தின் 2013-2014 இற்கான ஆண்டறிக்கை

மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்திலே இயற்கை எழில் மிஞ்சும்; பல்கலையும் புகட்டுகின்ற எமது பேராதனைப் பல்கலைக்கழகத்திலே குடிகொண்டிருக்கும் குறிஞ்சிக்குமரன் கல்விச்சமூகத்திற்கு மட்டுமன்றி எல்லா அடியார்களுக்கும் தனது கருணை மழையை பொழிந்து வருகின்றான் என்பது கண் கூடான உண்மையாகும்.

படிப்பில் மட்டுமன்றி பல்கலையிலும் நாட்டம் கொண்டு படிப்படியாக வளர்ந்துவரும் மாணவ சமூதா யத்துக்கு சமய உணர்வுகள் திருப்தியையும், நிம்மதியையும் தரும் வகையில் எமது ஆன்மீக சமூகப் பணிகளுக்கெல்லாம் மைய நிலையமாக குறிஞ்சிக்குமரன் ஆலயம் அமைந்துள்ளமை எமக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். பேராதனையில் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு இவ்வால யத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களுக்கும் பின்னர் ஏற்பட்ட பல இடர்மிகுந்த் சூழ்நிலைகளிலும் தம்மையே அர்ப்பணித்து ஆலயத்தை கட்டிக்காத்தவர்களுக்கும் தொடர்ந்து ஆலய மகிமையை பேணும் விதமாக பல வழிகளிலும் தொண்டுகள் புரிந்து ஆலய வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் நாம் எல்லோரும் கடமைப்பட்டிருப்பதோடு அவர்களுக்கெல்லாம் குறிஞ்சிக்குமரன் அருள் பாலித்தே வருகின்றான் என்பதில் ஐயமில்லை.

பல்கலைக்கழக மாணவ சமுதாயத்தினராகிய எமக்கு முருகப் பெருமானுக்கு தொண்டு செய்யும் பாக் கியம் கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமே ஆகும். மேலும் இந்து மாணவர் சங்க செயற்குழுவானது பொறுப் பாண்மைக் குழுவினருடன் சேர்ந்து ஆலயத்தை நிர்வகித்து பாரமரிக்கும் பணியுடன் இந்து மாணவர் களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றது எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இத்திருப் பணியை எம்மால் இயன்றவரை செவ்வனே செயலாக்குவதற்கு எல்லாம்வல்ல குறிஞ்சிக்குமரன் துணை நின்றான் என்பதில் துளியளவும் ஐயப்பாடு இல்லை. எனவே எம்மால் செய்யப்பட்டவை மிகவும் அற்பமானவை எனினும் அவை மனதிற்கு திருப்தி அளிக்கின்றன என்ற வகையில் எமது ஆண்டறிக்கையினை சுருக்கமாகப் பணிவுடன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

**11.01.2013 -** எமது 57 வது இந்து மாணவர் சங்க செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்டது

**12.01.2013 -** அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிரமதானம் இடம்பெற்றது.

**14.01.2013 -** தைப்பொங்கல் - சூரியபகவானுக்கு விசேட அபிஷேக பூஜைகள் இடம்பெற்று மாணவர்களின் பொங்கலும் இடம்பெற்றது.

**18.01.2013 முதல் 26.01. 2013 -** அலங்கார உற்சவம் - தினமும் மாலையில் அபிஷேகம், விஷேட பூஜை, வசந்தமண்டப பூஜையுடன் எம்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரரா திருவீதியுலா வருதலும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27.01.2013 தைப்பூசத் திருவிழா** - காலையில் அஷ்டோத்திரசத சங்காபிஷேகம் இடம்பெற்று மகேஸ்வர பூசையும் இடம்பெற்றது. மாலையில் வசந்த மண்டப் பூசையைத் தொடர்ந்து விநாகர், அம்பாள் சகிதம் எம்பெருமான் திருவீதியுலா வந்தார்.

**29.01.2013** - வைரவர் விஷேட அபிஷேக பூஜை இடம்பெற்றது.

**09.01.2013** - சிவராத்திரியை முன்னிட்டு ஆலயத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு அன்னதாம் வழங்கப்பட்டது.

**10.02.2013 - சிவராத்திரி** - வழமைபோன்று நான்கு ஜாமப்பூஜை, ஆராதனை என்பன இடம்பெற்றன. ஆலய உள்வீதியில் அமைக்கப்பட்ட மேடையில் இந்து தர்மம் 2012 ஃ 2013 நூல் வெளியீடும் இடம்பெற்றதுடன் ஆலயத்திலே 26 வருடங்களாக சேவையாற்றிய பிரதமகுருவான பா.நித்தியனந்தக் குருக்களிற்கு கௌரவிப்பு வைபவம் இடம்பெற்றது. வழமைபோன்று கலை, கலாசார நிகழ்ச்சிகளும் அதிகாலை சிறப்பாக இடம்பெற்றது.

**06.04.2013** - வழமை போன்று நீர்கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கமத்தினால் திருவாசக முற்றோதல் இடம்பெற்றது.

**14.04.2013** - விஜய வருடப் பிறப்பு விஷேட அபிஷேக பூஜையுடன் சிறப்பாக இடம்பெற்றது.

**25.04.2013 - சித்திரா பூரணை** - விஷேட பூஜை வழிபாடுகளுடன் அன்பர்களுக்கு சித்திரைக் கஞ்சியும் வழங்கப்பட்டது.

**05.05.2013 - புதுமுக மாணவர் வரவேற்பு** - காலையில் சகல பீடங்களினதும் புதிய மாணவர்களால் சிரமதானம் ஆரம்பிக்கப்பட்டு ஆலய மண்டபத்தில் வரவேற்புக் கூட்டமும் நிகழ்த்தப்பட்டு நண்பகல் அன்னதானமும் வழங்கப்பட்டது.

**24.01.2013 - வைகாசி விசாகம்** - விசேட அபிஷேக ஆராதனைகளுடன் வள்ளி, தெய்வானை சமேத ரராய் திருவீதியுலா வந்தருளினார்.

**28.06.2013** -இந்து மாணவர் சங்கத்தின் பெருந்தலைவராக இருந்த திரு.வே. சிவயோகலிங்கத்தின் திடீர் மறைவின் காரணமாக புதிய பெருந்தலைவராக திரு.வ. தர்மதாசன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

**14.17.2013** - ஆனி உத்தர நடேசர் தரிசனம் - அதிகாலையில் சிவகாம சுந்தரி சமேத நடராசப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடேசர் தரிசனுமும் நடேசர் திருவீதி உலாவும் இடம் பெற்றன.

**06.08.2013** - அபிஷேக, பூஜைகளைத் தொடர்ந்து பிதிர்கடன் நிறைவேற்றலைத் தொடர்ந்து அன்னதானம் இடம்பெற்றது.

**24.08.2013** - மணவாளக்கோல தின நவோத்திர சகஸ்ர (1009) சங்காபிஷேகம்
குறிஞ்சிக்குமரன் கும்பாபிஷேக தினமான இத்தினத்தில் காலையில் 1009 சங்குகளுடன் நவோத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகஸ்ர சங்காபிஷேகமும், விஷேட பூஜையும் மதியம் மகேஸ்வர பூஜையும் இடம்பெற்றது. மாலையில் வசந்த மண்டப பூசையும் திருவூஞ்சலும் எம்பெருமான் திருவீதி உலா வருகையுடன் விசேட தவில், நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெற்றது.

**09.09.2013 - விநாயகசதுர்த்தி** - விசேட அபிஷேக பூஜைகள் விநாயகருக்கு இடம்பெற்று வசந்த மண்டப பூஜையுடன் விநாயகர் திருவீதியுலா வந்தருளினார்.

**05.10.2013 முதல் 14.10.2013 வரை** - நவராத்திரி, விஜயதசமி - முதல் ஒன்பது நாட்களும் விசேட பூஜைகள், வசந்தமண்டப பூஜைகள், இடம்பெற்று தேவி தோத்திரங்கள் ஓதப்பட்டன. இறுதி நாளான விஜய தசமியன்று காலையில் ஏடு தொடக்கம், மாலை மானம்பூத் திருவிழா இடம்பெற்று அம்பாள் திருவீதியுலாவு டன் இனிதே நிறைவடைந்தது.

**02.11.2013** - காலையில் முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேக, பூஜைகள் இடம்பெற்று அனைத்து விக்கிரகங்களிற்கும் புத்தாடை அணிவிக்கப்பட்டு விசேட பூஜையும் இடம்பெற்றது.

**04.01.2013 முதல் 08.11.2013 வரை** - பிரதமை முதல் ஷஷ்டி ஈறாக ஐந்து நாட்களிற்கு அபிஷேக விசேட பூசையுடன் வசந்த மண்டப பூஜையுடன் கந்தசஷ்டி கசவமும் ஓதப்பட்டது. மாலையில் கந்தபுராணப் படிப்பும் இடம்பெற்றது. இறுதி நாளான்று விமரிசையாக சூரசம்ஹாரம் இடம்பெற்று பிராயச்சித்த அபிஷேகமும் விசேட வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று இராப்போசனம் வழங்கப்பட்டது.

**09.11.2013 - திருக்கல்யாணம்** - முருகன் வள்ளியை மணம்புணர செய்த லீலைகள், விநாயகரை உதவிக்கு அழைத்தமை, தெய்வானையை சமாதானம் செய்ய எடுத்த முயற்சிகள் மிகவும் தத்ரூபமாக எடுத்துக் காட்டப்பட்டு இனிதாக திருக்கல்யாண வைபவம் இடம்பெற்று இராப்போசனம் வழங்கப்பட்டது.

**17.11.2013 - திருக்கார்த்திகை உற்சவம்** - முருகப்பெருமானுக்கு மாவிளக்கு ஏற்றப்பட்டு ஆலய சுற்றுச் சூழல் அகல் விளக்குகளால் நிரம்பியிருக்க விசேட அபிஷேக வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சொக் கப்பானை எரிக்கப்பட்டு திருவீதியுலா வந்தருளினார்.

**08.12.2013 - விநாயகர் சஷ்டி உற்சவம்** - விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று எழுந்தருளி விநாயர் திருவீதியுலா வந்தருளினார்.

**09.12.2013 முதல் 18.12.2013 வரை - திருவெம்பாவை** - தினமும் அதிகாலையில் சிவகாம சுந்தரி சதேம நடராஜப்பெருமானுக்கு விசேட அபிஷேக பூஜைகள் இடம்பெற்றது. திருப்பள்ளியெழுச்சி, திருவெம் பாவை என்பனவும் ஓதப்பட்டன. பத்தாம் நாள் நடேசர் ஆருத்திரா அபிஷேகமும் நடேசர் ஆருத்திரா தரிசனமும் இடம்பெற்று திருவீதியுலாவும் இடம்பெற்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் விஷேஷாதி விஞ்ஞாபனத்திலுள்ளவாறு கார்த்திகை உற்சவங்களில் விசேட அபிஷேக பூஜையுடன் திருவீதியுலாவும், நடேசர் தரிசனங்கள், மாசிமகம், பங்கு உத்தரம், ஸ்ரீகிருஸ்ண ஜெயந்தி, சுவர்கவாயில் ஏகாதசி, விஸ்ணுவாலய தீபம், ஆடிப்பூரம் என்பனவும் இடம்பெற்றன. மேலும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை விசேட பூஜையும், பஜனை வழிபாடுகளும் தியானமும் மற்றும் நித்திய பூஜைகளும் வெகு சிறப்பாக இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த இந்து மாணவர் சங்க கூட்டங்களும் நடைபெற்றன. மேலும் இம்முறையும் சில தடங்கல்கள் காரணமாக ஒரு சில வருடங்களாக தடைப்பட்டிருக் கும் திருத்தல யாத்திரையை எம்மால் செய்ய முடியாமல் போனமையிட்டு மனம் வருந்துவதோடு அடுத்த செயற்குழுவினர் அக்குறையை நிவர்த்தி செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

**மனமார்ந்த நன்றிகள்**

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது"

எமது செயற்பாடுகளை செவ்வனே மேற்கொள்வதற்கு ஆலோசனைகள் பல தந்து நெறிப்படுத்திய பெருந்தலைவராக இருந்து சேவைக் காலத்தில் மறைந்த அமரர் திரு.வே.சிவயோகலிங்கம் அவர்களிற்கு குறிஞ்சிக்குமரன் அருள் கிடைக்கும் என வேண்டிக்கொண்டு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவுகின்ற பெருந்தலைவர் திரு.வ.தர்மதாசன் மற்றும் பெரும்பொருளாளர், கலாநிதி எஸ். சிவானந்தவேள் அவர்களிற்கு ஆலய பொறுப்பாண்மைக் குழுவினருக்கும் இந்துப் பட்டதாரிகள் சங்கத்தினருக்கும் எமது மனங்கனிந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

ஆலய நித்திய, நைத்திய கிரியைகளை ஆற்றிவருகின்ற ஆலய சிவாச்சாரியார் க.வரதராஜ சர்மா அவர்களிற்கு, ஆலய திருப்பணிகள் சிறப்பாக நடந்தேற தங்களை அர்ப்பணித்த எமது செயற்குழு உறுப்பினர்களிற்கும் ஏனைய மாணவர்களுக்கும் போதனாசிரியர்களுக்கும் எமது நன்றிகளை கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம். மேலும் சிரமதானங்கள் உற்சவங்களில் ஆலயத்திற்கு வந்து தொண்டு புரியும் மாணவர்கள், அன்பர்களிற்கும் திருவிழாக்களை சிறப்பாக செய்ய உதவும் உபயகாரர்களுக்கும் அன்பளிப்புக்ள வழங்கி வருபவர்களுக்கும் நன்றிகள் கோடி உரித்தாகட்டும்.

மேலும் நன்றி கூறத் தவறிய அனைவருக்கும் நன்றிகள் பல கூறிக் கொள்வதுடன் இவர்களின் பணி மென்மேலும் தொடர எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் அருட்கடாட்சம் என்றென்றும் கிடைக்க வேண்டுமென பிரார்த்தித்து அமைகின்றோம்.

நன்றி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இணைச் செயலாளர்கள்,
க.பிரதீஸ்வரன்
து.கஜன்

57 வது இந்து மாணவர் சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பிரதம குருவிற்கு வழங்கிய அன்பளிப்புப் பற்றிய விபரம்

| | | |
|---|---|---|
| பொறியியல் பீடம் | - | 23,000.00 |
| கலைப்பீடம் | - | 10,500.00 |
| விஞ்ஞானபீடம் | - | 5,000.00 |
| இணைந்த சுகாதாரபீடம் | - | 1,000.00 |
| விவசாயபீடம் | - | 22,000.00 |
| அன்பர்கள் | | |
| அரியரத்தினம் | - | 1,000.00 |
| S.சிவசொரூபன் | - | 5,000.00 |
| திருமதி S.சிவாஜினி | - | 2,000.00 |
| S.சிவசங்கர் | - | 5,000.00 |
| பேராசிரியர் திருச்செல்வம் | - | 2,000.00 |
| சிவசுப்பிரமணியம் | - | 1,500.00 |
| ரஞ்சிதா ரேடக்ஸ் | - | 5,000.00 |
| கலாநிதி அன்னவதனி | - | 500.00 |
| நலன்விரும்பிகளிடமிருந்து | - | 11,500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறந்திலோம்....

இவ்விதழ் இடையூறுன்றி வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளிலும் துணைநின்ற அனைத்து உதவும் உள்ளங்களுக்கும் நன்றிகூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

'எம்மை எமக்கறிவித்து' எம்மோடு கூடிவாழும் குறிஞ்சிக் குமரன்

இம்மலர் சிறப்புற வேண்டுமென ஆசியுரைகள் வழங்கிய அனைத்துப் பெரியார்கள்

தரமிக்க, சிறந்த ஆக்கங்கள் தந்துதவிய விரிவுரையாளர்கள், மாணவச் சகோதரர்கள்

விளம்பரங்கள் தந்துதவி இந்நூல் சிறக்க உதவிய வர்த்தகப் பெருமக்கள்

நூல் தொடர்பாக, இயன்றவரை எழுத்துப்பிழைகள், சந்தேகங்கள் தீர்த்துதவிய பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஐயா அவர்கள்

பின்புற அட்டை கவிதை வழங்கிய எஸ்.சரத்பவன்

தத்ரூப அட்டைப்படம் வரைந்த இ.பிரதீசன்

இந்நூலை சிறப்புற அச்சிட்டு வெளியிட உதவிய தேவி Printers

ஏனைய நன்றி கூற மறந்த நன்றிக்கடன்பட்டோர்

அனைவருக்கும் பணிவுடன் பல கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதழாசிரியர்கள்,
இந்து மாணவர் சங்கம்,
பேரதனைப் பல்கலைக்கழகம்

**"மேன்கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிக்
குமரனின்
மணவாளக்
கோலத்தின்
போது...





நவராத்திரி
விழாவின்
போது

தைப்பூசத்
திருநாளில்
குறிஞ்சிக்
குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரன் ஜுவல்லரி

1970 இலிருந்து



பழம் பெரும் புதுமைப்
பொலிவுடன் இயங்கும்
தங்க மாளிகை



விரும்பிய டிசைன்களை
புதிய முறையில்
22 கரட்டில்
பெற்றுக்கொள்ளலாம்.



Since 1970

**Haran Jewellers**

இல. 217, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே : 021 222 6083, 071 418 2480
haranjewelleers@gmail.com
skpe:jfharan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரிக மங்கையருக்கு கண்கவரும் புடைவை ஸ்தாபனம்

# செல்லமுத்தூஸ் ரெக்ஸ்ரைல்



புதுமையான புடைவை ரகங்கள்
பட்டு சாறிகள்
கொட்டன் சாறிகள்
பஞ்சாபி
பஞ்சாபி துணிகள் மற்றும்
ரெடிமேட் ஆடைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

மங்கையர் ஒரு முறை விஜயம் செய்தால் மறுநாள்
நண்பிகளையும் கூட்டி வருவீர்கள் பல வர்ண
கண்கவர் மினுங்கும் சாறிகள் திருப்தியுடன்
சாறி தெரிவு செய்யலாம்

பிரதான வீதி,
கரவெட்டி.

தொ.பே:021 226 3238

# City bake house

கேக் ,பாண் ,கல்பணிஸ், பணிஸ் அடைக் கேக்
போன்ற உணவுவகைகளை பெற்றுக்கொள்ளலாம்.



நெல்லியடி வீதி,
தும்பளை,பருத்தித்துறை

தொ.பே : 0775433363

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தங்க நகை உலகில் மங்கா புகழ் படைத்த

நியூ நடராசாகஜந்தன்
மைதிலி
ஜுவலர்ஸ்

New
Nadarasa Kajanthan
MAITHILY
Jewellers

இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2217878 Fax:021-2217877



New
Nadarasa Kajanthan
SANTHOSI
Jewellery

DEALERS IN GENUINE ORNAMENTS

இல. 59-2/7, செட்டியார்தெரு.
கொழும்பு - 11.
தொ.பே.: 011 - 233 7734

No. 59-2/7, Sea Street,
Colombo - 11.
Tel: 011 - 233 7734

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

**மும் மொழிகளிலும் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்**



பெண்களுக்கு நவீன காரில்
பயிற்சிகள் வழங்கப்படும்



**இப்பொழுது பருத்தித்துறை**
**1 ஆம் கட்டைச் சந்தியில்**
**021 498 3201, 01722 5292**
**077 722 5292**

அங்கீகராரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# L கிருபா லேணர்ஸ்
# KIRUPA LEARNERS
(GOVT. Approved Driving Traning School)

- குறிக்கப்பட்ட காலப்பகுதியில் விரைவில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ஞாயிற்றுக் கிழமைகளில் மருத்துவச் சான்றிதழ் (மெடிக்கல்) புகைப்படம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- அனுபவம் வாய்ந்த வாகனப் பயிற்சியாளர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்குரிய பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரெயலில் சித்தியடையத் தவறின் தொடர் பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்குச் சிறப்பு வீடியோ பட மூலமான வகுப்புக்கள் நடைபெறும்.




**எமது கிளைகள்:-**
- சாவகச்சேரி:- 021 492 3202, 021 320 1818
- நெல்லியடி:- 021 300 6550, 071 454 6957
- கிளிநொச்சி:- 021 228 5505, 071 454 6955
- சுன்னாகம்:- 021 224 2022, 071 454 6956
- விசுவமடு:- 021 320 1515, 071 454 6955
- மன்னார்:- 077 847 2737
- வவுனியா:- 0759999988

**தலைமைக் காரியாலயம் 226,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
210 22 4353
021 492 3200


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

ANNAI NAGAA FOOD CITY



175, KKS Road,
Jaffna.
0217390191

Branch :
341, Point Pedro Road
Nallur.

email : annainagaa@yahoo.com

இந்து தருமம் நூல் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

SCIENCE WORLD
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து தருமம் நூல் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

காணி விற்பனை முகவர்
**M.G.R**
(ந.தர்மராஜா)



Tel : 0776033259


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

## SUN TRADERS



150, Colombo Street,
Kandy.
Tel : 081 - 2225212

With Best Compliments From:

## VIGNESWARAN STORES



179, Colombo Street,
Kandy.
Tel : 081 - 2223014

With Best Compliments From:

## KRISHNA STORES




163, Colombo Street,
Kandy.
Tel : 081 - 2234204

With Best Compliments From:

## ROOBANS PHONES SHOP AND REPAIRING

UNLOCKING
PHONE SERVICES
AUTHRIZED DEALER FOR
SAMSUNG




No.204A, Parameswara Junction,
Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

# NIRUTHIKA JEWELLERS

பழம்பெரும் புகழுடன் புதுமைப் பொலிவுடன் இயங்கும்
தங்கநகை மாளிகை



177, Kasthuriar Road,
Jaffna.
Tel : 021 - 222 5678

With Best Compliments From:

# CHANDRA STORES

**Importers, Exporters & Wholesale Dealers**

**Authorised Distributors For Prima Ceylon Limited**

207, Colombo Street, Kandy
Tel : 081 - 22234332, 2232756, 2229175
Fax : 081 - 2229174
email : chandraimports@yahoo.com

**Branch:**
60, New Moor Street, Colombo - 12
Tel : 011 - 2448420, 2343959, 2343960
Fax : 011 - 2436108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:


YARLAKAM



568, HOSPITAL ROAD,
JAFFNA
TEL : 021 222 5563

With Best Compliments From:


TITANIC RESTUARANT



Marn Street,
Nelliady.
Tel : 0212262323

With Best Compliments From:

MANTHIKAI
PHARMACY



PULOLY
Tel : 021 2263283

இந்து தருமம்
புகழ் பரப்பி
எம் நெஞ்சமதில்
நீ நிறைந்து
காத்தருள்வாய்
கதிர்வேலவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

# MURUGAN STORES








**36, Colombo Street,**
**Peradeniya**
**Tel : 081 - 2387057, 0772533795**

With Best Compliments From:

# SRI MUTHUMARI STORES



**150, Colombo Street,**
**Kandy**
**Tel : 081 - 2234205**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

RT

# RANJITHA RADERS

IMPORTERS, GENERL MERCHANTS & COMMISSION AGENTS

180, Colombo Street,
Kandy
Tel : 08 - 232350, 229155
Fax : 08 - 229156

81, Fifth Croos Street,
Colombo - 11
Tel : 01 - 438468

With Best Compliments From:

# SRI HARAN HARDWARE

Dealers in Machinery, Water Pumps, Tools, Paints, PVC Pipes, Power Tools and Agents For Asian Paints & Anton Products

Tel : 0094 81 - 2223750, 2232371
Fax : 081 - 2232371

182, Colombo Street,
Kandy
email : kiruba1822@yahoo.com

With Best Compliments From:

# CENTRAL ESSENCE SUPPLIERS

SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS

IMPORTERS & DISTRIBUTERS OF QUALITY ESSENCES, COLOURS & CHEMICALS FOR FOOD CONFECTIONERY & BAKING

Tel : 0094 0812224187
0094 0814933008

76B, Kings Street, Kandy
email : ennssy@hotmail,com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


With Best Compliments From:

# KAJAMUGAN HARDWARE

# கஜமுகன் ஹாட்வெயார்

கட்டடப்பொருள்கள், கம்பி வகைகள், சீமெந்து, PVC பைப் வகைகள், பெயின்ட் வகைகள், Mecson Mesh நெற் வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்



**No.147, 149, Stanley Road,**
**Jaffna.**
**Tel : 021 - 222 2833**



With Best Compliments From:

# கல்யாணி ஸ்டோர்ஸ்




**55, யட்டிநுவர வீதி,**
**கண்டி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

# SHARAN STORES





211/5A, Colombo Street,
Kandy.
Tel : 071 - 4996888

With Best Compliments From:

# SRI MURUGAN'S

**Wholesale & Retail Dealer In Textiles**



நவநாகரீக ஜவுளிகளின்
சாம்ராச்சியம்

94, Colombo Street,
Kandy

Tel : 081 - 222 3399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Eric Ganesh

கண் வைத்திய நிபுணர்களால் சிபாரி செய்யும் கண்ணாடிகளை
சரிவரப் பெற்றுக்கொள்ளவும் நவீனரக
Frame களையும்தரமான Lense களையும்
பெற்றுக்கொள்ள அன்னும் இன்றும் என்றும்
கண்ணாடிகளுக்குப் பெயர்பெற்ற ஒரே ஸ்தானம்



## எரிக்கணேஷ்



## பல்ழுக்குக் கண்ணாடியகம்

Head office:
566, Hospital Road, Jaffna.
021 222 2486

Branch:
91,k.k.s. Road, Kokuvil
107, K.K.S. Road Chunnkam





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியினால் எந்தன் மொழியினால் அழகன் அருளினால்
ஔவைக்களித்த கனியதாய் கனிந்தனன் - பக்திப்
புகழ்பாடப் பூர்த்தி பூமரமா இல்லை- இங்கு
கவிபாடக் காத்திடும் கானகமா இல்லை - தங்கும்
இடம்தனில் தமதருள் தந்து காத்திடும்
தணிகாசலம் அவன் பாதம் பணிந்து -நன்
ஆசி வேண்டி அணிந்தனன் பாமாலை
பார்வதி பாலகனுக்கு என் புகழ்மாலை

தெள்ளுதமிழ் அதை அளித்த நம் அழகன் - முருகன்
வெள்ளை மனத்தை உடையவன் மயிலோன்
மலைமகள் மனதை கவர்ந்த கடம்பன்
எம் குறைதனைக் குறைத்திடும் குமரன் குறிஞ்சிக்குமரன்

கலைமகள் கலைகள் கற்று - கண்டியில்
பட்டம் பெற்று பெரதெனியா பெருமை கூறுதல்
நம்மவர் நிலைகாக்கும் நிமலன் வேலன்
படையாறு கொண்டவன் குமரன் குறிஞுசிக்குமரன்

மலையகத்தில் உறைந்தனன் மனந்தனில் மலர்ந்தனன்
அறிவினை அளித்தனன் அமைதியை விதைத்தனன்
வேல்கொண்டு எமைக்காப்பான் மயில்கொண்டு பார்காப்பான்
காப்பியங்கள் கடைந்திடலாம் காலனை விரட்டிடலாம்
கந்தனை வணங்கிடுவீர் கஷ்டங்கள் குறைத்திடுவீர்
சஷ்டிதனில் நேர்ந்திடுவீர் சண்முகன் சிஷ்டையினை பெற்றிடுவீர்

தேவி Printers, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org